
நன்றி - நூலகத்திட்டம்

සරිනිහර්
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 171 மே 13-மே 26 1999 விலை 10.00



## இந்திய அரசியல் எங்கே போகிறது?

## மடு : விடுவிக்கப்பட்டது யாருக்காக ?



## கொஸோவோவுக்கு இனி நடக்கப் போவது என்ன?





## தலாக்!

நன்றி - நூலகத்திட்டம்



# காத்தான்குடி: ஆஸ்பத்திரியின் அவலம்

கடந்த 26.04.1999 (திங்கட்கிழமை) அன்று கடுமையான காய்ச்சலால் பீடிக்கப்பட்ட எனது மகளை அழைத்துக் கொண்டு காத்தான்குடி அரசினர் வைத்தியசாலைக்குச் சென்றபோது அங்கு நேர்ந்த சகிக்க முடியாத சம்பவமொன்றின் சாராம்சம் இது.

அன்று எனக்கு மகளை வைத்தியரிடம் காட்டுவதற்கான துண்டு கிடைக்கவில்லை. இதற்கு பொறுப்பான பாறூக் என்ற ஊழியரிடம் நான் இது தொடர்பாக வினவிய போது உள்ளே கடமையில் இருக்கும் ஆரிப் ஐயா 125 சிட்டைகளை மாத்திரமே வழங்கும்படி தன்னைப் பணித்ததாகக் கூறினார். இந்நிலையில் என்னைப் போல் ஏழைகளான வயோதிபர்களும், கர்ப்பிணித்தாய்மார்களும், சிறுவர்களும் கடுமையான நோய் நிலையிலும் கூட மிகவும் எதிர்பார்ப்போடு அந்த வைத்தியசாலையின் படிக்கட்டுகளிலே தவம் கிடந்தனர்.

அவ்வேளை சுமார் 10.15 மணியளவில் அன்று பதில் மாவட்ட வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய அலீமா றஹ்மான் அவர்கள் அங்குள்ள நான்கு விடுதிகளையும் பார்வையிட்ட பின்னர் நோயாளிகளின் பக்கம் வருகை தந்தார். அப்போது அங்கிருந்த பதிந்த துண்டு கிடைக்காத நோயாளர்கள் அனைவரும் வரிசையாகி "எங்களைப் பாருங்கள் அம்மா" என்று மிகவும் வினயமாக வேண்டிக் கொண்டார்கள். நானும் அவர்களில் ஒருவனாக நின்று கொண்டேன். அந்நேரம் எனது மகள் கடுமையான காய்ச்சலினால் மயக்க நிலையில் காணப்பட்டார். அப்போது டொக்டர் அலீமா அவர்கள் அங்கே சிட்டைகளை வழங்கும் பாறூக்கை அழைத்து சிட்டைகளை பதிந்து நோயாளிகளுக்கு விநியோகிக்குமாறு பணித்தார். அப்போது அவர் "நான் 125 சிட்டைகளை மட்டுமே பதிவேன். இது ஆரிப் ஐயாவின் ஓடர்" என்று கூறிச் சென்றார். இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம், அன்று டொக்டர் அலீமா அவர்கள் டி.எம்.ஓவாக கடமையாற்றியபோதும் அங்கு சிற்றூழியராக கடமை புரியும் ஒருவர் இவ்வாறு கூறிச்செல்வது அவர் டொக்டர் ஆரிப் அவர்களின் கையாளாகச் செயற்படுவதை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

இருந்தாலும் டொக்டர் அலீமா அவர்கள் நோயாளிகளைப் பார்க்கத் தொடங்கினார். பதியாத சிட்டைகளில் மருந்துகளை எழுதிக் கொடுத்து பாறூக்கிடம் சென்று பதிந்து கொள்ளுமாறு கூறினார். அதற்கும் அவர் மறுத்துவிடவே மீண்டும் டொக்டர் அலீமா அவரை அழைத்து சற்று கடுமையாக பேசினார். உடனே அவ்வூழியர் டொக்டர் ஆரிப்பிடம் சென்று முறையிட்டார். ஆத்திரத்துடன் எழுந்து வந்த அவரை நோக்கி டொக்டர் அலீமா மிகவும் அமைதியாக "சென்ற திங்கட்கிழமை நானும் டி.எம்.ஓவும் சேர்ந்து 400க்கும் மேற்பட்ட நோயாளர்களைப் பார்த்தோம். ஏன் இன்று நாம் இருவரும் இவர்களையெல்லாம் பார்க்க முடியாது" என்றார். அதற்கு அவர் "நான் 10 வருடமாக வேலை செய்கிறேன். நீயோ நேற்று வந்தவள். உன்ட கதையை கேட்க மாட்டேன் என மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளால் அங்கு நின்ற ஊழியர்கள், நோயாளிகள் முன்னிலையில் ஏசிவிட்டு உடனே வைத்தியசாலையை விட்டு வெளியேறினார். இந்த அவமானத்தால் டொக்டர் அலீமா அவ்விடத்திலேயே எவ்விதப் பதிலும் கூறாமல் அழுது விட்டார். அதனைத் தொடர்ந்து அங்கிருந்த நோயாளிகளை அவரே பார்க்கத் தொடங்கினார். நானும் எனது மகளை அவரிடம் காட்டிவிட்டு சில நிமிடங்கள் அவரோடு உரையாடினேன். அப்போது "தம்பி, இதே போன்று இதற்கு முன்னர் இரு தடவைகள் நோயாளிகள் முன்பாக என்னை அவமானப் படுத்தியுள்ளார். அவ்வேளை உரத்த குரலில் சண்டித்தனம் காட்டுகிறார் என்றார். இந்த நிகழ்வுகளின் பின்னணியை நோக்கும்போது சில உண்மைகள் தெளிவாகின்றன.

காத்தான்குடி மாவட்ட வைத்தியசாலையிலே தற்போது மூன்று வைத்தியர்கள் கடமையில் இருக்கிறார்கள். இவர்களுள் டொக்டர் றஹ்மான், டொக்டர் அலீமா றஹ்மான், இருவரும் தம்பதிகளாக இங்குள்ள விடுதியிலே தங்கி சேவையாற்றி வருகின்றனர். டொக்டர் றஹ்மான் டி.எம்.ஓவாக கடமையாற்றுகின்றார். இவர் சுகயீன லீவில் நின்ற தினமே மேற்படி சம்பவம் இடம் பெற்றது. இங்கே கடமையாற்றும் மற்றவர் டொக்டர் ஆரிப் (ஏ.எம்.பி.) இவரைப் பற்றி பல முறைப்பாடுகளை பொது மக்கள் தெரிவிக் கின்றனர். எம்பிபிஎஸ் தரத்தில் இல்லாத இவர் தனது சக்திக்கும் தரத்திற்கும் அப்பால் சென்று சில மருத்துவ நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் பொதுமக்களின் எதிர்ப்புக்கும் காரசாரமான விமர்சனத்திற்கும் உட்பட்டுள்ளார். இவரது தகுதிக்கு தனியாக "கிளினிக்" நடாத்துவதற்கு அரச அனுமதி கிடையாது. இருந்தும் இவர் பிள்ளைப்பேறு வார்டுகளை நடாத்தும் அளவுக்கு முன்னேறி பல மரணச் சம்பவங்கள் இடம்பெற்றதன் பின்னர் தனது தொழிலில் பாரிய ஆட்டம் கண்டவர்.

இவர் வைத்தியசாலைக்கு காலையிலே குறித்த 8.00 மணிக்கு சமூகமளிப்பதில்லை. ஒன்பது பத்து மணிவரை நோயாளிகள் அவஸ்தைகளுடன் அரசினர் வைத்தியசாலையிலே காத்துக் கிடக்கின்றார்கள். அப்படி அவர் சமூகமளித்தாலும் தனது கையாளாகச் செயற்படுபவரை வைத்து குறிப்பிட்ட நோயாளிகளை பார்த்துவிட்டு தனது தனியார் நிலையத்தினை நோக்கி பறந்து விடுகின்றார். "நான் 10 வருடமாக இங்கே இருகிறேன். என்னைத் தட்டிக் கேட்க முடியாது" என்ற போக்கிலே செயற்படுகின்றார். இங்குள்ள இரண்டு எம்பிபிஎஸ் வைத்தியர்களையும் அவமானப் படுத்தியதால் அவர்கள் உடனடியாக விடுதியைவிட்டு வெளியேறிவிட்டார்கள். இதனிடையே நோயாளர்கள் மிகக்கடுமையான கஸ்டநிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். தற்போது டொக்டர் சியாட் எம்பிபிஎஸ் என்பவரிடம் தற்காலிகமாக வைத்தியசாலை ஒப்படைக்கப்பட்டுள்ளது. விசாரணைகள் தொடர்கின்றன. அவஸ்தைப்படும் ஏழைமக்களுக்கு ஆரிப் ஐயா என்ன பதில் சொல்லப் போகிறார்?

– மீரா

# கஞ்சிக்குப் பயறு போட்ட கதை

கடந்த 8.5.99 அன்று யாழ் செயலகத்தில் ஜேர்மனி, கனடா, ரஷ்யா, நெதர்லாந்து உட்பட ஆறு நாடுகளுக்கான இலங்கைத் தூதுவர்கள் கலந்து கொண்ட கூட்டமொன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள திணைக்களத் தலைவர்களும் கலந்து கொண்டு யாழ்ப்பாணத்தின் தேவைகள் பற்றி எடுத்துக் கூறினர்.
யாழ்ப்பாண அரசாங்க அதிபர் குடாநாட்டிற்கான போக்குவரத்து தடைப்பட்டிருப்பது பற்றிக் கூறினார். யாழ் போதனா வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் 32 மருத்துவ நிபுணர்கள் தேவையான இடத்தில் 8 பேர் மட்டுமே கடமையாற்றுவதாகவும் எக்ஸ் கதிர் நிபுணர், முறிவு தறிவு சத்திர சிகிச்சை நிபுணர் போன்றோர் இல்லையெனவும் மருந்துகள் உரிய நேரத்தில் தமக்குக் கிடைப்பதில்லையெனவும் இதனால் நோயாளர்கள் பெரும் சிரமப்படுவதாகவும் சில மருந்துகளைத் தனியார் மருந்துக்கடைகளிலும் பெற்றுக் கொள்ள முடியாமலிருப்பதாகவும் கூறினார். யாழ் மாநகர ஆணையாளர் யாழ் நகர வீதிகள் படுமோசமான நிலையிலிருப்பதாகவும் கூறினார்.
இறுதியாக அரச சார்பற்ற நிறுவனங்களின் துணைச் செயலாளரான பரமநாதன் எழுந்து நாங்கள் கொழும்பிலிருந்து பனடோல் எடுத்து வருவதனாலும் இராணுவத்தினரின் அனுமதி பெற்றுத்தான் எடுத்து வரவேண்டியுள்ளது. இந்தக் கெடுபிடிகள் நீங்க வேண்டும் என்றார்.
அதுசரி யாழ்ப்பாணத்தில் எல்லாம் ஒழுங்காக நடைபெறுகிறது என்று பிரச்சாரம் செய்து வரும் அரசாங்கம் எதற்காகத் திடீரென யாழ்ப்பாணத்தின் குறைபாடுகறை அதுவும் தனது வெளிநாட்டு இராஜதந்திரிகளை அனுப்பித் தெரிந்து கொள்ள விரும்புகிறது என்று கேட்கறீர்கள். அது கூடத் தெரியாவிட்டால் உங்களை என்ன் செய்வது. அடுத்த மாதம் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறப் போகிறதல்லவா, அதற்கு முன் யாழ்ப்பாணந்தின் இன்ன இன்ன விடயங்கள் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளன.. இவை பூர்த்தி செய்யப்படுவதற்கு நிதி தேவை. யாழ்ப்பாணத்தை அபிவிருத்தி செய்யப்போகிறோம் என தனது இராஜதந்திரிகள் (இவர்களில் சிலர் தமிழர்கள்) மூலம் சொன்னால் மேற்கு நாடுகள் மறுக்கவா போகின்றன. இதுவரை யாழ்ப்பாண அபிவிருத்திக்கென வாங்கிய நன்கொடைகள் எல்லாம் எங்கே என்று கேட்கிறீர்களா, கஞ்சிக்கு பயறு போட்ட மாதிரி அரசாங்கம் பெற்ற நிதியில் யாழ்ப்பாணத்திற்கும் ஒதுக்கிகீடு செய்ததும் அதைக்கூட யாழ்ப்பாணத்தில் செலவழிக்காமல் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் திருப்பியனுப்பி அம்மாவிடம் நல்ல பிள்ளைப்பெயர் எடுப்பதும் தெரியாதா உங்களுக்கு?

எழுவான்

# அரசகரும மொழிக்கும் பஞ்சம்!

கொழும்பு வலயக் கல்விக் காரியாலயம் 12. 05. 1999 அன்று சுகததாச விளையாட்டரங்கில் நடாத்திய இந்த வருடத்துக்கான விளையாட்டு விழாவின் பிரதம அதிதியாக மேல் மாகாண முதலமைச்சர் ஏ. டீ. சுசில் பிரேமஜயந்த் கலந்து கொண்டார். இந்த விளையாட்டு விழாவில் கொழும்பு வலயத்திற்கு




உட்பட்ட பல தமிழ் மொழி மூலமான தமிழ், முஸ்லீம் பாடசாலைகளும கலந்துகொண்ட போதும், அந்த பாடசாலைகளுக்குக் கூட அனுப்பி வைக்கப்பட்டுள்ள அழைப்பிதழ்களில் மருந்துக்குக் கூட அரச கரும மொழிகளுள் ஒன்றான தமிழைக் காண முடியவில்லை. இணைப்பு மொழியான ஆங்கிலத்திற்கும் கூட இதே நிலைமைதான். இலங்கையின் அரச கரும மொழியாகச் சிங்களத்தைப் போலவே தமிழுக்கும் சட்டத்தில் சம அந்தஸ்து வழங்கப்பட்டு உள்ளது என இலங்கை அரசியல் அமைப்புக் கூறுகின்ற போதும், வழக்கம் போல, தமிழ் மொழியில் ஒரு சொல் கூட இலலை. இதற்கும் ஜனாதிபதியோ அன்றி வேறு அரசாங்கத் தலைவர்களோ கூறக் கூடும் தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் எவரும் கிடைக்கவில்லை என்று. தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் நியமிக்கப்பட்டாலல்லவா கடைப்பதற்கு. பானையிலிருந்தாலல்லவா அகப்பையில் வரும்?

# நெருக்கடிக்குப்பரிசு

'எடிட்ரேஸ் கில்ட்' என்ற அமைப்பு 04. 05. 1999 அன்று தொடர்பு சாதனவியளார்களுக்கான விருது வழங்கும் வைபவம் ஒன்றை ட்ரான்ஸ் ஏசியா ஹொட்டேலில் நடாத்தியது.
யாழ். உதயன் பத்திரிகைக்கு நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் இருந்து பத்திரிகையைக் கொண்டு வந்தமைக்கான 'சேபால குணசேன சிறப்பு விருது' வழங்கப்பட்டது. இந்த விருதினைப் பத்திரிகையின் சார்பில் அதன் இயக்குனர்களில் ஒருவர் பெற்றுக் கொண்டார். உதயனுக்கு இந்த விருது கிடைத்ததற்காக அதனைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால் அண்மையில் இந்தப் பத்திரிகையின் பிராந்தியச் செய்தியாளர் ஒருவர் இராணுவத்தினரால் மிரட்டப்பட்டது தொடர்பாகப் பரிசு வாங்க வந்த இயக்குனரிடம் விசாரித்த போது கிடைத்த பதில் தான் அதிர்ச்சி அளிப்பதாக இருந்தது.
"அப்படியா? அப்படி ஒன்று நடந்ததா? "
நெருக்கடிகளுக்கு மத்தியில் பத்திரிகை நடாத்துவதற்கு, நெருக்கடிகளுக்கு மத்தியில் செய்தி சேகரிப்பில் ஈடுபடுவது முக்கியமில்லையோ?

# மீண்டும்...

முதலில் அவர் வந்த போது பரபரப்பான பேச்சு அடிபட்டது.
பத்திரிகைகள் தலைப்புச் செய்திகளில், கொட்டை எழுத்துக்களில் அவர் வருகை பற்றி எழுதின. அவரைப் பேட்டி காண்பதற்காக எல்லாத் தொடர்பு சாதனத் துறையினரும் பகீரத முயற்சி எடுத்தனர். எடுத்த முயற்சிகள் எல்லாம் பயனற்றுப் போக அவர் 'தனது கட்சி'யைப் புனருத்தாரணம் செய்யப் போவதாக அறிவித்தார்.
அவர் தான் முன்னாள் வட - கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் என்பது வாசகர்களுக்கு விளங்கியிருக்கும்.
அவரைத் தாம் பேட்டி கண்டதாகக் கூறி லேக் ஹவுஸ்(ஏரிக் கரைப்) பத்திரிகைகளில் முன்பக்க விளம்பரங்களைக் கொடுத்துத் தனது வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ள முயன்றது அமுது சஞ்சிகை. (ஆனாலும் அமைச்சர் ஜி.எல். பீரிசால் வடக்குக் கிழக்குத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண ஆங்காங்கே நடாத்தப்படும் "அதே இடத்தில் சேவை"நிகழ்ச்சிகளில் இலவசமாகக் கிடைக்கிறது!) பலராலும் எதிர்பார்க்கப்பட்ட ஒருவரது பேட்டியைப் போடுவதாகக் கூறிப் பத்திரிகா தர்மத்தை வியாபாரத்தனமாக்கும் கேலிக்கூத்தைச் செய்த இந்தச் சஞ்சிகை தான் சார்ந்துள்ள லேக் ஹவுஸ் தனத்தையும் மிஞ்சித் தான் ஒரு மூன்றாந்தரக் கிசு கிசுப் பத்திரிகையே தான் என்று நிரூபித்தது.
ஆனால் இதற்கெல்லாம் காரணமான பெருமாள் சொல்லாமல் கொள்ளாமல் இந்தியாவிற்குத் திரும்பினார்.
அத்துடன் பத்திரிகைகளின் பரபரப்பு ஓய்ந்தது.
ஆனால் அவர் திரும்பவும் இரகசியமாக இங்கு வந்து தமது "பணிகளில்" ஈடுபட்டிருப்பதாக இப்போது தகவல்கள் தெரிவிக்கின்றன.
வாழ்க அவர் பணி!
இலங்கை இராணுவத்தில் தமிழ்ப் பிரிவு ஒன்றினைத் தொடக்கினால் இரண்டாவது ஈழப் பிரகடனம் ஒன்றைச் செய்ய முடியும். அதுவும் தமிழ் இளைஞர்களைப் படையில் சேர்க்க அரசு துடித்துக் கொண்டிருக்கிற போது இது ஒரு நல்ல வாய்ப்பு என்ற ஒரு ஓசி ஆலோசனையை அவருக்கு சொல்லி வைக்க வாய்துடிக்கிறது. ஒரு சின்னச் சந்தேகம், ஒரு வேளை பெருமாள் சொல்லித் தான் அரசாங்கம் தமிழ் இளைஞர்களைப் படையில் சேர்க்க யோசித்ததோ என்னவோ?

# அழாப்பல்

ஈ - மெயில் குண்டுகளால் தாக்கும் புலிகளின் புதிய தாக்குதல் முயற்சிகள் பற்றி ஆழ்ந்த 'அக்கறையும்', 'கவலையும்' தெரிவித்து ஐ.நா. குழுக் கூட்டம் ஒன்றில் இலங்கைப் பிரதிநிதியான தர்ஷன பெரேரா பேசியிருப்பதாக ஏரிக்கரைப் பத்திரிகையான தினகரன் செய்தி வெளியிட்டிருந்ததை வாசகர்கள் கவனித்திருக்கக் கூடும்.
தொலைத் தொடர்புத் தொழில் நுட்பத்தைப் புலிகள் துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்பது அவரது கவலைக்கான காரணம். ஆனால் தொழில் நுட்பத்தைத் துஷ்பிரயோகம் செய்வதில் முன் நின்று தொழிற்படும் ஒரு லேக்ஹவுஸ் பத்திரிகைக்கு அந்தக் கவலை ஒரு முக்கிய செய்தியாகப் போனதை நினைத்து வியப்படையாமல் இருக்க முடியவில்லை.
வடக்கிலும், கிழக்கிலும் அரச படைகள் நடாத்தும் குண்டுத் தாக்குதல்களுக்குச் சற்றும் குறைவில்லாத விதத்தில் ஜனாதிபதியும், அவரது சகாக்களும் ஒவ்வொரு மேடையிலும் (அது அரசியல் பிரசார மேடையாயினும் சரி, உத்தியோகபூர்வ மேடையாகிலும் சரி) இருந்து வீசும் குண்டுகளை விட்டு விடுவோம். இலங்கை அரசாங்கம் இன்ரநெற்றில் திறந்திருக்கும் news.lk என்ற வெப்பின் ஊடாக வீசப்படும் குண்டுகளில் செய்யப்படும் துஷ்பிரயோகங்களை எப்படி மறக்க முடியும். வாசகர்கள் யாருக்காவது வசதியிருந்தால் ஒரு முறை திறந்து பார்த்து, அந்தக் குண்டுகளின் 'நியாயத்தன்மையைப்' புரிந்து கொள்ளலாம்.
இதைத் தவிர இனவாதிகளால் நடாத்தப்படும் சிங்ஹயா(sinhaya.com), ஸ்பேர் (spur.com), காலய(kalaya.com) போன்ற வெப்த் தளங்களில் வரும் குண்டுகள் தர்ஷன பெரேராவுக்குத் தெரியாமல் இருக்க நியாயமில்லை.
ஆனால் இவையெல்லாம் தமிழ் மக்களுக்கு எதிராகவும், இனவாதத்தைக் கக்கியும் பேசி வருபவை. ஆனால் புலிகளின் தளங்களோ இலங்கை அரசாங்கத்தை விமர்சிப்பவை. இது தான் தர்ஷன பெரேராவிற்கு உள்ள ஒரே பிரச்சினை.
புலிகளைப் பிரச்சாரப் போரில் வெல்ல முடியாவிட்டால் துஷ்பிரயோகம் அது, இது என்று ஒப்பாரி வைத்துக் கத்த வேண்டுமா என்ன?
பேசாமல் இன்னும் இரண்டு மூன்று வெப் தளங்களை உருவாக்கிப் புலிகளுக்குப் போட்டியாகச் செயற்பட வேண்டியது தானே?
'நாங்கள் ஐ.தே.க. போலத் தொடர்பு சாதனவியளாளர்களை 'டம்' பண்ண மாட்டோம். பதிலாக அவர்களது பாணியிலேயே அவர்களை எதிர்ப்போம்' என்று சந்திரிகா அம்மையார் சொன்னது தர்ஷன பெரேராவிற்கு மறந்து விட்டது போலும்.
ஒரு வேளை அம்மையாரே அதை மறந்து விட்ட போது நான் மட்டும் ஏன் நினைவில் வைத்திருப்பான் என்று யோசித்தாரோ என்னவோ?

நன்றி - நூலகத்திட்டம்



## திருமலை :

# பாடசாலையில் பாலியல் 'கல்வி' மாட்டிக் கொண்டனர் ஆசிரியர் மூவர்!

பாடசாலைகளில் பாலியற் கல்வியைப் புகுத்தலாமா வேண்டாமா என்று அறிஞர்கள் ஒரு பக்கம் விவாதித்துக் கொண்டிருக்க இன்னொரு பக்கம் பாடசாலை மாணவிகளிடம் பாலியலை நடைமுறைப்படுத்தப் போய் வகையாக மாட்டிக் கொண்டு திரு திரு வென முழிக்கிறார்கள் திருகோணமலைக் கல்வி வலயப் பாடசாலையொன்றின் ஆசிரியர்கள் மூவர்.

இந்தப் பாடசாலை நகரிலிருந்து வடக்கு நோக்கியுள்ள தமிழ்க்கிராமமொன்றில் அமைந்துள்ளது. பெற்றோரின் ஏழ்மை யையும், அறியாமையையும் மாணவியரின் அப்பாவித்தனத்தையும் இவர்கள் வெகு நேர்த்தியாகத் தங்களுக்குச் சாதகமாக்கியிருக்கிறார்கள்.

இவர்கள் சிக்கிக் கொள்ளக் காரணமாக அமைந்த சம்பவம் சுமார் ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் நடந்திருக்கிறது. பன்னிரண்டு வயதுச் சிறுமியொருத்தியை ஆசிரியர் ஒருவர் மலசலகூடத்துக்குள் அழைத்துச்சென்றதைச் சில மாணவர்கள் கண்டிருக்கிறார்கள். பாடசாலை வேளையில் நடந்த இந்தச் சம்பவத்தை உடனடியாக அம் மாணவர்கள் வேறொரு ஆசிரியரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த ஆசிரியரோ "உங்கள் வேலையைப் பார்த்துப் போங்கள்: யாரிடமாவது இதைப்பற்றிச் சொன்னால் சேட்டிபிக்கட்டைக் கையில் தந்து வீட்டுக்கு அனுப்பி விடுவேன்" என்று பயமுறுத்தியதோடு, மலசலகூடம் வரை சென்று கதவைத்தட்டி உள்ளே மாணவியோடு சென்றிருப்பவர் குறிப்பிட்ட ஆசிரியர் தானா என்பதை நட்புடன் உறுதிப்படுத்தி விட்டுப் பேசாமல் சென்றிருக்கிறார்.

இந்த விடயங்கள் நன்கு தெரிந்திருந்தும் அதிபரோ "அது சின்ன விசயம். பெரிதுபடுத்த வேண்டியதில்லை" என்று அமைதியாக இருந்து விட்டார். பாதிக்கப்பட்ட மாணவிக்குப் பாலியல் போதகரான அந்த ஆசிரியர் நூறு ரூபாவைக் கொடுத்து "சொல்லாதே யாரும் கேட்டால் எல்லோரும் தாங்கமாட்டார்..." என்று தேற்றியனுப்பியிருக்கிறார்.

அந்த மாணவி சிறுவர் இல்லமொன்றிலிருந்து பாடசாலைக்கு வருபவர். மாணவியின் எதிர்கால நலன் காரண மாகவோ, நிர்வாகத்தின் இயலா நிலை காரண்மாகவோ இச்சம்பவம் அலட்டிக் கொள்ளப்படாமல் அமுக்கப்பட்டு விட்டது. எனினும் இல்லத்தைச் சேர்ந்தவர்கள் தங்களோடு நெருங்கிய தொடர்புள்ள கல்வித் திணைக்கள உயரதிகாரிக்கு இவ்விடயம் பற்றித் தெரியப் படுத்தி இருந்தார்கள். அந்த அதிகாரி கூட அநியாயத்துக்கெதிராகச் செயல்பட விரும்பாமல் அமைதி காத்திருக்கிறார்.

எப்படியோ விசயம் வெளியே வர ஊர் மக்கள் கொதித்துப்போய் மே 3ம்திகதி பாடசாலையைச் சுற்றி வளைத்து ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். அதிபரும் இரண்டு ஆசிரியர்களும் உடனடியாகப் பாடசாலையை விட்டு அகற்றப்பட்டாலன்றி பாடசாலையை திறக்க விடமாட்டோம் என்று தடுத்தி ருக்கிறார்கள்.

அதிபரையும் 'பாலியற் சிகாமணி' ஆசிரியரையும் சுற்றி வளைத்த ஊர் மக்கள் மற்ற ஆசிரியரை வெங்காயக் குவியலுக்குள் கைகூப்பிய நிலையில் ஒளிந்திருக்கக் கண்டுபிடித்து இழுத்து மூவரையும் ஒன்றாகச் சேர்த்து விசாரித்த போது "நான் மட்டுமா அவரும் தான்". என்ற பாணியில் ஒருவரையொருவர் காட்டிக் கொடுக்கத் தொடங்கிப்பல விடயங்களைக் கக்கி விட்டார்கள். பாலியற் சிகாமணி தனது குற்றத்தைக் கைப்பட எழுதிக் கொடுக்க முதலாவது சாட்சியாக உதவிய ஆசிரியர் கையெழுத்திட அதைத் தொடர்ந்து ஊர் மக்களும் கையெழுத்திட்ட அக்கடிதம் நிர்வா கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள் ளது.

இந்தப்பாடசாலையில் வலயக் கல்விப் பணிப்பாளரின் மகளும், குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்பட்டுள்ள அதிபரின் மகளும் ஆசிரியைகளாக இருக்கிறார்கள் என்பது சிறப்பான விடயம். பாலியற்போதகரான ஆசிரியருக்கு இந்த மாணவியின் வயதில் மகள் இருக்கிறாள். உதவிய ஆசிரியருக்கு வளர்ந்த பிள்ளைகள் இருக்கிறார்கள்.

ஊர் இளைஞர்களிடமிருந்து பல திடுக்கிடும் விடயங்கள் வெளியாகியுள்ளன. இதற்கு முன்னரும் பல சம்பவங்கள் இப் பாடசாலையில் நடைபெற்று மூடி மறைக்கப்பட்டதாக அவர்கள் கூறுகி றார்கள். ஒரு தடவை இல்ல விளையாட்டுப் போட்டிக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கையில் ஆசிரியர் கோஷ்டி வகுப்பறையில் வைத்து சாராயம் அருந்திக் கொண்டிருந்தார்களாம். இதை அறிந்த இளைஞர்கள் பாடசாலைக்குள் சென்று சாராயப் போத்தல்களைக் கைப்பற்றி உடைத்திருக்கிறார்கள். "வெளியே சொல்லாதீர்கள்" என்று அதிபர் இரந்து கேட்டதால் விஷயம் இளைஞர்களால் கைவிடப் பட்டிருக்கிறது.

சுற்றுலா ஒன்றின் போது கொழும்புப் பாடசால்லை ஒன்றில் தங்கியிருந்த வேளை ஒரு மாணவியை நைசாகத் தட்டிக் கொண்டு இந்த பாலியற்போதகர் செல்ல ம்ற்பட்ட வேளை அந்தப்பாடசாலை அதிபராக பணியாற்றிக்கொண்டிருந்த திருகோண மலையைச் சேர்ந்த ஒருவரால் அவர் கடுமையாக எச்சரிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் ஒரு காலத்தில் நகரின் பிரபல கல்லூரியொன்றில் பியோனாக வேலை பார்த்தவர். அப்போது அதிபரது யையெழுத்தைப்போல தானே போலிக் கையெழுத்திட்டு ஒருவருக்குக் கல்விச் சான்றிதழ் வழங்கியபோது பிடிபட்டு, பரிதாபம் பார்த்த அதிகாரிகளால் எச்சரித்து மன்னிக்கப்பட்டவர். நகரத்தின் பிறிதோர் ஆண்கள் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியவேளையில் மாணவன் ஒருவனுக்குப் பாலியல் போதனை செய்யப் போய் மாணவர்களாலேயே எச்சரிக்கப்பட்டவர்.

இவருக்கு உதவியாக நின்றவரோ வயதான ஒரு பட்டதாரி ஆசிரியர். அந்தக் கிராமத்தையே பிறப்பிடமாகக் கொண்டவர். சொகுசு கருதி நகரில் இருந்து கொண்டு இந்தக் கிராமத்தில் வெங்காயச் செய்கையைப் பிரதான தொழிலாகக் கொண்டு அதற்குத் துணையாகவே இப் பாடசாலையில் படிப்பிக்க முடிவெடுத்தவர். பெரிய மனுசன் போர்வையில் இவர் பண்ணிய காரியமொன்றுக்காகப் பத்து வருடங்களுக்கு மேலாக 'படிகட்டி' வருவதாக ஊர் மக்கள் கூறுகிறார்கள். இவர் ஒரு மாணவியின் உடலை வருடியதைப் பார்த்த பல மாணவர்கள் இப்போது சாட்சி சொல்லத் தயாராக இருக்கிறார்கள்.

அதிபரும் தனது ஏதோ பலவீனமொன்றை மறைப்பதற்காக இவர்களது பலவீனத்துக்குப் பாதுகாப்பாக இருந்திருக் கிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு இலக்காகியுள்ளார்.

ஊர் மக்களின் அபிப்பிராயப்படி,

- இங்குள்ள ஆசிரியர்களுக்கு வெங்காயச் செய்கையே பிரதான தொழில், படிப்பித்தல் உப தொழில்
- வசதியான பெற்றோர்கள் நகரத்தில் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைப்ப தால் இந்தப்பாடசாலை பற்றிக் கவலைப் படுவதில்லை. படிக்கும் பிள்ளைகளின் வசதியும், அறிவுத் தரமும் குறைந்த பெற்றோருக்கு பாடசாலையில் அக்கறை கொள்வது தேவையானதாகப்படவில்லை. இந்தப் பலவீனத்தில் நிர்வாகம் பயன டைந்திருக்கிறது.
- பிள்ளைகளின் அப்பாவித்தனமும் குரு பக்தியும் பிழையான வழியில் இவர்களால் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.
- யாராவது இந்த விடயம் பற்றி விசாரிக்கச் சென்றால் "இது என்ன சேர், எவ்வளவு காலமாக நடக்குது.." என்று ராகம் பாடும் ஆசிரியர்களும் (இவர்களுள் ஆசிரியைகளும் அடக்கம்) தெரிந்தும் உண்மைகளை மறைத்துள்ளார்கள்.

இவற்றைக் கருத்திற் கொண்டு பார்த்தால் குற்றவாளிகளாகக் காணப் படுவோர் தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டும் என்பதும் ஏனைய சகல ஆசிரியர்களும் இடமாற்றத்துக்குள்ளாக்கப பட்டு நிர்வாகம் முற்றாகச் சீர்படுத்தப்படவேண்டுமென்பதும் முடிவாகிறது. முடிவு கல்வித்துறை நிர்வாகிகள் கையில்!

- விவேகி

## காத்தான்குடி:

# ரெலோ அன்வர் படுகொலையும் பிறகும்...!

பட்டப்பகலில் அதுவும் சன நடமாட்டம் மிகுந்த வேளைகளில் பகிரங்கமான நகரின் மத்திய பகுதிகளில் எந்த விதமானதொரு பதட்டமோ அலட்டலோ இல்லாமல் தனிநபர்கள் சுட்டுக் கொல்லப் படுவதொன்றும் காத்தான்குடியைப் பொறுத்தவரையில் ஆச்சரியத்திற்குரிய விடயமல்ல. நஸீக், றஸாக், ஹயாத்து என்று தமிழ் ஆயுதக்குழுக்களுடன் இணைந்து முஸ்லிம்களுக்கெதிராகச் செயற்பட்ட பல முஸ்லிம் நபர்கள் இவ்வாறு நடுவீதியில் சுட்டுக் கொலை செய்யப்பட்டு வந்திருக்கின்றமை ஒரு நீண்ட வரலாறு.

கடந்த 21.04.99 அன்று காத்தான் குடி பிரதான வீதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட அன்வர் எனப்படும் ரெலோ இயக்கப் பிரமுகரும் மேற்சொன்னபட்டியலில் அடங்குகின்ற ஒருவர் தான். காத்தான்குடியை அண்மித்ததாகவுள்ள காங்கேயனோடை கிராமத்தைச் சேர்ந்த இவர் ரெலோ இயக் கத்தின் நீண்டகால உறுப்பினர். ஒரு தமிழ்ப்பெண்ணை மண முடித்து தமிழ்க் கிராமமான செல்வநகரில் வாழ்ந்து வந்தவர். மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்துடன் இணைந்து இயங்கி வரும் ரெலோ அமைப்பின் செயற் பாடுகளில் முக்கிய பாத்திரத்தை வகித்தவர்.

காத்தான்குடி போன்ற முஸ்லிம் ஊர்களில் இராணுவத்தினரின் சட்டபூர்வமற்ற செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வது, கப்பம், வாங்குவது, ரெலோ இயக்கத்தின் சமூக சேவை (?) நடவடிக்கைகளை இப்பகுதிகளில் ஒருங்கமைப்பது போன்ற விடங்களில் அன்வர் பிரதானமாக இருந்து வந்தவர். இத்தகைய சிறப்பான(?) செயற்பாடுகள் காரணமாக இப்பிரதேச மக்களின் மிகுந்த வெறுப்புக்கும் சாபத்துக்கும் இவர் ஆளாகி இருந்தார். ஒருவர் மாறி ஒருவராக இப்பிரதேச மக்களின் சாதாரண வாழ்க்கைக்குச் சவாலாக இருந்து வரும் அன்வர் போன்றவர்களின் தொடர்ச்சி யான இம்சைகளுக்கு ஒரு முடிவே வராதா எனப் பலரும் அங்கலாய்த்திருந்தனர். அன்வர் கொல்லப்பட்ட பின்னர் மக்கள் விட்ட நிம்மதிப் பெருமூச்சும் இராணுவத்தினரால் நடத்தப் பட்ட அடாவடித் தனங்களும் அன்வர் யார்? அவர் என்ன செய்து கொண்டிருந்தார் என்பன போன்ற கேள்விகளுக்கு திருப்திகரமான பதில்களை வழங்கப் போதுமானவை களாக இருந்தன.

அன்வர் காத்தான்குடிப் பகுதியில் அச்சமின்றி நடமாடித் திரிந்துள்ளாரென்பதையும், இவரது நடமாட் டங்கள் புலிகளின் பிஸ்டல் குழுவினரால் மிக நீண்ட நாட்களாகவே கவனிக்கப்பட்டுவந்திருக்கின்றதென்பதையும் அன்வர் வழக்கமாக சாமான்கள் வாங்க வந்து போகும் ஒரு இடத்தை சுட்டுக் கொல்வதற்கான இடமாக மிகப் பொருத்தமாகத் தெரிவு செய்ததன் மூலம் புலிகள் மிகக் கச்சிதமாகக் காரியத்தை முடித்து விட்டு தப்பிச் செல்ல முடிந்திருக்கிறதென்பதையும் பொது மக்களூடாகக் கசிந்த தகவல்கள் மூலம் அறிய முடிந்தது.

அன்வர் கொல்லப்பட்டு இரு வாரங்களுக்குள்ளாகவே நாவற்குடாவில் வைத்து முன்னாள் ஊர்காவற் படைவீரரும், பொலிசாருடன் இணைந்து செயற்பட்டு வந்தவருமான 'தேர காசிம்' என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அன்வர் போன்றோர் கொல்லப் படுவதென்பது வடகிழக்கைப் பொறுத்தமட்டில் சர்வசாதாரண மான ஒரு விடயமேயாயினும் அதன் பின்னர் நிகழ்ந்த சில சம்பவங்களும் உணர்வலை களும் பல்வேறுபட்ட கேள்விகளை நம்முன் எழுப்பி நிற்கின்றன.

அன்வர் கொல்லப்பட்டு அரை மணி த்தியாலயங்களுக்குள்ளாகவே கொல்லப் பட்ட இடத்திற்கு முன்னால் அமைந்திருந்த கடையின் உரிமையாளரும் அவரது இரு மகன்மாரும் காத்தான்குடிப் பொலி சாரினால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு தகவல்கள் பெறப் பட்டுள்ளனர். அதன்பின் அன்வர் கொல்லப்பட்டு 7ம் நாள்வரை இவர்கள் பொலிசாரினாலும், இராணுவத்தினராலும் பலமுறை திரும்பத் திரும்ப அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக் கப்பட்டுள்ளனர். ரெலோவினரைக் கண்டால் புலிகள் கொல்வதும் புலிகளைக் கண்டால் ரெலோவினர் கொல்ல முயல்வதும் இயல்பான விடயங்களாகவிருக்க பொலி சாரினதும், இராணுவத்தினரினதும் விசாரணைகள் புதுமையானவைகளாக இருந்ததாக அறிய முடிகிறது.

காத்தான்குடிப் பிரதேசத்து வர்த்தகர்களுக்கும், செல்வந்தர்களுக்கும் அன்வர் பிரச்சினையானவராக இருந்ததால் அவரைத் தீர்த்துக்கட்ட காத்தான்குடிப் பிரமுகர்கள் சிலர் புலிகளுக்கு பணம் கொடுத்ததாகவும் மேற்குறித்த கடைக்காரரும் அதில் ஒருவரென்றும் அன்வர் காத்தான்குடிக்குள் வந்து போகுமிடங்கள், புழங்குகின்ற நேரங்கள் போன்ற தகவல்களை இவரே புலிகளுக்கு வழங்கியதோடு மட்டுமல்லாமல் அன்வரைக் கொல்வதற்கான பொருத்தமான இடமாகத் தனது கடையின் முன்னாலுள்ள பகுதியை ஏற்பாடு செய்து கொடுத்தாரென்றும் கொல்ல வந்த துப்பாக்கி நபரை குறித்த கடைக்காரருக்கு நன்கு தெரியுமென்றும் கொலையாளியை அடையாளம் காட்டித் தரவேண்டு மென்றும் இராணுவத்தினர் எச்சரித் துள்ளனர். இத்தகைய விசாரிப்புக்களின் நோக்கம் குறித்த கடைக்காரரிடமிருந்து பணம் கறப்பதாக அல்லது இவருக்கு வேண்டாத சிலரின் தூண்டுதல்களாக இருக்கலாமெனப் பலவகையான கதைகள் அடிபடுகின்றன.

அன்வர் கொல்லப்பட்டு 7ம் நாளிரவு 7.30 மணியளவில் நிகழ்ந்த ஒரு சம்பவம் இவையாவற்றிற்கும் சிகரம் வைப்பது போல் அமைந்து விட்டது. குறிப்பிட்ட தினத்தன்று இராணுவ வாகனத்தில் வந்த சீருடையணிந்த நான்கு இராணுவத்தினரில் மூவர் வெளியே காவலுக்கு நிற்க ஒருவர் குறித்த கடைக்குள் நுழைந்து கடைக் காரரையும் அவரது மகனையும் மிகக் கடுமையாக அடித்துத் தாக்கியுள்ளார். கொலையாளியைக் காட்டித் தரவேண்டு மென்றும் கொலையாளியை இவர்களே ஏற்பாடு செய்து கொடுத்தவர்களென்றும் கூறிக்கூறி வெளியில் நின்ற மற்றொரு இராணுவவீரர் வந்து தடுத்து நிறுத்தும் வரை மிக மூர்க்கமாக இருவரையும் மேற்படி இராணுவவீரர் தாக்கிக் காயப் படுத்தியுள்ளார். கடைக்கு வெளியில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள்களைத் தூக்கியெறிந்ததும் வைக்கப்பட்டிருந்த விளம்பரப் பலகைகளை உதைத்து விழுத்தியும் குறித்த கடைக்கு அருகிலுள்ள கடையில் பணிபுரியும் சில ஊழியர் களுக்கு அறைந்தும் காட்டுத் தர்பார் நடத்திய மேற்படி இராணுவ வீரர் நிகழ்ந்த சம்பவம் பற்றி யாராவது மூச்சுவிட்டால் கூட பயங்கரமான விளைவுகளைச் சந்திக்க வேண்டி வருமென எச்சரித்து விட்டுச்

-அருந்தவப் புதல்வன்-

நன்றி - நூலகத்திட்டம்



# இந்திய அரசியல் எங்கே போகிறது?

இந்திய அரசியலில் பரபரப்புக்கு உள்ளாகியிருந்த ஆட்சி கவிழ்ப்பு நாடகங்கள் ஒருவாறு முடிவுக்கு வந்து விட்டன. கவிழ்ப்பு நாடகத்தின் வில்லியான ஜெயலலிதா தன் நாடகம் தோல்வியில் முடிந்ததைத் தொடர்ந்து முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு வீடு திரும்பியுள்ளார்.

இப்போ மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற கூட்டணிக் கூத்துக்கள் ஆரம்பமாகி விட்டன. கட்சிகளின் பாரம்பரிய கொள்கைகள் எல்லாம் காற்றில் போய் கதிரை எண்ணிக்கை கணக்கின் அடிப்படையில் பேரங்கள் நடைபெறுகின்றன.

உலகெங்கிலும் பார்க்க முடியாத அரசியல் பேரதிசயங்கள் இந்திய அரசியல் வானில் உதித்து சுடர் விட்டு ஒளிர்கின்றன. ஒரு இரவிலேயே நண்பர்கள் பகைவர்களாகின்றார்கள். பகைவர்கள் நண்பர்களாகின்றார்கள்.

பகுஜன சமாஜக்கட்சி காங்கிரசுடன் அணி சேருகின்றது. கூட்டணி விட்டு ஓடிய லோக்தளம் பா.ஜ.கவுடன் சேர்கின்றது. திராவிட அரசியலுக்கு நேர்முக வாரிசாகச் சொல்லிக் கொள்ளும் தி.மு.க, பா.ஜ.கவுடன் கூட்டுச் சேர்கின்றது. இதுவரை பரமவைரிகளாக இருந்த வை.கோவும், கருணாநிதியும் கைகோர்க்க முன் வருகிறார்கள்.

மறுபக்கத்தில் நாட்டின் ஸ்திரத் தன்மை குழம்பியுள்ளது. பங்குச்சந்தை உட்பட நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சிப் போக்கினை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. பங்குச் சந்தையின் வீழ்ச்சியால் அதில் முதலிட்டவர்களுக்கு ஏறத்தாழ 40,000 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இதனிடையே எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என நினைக்கின்ற வல்லரசுக் கழுகுகள் இந்திய அரசியலுக்குள் மூக்கை நீட்டுகின்றன. அமெரிக்கா தனது வலைக்குள் இந்திய அரசியல்வாதிகளை வீழ்த்த என்ன வெல்லாம் செய்ய இயலுமோ அதையெல்லாம் செய்வதற்கு முயன்று கொண்டிருக்கின்றது.

சமத்துவமில்லாமல் வலிந்து கட்டப்பட்ட இந்தியப் பெருந்தேசியம் ஆட்டம் காணத் தொடங்கி விட்டதா? என்ற கேள்விகளெல்லாம் விஸ்வரூபமாக எழுச்சியடைந்துள்ளன.

இவ்வளவு குழப்பங்களுக்கு மத்தியிலும் ஒன்று மாத்திரம் தெளிவாகத் தெரிகின்றது. அதாவது இந்திய அரசியல் ஒரு பன்முக அரசியலையையும் பன்முக அதிகாரக் கட்டமைப்பையும் வேண்டி நிற்கின்றது என்பதே அதுவாகும். பல்வேறு தேசிய இனங்களும், பல்வேறு அடக்கப்பட்ட சமூக சக்திகளும் இந்திய அதிகாரக் கட்டமைப்பில் தமக்கும் பங்கினை கேட்டு நிற்கின்றன. காங்கிரஸ், பா.ஜ.க போன்ற தேசியக் கட்சிகளினாலும், இடதுசாரிக் கட்சிகளினாலும் நாட்டின் பல்வேறு சக்திகளினதும் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய முடியாததால் ஏற்பட்ட நிலைமையே இதுவாகும். இவையெல்லாம் ஒற்றைப் பரிமாணச் சிந்தனைகளில் கட்டி எழுப்பப்பட்ட கட்சிகளை ஒரு பன்முகச் சிந்தனையை நோக்கி நகருங்கள் என நிர்ப்பந்திக்கின்றன.

இவற்றின் ஊற்றுக்கள் எங்கிருந்து தொடங்குகின்றன?

உண்மையில் இந்திய சுதந்திரத்திற்கு முன்னரே இதன் ஊற்றுக்கள் ஆரம்பமாகி விட்டன. சுதந்திரப் போராட்ட காலத்திலேயே திராவிடர்கள் முஸ்லீம்கள் போன்ற தேசிய இனத்தவர்களும், சாதியால் தாழ்த்தப்பட்ட மக்களும் இந்தியப் பெருந் தேசியத்துடனும் அதனை முன்னெடுத்த இந்திய தேசிய காங்கிரசினுடனும் முரண்பட்டுக் கொண்டனர். திராவிடர்களின் தலைவராக இருந்த ஜின்னாவும், தாழ்த்தப்பட்டவர்களின் தலைவரான அம்பேத்காரும் பல்வேறு சந்தர்ப் பங்களில் இதனை வெளிப்படை யாகவே தெரிவித்தனர். ஆட்சி அதிகாரம் இந்தியப் பெருந் தேசிய சக்திகளிடம் செல்லும் போது தமது அபிலாசைகள் கணக்கில் எடுக்கப் படமாட்டா என அவர்கள் தெளிவாகக் கூறினர்.

சுதந்திரத்தின் போது முஸ்லீம்கள் தனிவழி சென்று பாரிய இரத்தம் சிந்தலுக்கு மத்தியில் பாகிஸ்தான் எனும் நாட்டை உருவாக்கிக் கொண்டனர். அம்பேத்கார் பெரிய திருப்தியில்லாவிட்டாலும் இட ஒதுக்கீடு போன்ற சில சலுகைகளுடன் சமரசம் செய்து கொண்டார். பெரியார் தொடர்ந்தும் எதிர்த்து நின்றார். எனினும் சுதந்திர அரசியல் அலைக்கு முன்னால் அக்கட்டத்தில் அவரது எதிர்ப்புக்கள் நின்று பிடிக்கவில்லை.

சுதந்திர தினத்தினைத் தொடர்ந்து இந்துப் பெருந்தேசிய மேலாதிக்கத்தைக் கொண்ட காங்கிரஸ் ஆட்சியை அமைத்துக் கொண்டது. ஆட்சி அமைத்து சிறிது காலத்திலேயே மக்களின் சம்மதமின்றி சூழ்ச்சித் தனத்தினால் காஷ்மீரை ஆக்கிரமித்தது.

இக்காங்கிரசினால் இந்துப் பெருந் தேசியம் என்ற தனது ஒற்றைப் பரிமாணச் சிந்தனையிலிருந்து விலகி பல் பண்புகளையுடைய பன்முகத் தன்மையைப் பேண முடியவில்லை. அதன் வாயிலாக தேசிய இனப் பிரச்சனைகளைத் தீர்க்க முடியவில்லை. தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியவில்லை. விளைவு பல்வேறு சக்திகளும் இந்தியத் தேசியத்திலிருந்து விலகத் தொடங்கின. தங்களுக்கு என சொந்த அமைப்புக்களை உருவாக்கிக் கொண்டு தமது அபிலாசைகளை முன்னெடுக்கத் தொடங்கின. தமிழ் நாடு பஞ்சாப், காஷ்மீர், அஸாம் போன்ற மாநிலங்கள் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து போராடத் தொடங்கின. மணிப்பூர், திரிபுரா, நாகலாந்து போன்ற வடகிழக்கு மாநிலங்களும் தேசிய அரசியலிருந்து விலகி தனித்துவக் கோரிக்கைகளை முன்வைக்கத் தொடங்கின. பகுஜன சமாஜக் கட்சி, சமாஜவாதிக்கட்சி, ராஸ்திரிய ஜனதா தள் போன்ற சாதிய கட்சிகளும் எழுச்சியடைய ஆரம்பித்தன.

இந்திய அரசியல் சந்திக்கின்ற இன்றைய நெருக்கடிகள் எல்லாம் இப் போக்கின் விளைவுகளே. இதனால் தான் இந்திய அரசியல் இன்று ஒரு பன்முக வடிவத்தை எதிர்பார்த்து நிற்கின்றது. ஆனால் அதனை வெற்றிகரமாகக் கொண்டு செல்லக் கூடிய அரசியல் சக்திகளிடையே வளர்ச்சி பெறவில்லை.

## ஆட்சிக் கவிழ்ப்பு நாடகம்

அண்மைய ஆட்சிக் கவிழ்ப்பு நாடகத்திற்கு பல காரணிகள் துணையாக தொழிற்பட்ட போதும், பன்முகத்தன்மை இல்லாமை என்ற மேற்கூறிய போக்கே அடிப்படையாக இருந்திருக்கின்றது. ஜெயலலிதா என்ற ஆட்சிக் கவிழ்ப்பு நாடகத்தின் வில்லி அப்பட்டமான தனது சொந்த சுயநலத்தின் பேரில் ஆட்சியைக் கவிழ்க்க முற்பட்ட போதும் ஒரு மாநிலக் கட்சி நாட்டின் தீர்மானம் எடுக்கும் செய்முறையில் முக்கிய பங்கினைக் கோரி நின்றது என்பது பிரதான விடயமாகும்.

இதே போலவே சமாஜவாதிக் கட்சியின் தலைவர் முலாயம் சிங்யாதவ் ஆட்சியைக் கவிழ்க்க முற்பட்ட போதும் மாற்று ஆட்சிக்கு ஆதரவு தருவதாயின் அதில் தமக்கும் பங்கு வேண்டும் என்று கேட்டு நின்றார். காங்கிரஸ் ஆட்சி அமைத்தாலும், மூன்றாவது அணி ஆட்சி அமைத்தாலும் தமது பங்கு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதே அவரது நிலைப்பாடாக இருந்தது.

மீகார் மாநிலத்தில் ஆட்சி புரியும் லாலு பிரசாத் தலைமையிலான ராஸ்திரிய ஜனதா தள் கட்சி தனது மாநில ஆட்சியை தக்க வைத்துக் கொள்வதற்காகவும், மத்தியில் தனது நிலையை பாதுகாத்துக் கொள்வதற்காகவும், எடுத்த காங்கிரஸ் ஆதரவு நிலை கூட ஒரு தற்காப்பு முயற்சியே ஆகும்.

மறுபக்கத்தில் காங்கிரஸ் தனது பெருந்தேசியவாத நிலையிலிருந்து இறங்கி வரமறுத்தது. தான் ஆட்சி அமைப்பதற்கு மற்றைய கட்சிகள் ஆதரவு தரவேண்டும் எனக் கருதியதே தவிர ஏனைய கட்சிகளை இணைத்து ஒரு கூட்டணி ஆட்சிக்கோ அல்லது மூன்றாவது அணி ஆட்சியமைப்பதற்கு ஆதரவு கொடுப்பதற்கோ தயாராக இருக்கவில்லை.

இன்றும் கூட தன்னால் தனித்து அரசமைக்க முடியும் என்றே அது நினைக்கின்றது. தேர்தலில் கூட்டணி அமைப்பதெல்லாம் அவர்களை இணைத்து ஆட்சி அமைப்பதற்கு அல்ல. மாறாக தனிப் பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைப்பதற்குத் தான் என்பது அதன் அபிப்பிராயம்.

இந்த இடத்தில் பா.ஜ.கவின் நிலை சற்று முன்னேற்றகரமானது. அது நாட்டின் யதார்த்த நிலையை நன்றாகவே உணர்ந்து கூட்டணி ஆட்சிக்கு தயாராகவே இருக்கின்றது. கடந்த 13 மாத கால ஆட்சியில் கூட்டணி ஆட்சியை நடாத்துவதில் ஓரளவு தேர்ச்சியும் பெற்றுள்ளது. ஆட்சி கவிழ்ப்பின் பின்னரும் மாற்று ஆட்சி அமைத்தலில் பா.ஜ.க. கூட்டணி உடைந்ததற்கு பல்வேறு காரணிகள் இருந்த போதும் பா.ஜ.கவின் இந் நெகிழ்வுப் போக்கே பிரதான காரணியாக விளங்கியது.


## தேர்தல் கூட்டணிகள் எவ்வாறு அமையும்

சென்ற தேர்தல்களைப் போல மூன்று அணிகள் களத்தில் நிற்பதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன. வேண்டுமானால் ஒரு சில மாநிலங்களில் பா.ஜ.க, காங்கிரஸ் என்கின்ற இரு பெரும் அணிகளைச் சுற்றியே கூட்டணி அமைவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இக் கட்சிகளின் செல்வாக்கு குறைந்த மாநிலங்களில் அங்குள்ள பிரதான மாநிலக் கட்சிகளைச் சுற்றி கூட்டணி அமைய லாம். குறிப்பாக தமிழ் நாட்டில் தி.மு.க, அ.தி.மு.கவைச் சுற்றியும், மேற்கு வங்காளத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாக்ஸிஸ்ட்) திரிணாமூல் காங்கிரஸ் என்பவற்றைச் சுற்றியும், கூட்டணிகள் அமையலாம். கேரளாவில் மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கூட்டணிக்கும், காங்கிரசிற்கும் இடையிலேயே போட்டி நிகழ்வதால் மூன்று அணிகள் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. தமிழ்நாட்டிலும் மூப்பனாரின் த.மா.க, அ.தி.மு.க அணியுடன் சேராவிட்டால் மூன்று அணிகள் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. ஆந்திராவிலும் தெலுங்கு தேசம் பா.ஜ.கவுடன் கூட்டுச் சேராவிட்டால் மூன்று அணிகள் தோன்ற வாய்ப்புக்கள் உண்டு.

கூட்டணிகளைப் பொறுத்தவரை பா.ஜ.க கூட்டணி இப்போதே ஏறத்தாழ உறுதியாகி விட்டது. அதனுடன் முன்பு இணைந்திருந்த அ.தி.மு.க தவிர்ந்த கட்சிகள் தொடர்ந்தும் இணைந்து போட்டியிடுகின்றன. தேர்தலின் பின்னர் ஆட்சியமைப்பதில் இணைந்து கொண்ட லோக்தளம் தெலுங்கு தேசம் போன்றவை இணையுமா? என்பதில் தான் இன்னமும் முடிவு தெரியவில்லை. இதைவிட புதிய கூட்டணியாக தி.மு.க இணைந்துள்ளது.

காங்கிரஸ் கூட்டணி தான் இன்னமும் தெளிவாக இல்லை: பகுஜன சமாஜக்கட்சி, ராஸ்திரிய ஜனதா தள் என்பவற்றுடனான கூட்டு ஓரளவு தெளிவாகி விட்டது. இடது சாரிக்கட்சிகள், அ.தி.மு.க ஜனதா தளம், என்பவற்றுடனான கூட்டுகள் பற்றித் தான் இன்னமும் முடிவெடுக்கப்படவில்லை.

உத்தரப்பிரதேசத்தில் செல்வாக்கு பெற்ற கட்சியாக விளங்கும் முலாயம் சிங்யாதவின் சமாஜ வாதக் கட்சி என்ன முடிவெடுக்கும் என்பது உறுதியாகத் தெரியவில்லை. சென்ற தடவை இக்கட்சி மகாராஷ்டிரத்தில் காங்கிரசுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்ட அதே வேளை உத்தரப்பிரதேசத்தில் தனித்தே போட்டியிட்டது.



## வெற்றி வாய்ப்புக்கள் எவ்வாறு அமையும்?

பா.ஜ.க தொடர்பாக நாடு முழுவதும் ஒரு பரிவு நிலை இருப் பதால் அவ்வணி வெல்வதற்கே வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. எனினும் இத்தேர்தலில் உள்ளூர் அரசியலும் பாரிய செல்வாக்கு செலுத்துவதால் இதனை உறுதியாக தற்போதைக்கு கூறுவது கடினமானது. கூட்டணிகள் பற்றி உறுதியான முடிவுகள் தெரிந்த பின்னர் தான் முடிவுகளைப் பற்றி சரியான எதிர்வு கூறல்களைக் கூறமுடியும். குறிப்பாக மக்களவைக்கு அதிக இடங்களைத் தெரிந்து அனுப்பும் உத்தரப்பிரதேசம் (85) பீகார் (54) மகாராஷ்டிரம்(48) ஆந்திரா(42) மேற்குவங்காளம்(42) மத்தியப்பிரதேசம்(40) தமிழ்நாடு(34) கர்நாடகம்(28) குஜராத்(26) ராஜஸ்தான்(25) ஒரிஸா(21) கேரளம்(20) என்பவற்றில் கூட்டணிகள் எவ்வாறு அமைகின்றன. என்பதைக் கொண்டே உறுதியாகக் கூறு முடியும்.

ஆனால் ஒன்று மட்டும் மிகத் தெளிவான உண்மை. அதாவது பா.ஜ.கவோ, காங்கிரசோ தனித்து ஒரு போதும் அரசமைக்க முடியாது. ஏனைய கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தே அரசமைக்க முடியும். எனவே கூட்டணி அரசாங்கமே தொடர்ந்தும் வரும் என்பது தெளிவாக உள்ளது.

எனவே அரசியல்வாதிகளும், கல்விமான்களும் கூட்டணி அரசாங்கத்திற்குரிய நெறிமுறைகள், கலாசாரம் என்பவற்றினைக் கட்டி வளர்ப்பதற்கான மார்க்கங்களைத் தேடுவது நல்லது.

இந்திய ஆதிக்க சக்திகளைப் பொறுத்தவரை இப்போக்கினை ஜீரணித்துக் கொள்வது கஷ்டமானது தான். அவர்கள் இது விடயத்தில் வேறுமார்க்கங்களைத் தேட முற்படலாம். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையையோ அல்லது தேர்ந் தெடுக்கப்பட்ட ஆட்சியை இடைக் காலத்தில் கலைக்கக் கூடாது என்கின்ற வகையில் சட்ட ஏற்பாடுகளையோ கொண்டு வரலாம்.

இவையும் கூட இந்திய அரசியல் வேண்டி நிற்கின்ற பன்முக அரசியல் என்பதைத் திருப்தி செய்யாது.

மொத்தத்தில் பிரித்தானியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மந்திரிசபை அரசாங்க முறை இந்தியாவில் இன்று பிழைப்பதற்காக தள்ளாடுகின்றது.


இனிமேல் இந்தியா தனக்கேயுரிய புதிய அரசியல் பண்பாட்டை நோக்கி நகர்த்தால் தான் தப்பிப் பிழைக்க முடியும்.

-சி.அ.யோதிலிங்கம்

நன்றி - நூலகத்திட்டம்



# ஸ்ரீலங்கா இராணுவத்தின் நப்பாசை!




தெற்கிலே பலவர்ண விளம்பரங் களை பல்வேறு கவர்ச்சியான சலுகைகள் சம்பளங்களை அறிவித்து வெளியிட்டும் எதிர்பார்த்தளவு ஆட்கள் படையில் சேராதது பாதுகாப்பு அமைச்சிற்கு பெரிய தலையிடியாகப் போய்விட்டது.

வடக்கிலே குற்றம் செய்வதற்கு போதிய ஆளணியை தெற்கில் இருந்து கொண்டு போய் குவிக்கும் அரசாங்கத்தின் செயல் கடந்த மாகாணசபைத் தேர்தல்களின் போது வெகுவாக விமர்சிக்கப்பட்டது.

மடுமாத கோவிலை விடுவித்ததன் மூலம் கிறிஸ்தவர்களின் சுதந்திரமான வழிபாட்டிற்கு தாம் பெரிதும் உதவியதாக அரசாங்கம் பீற்றிக் கொண்ட போதும் போஸ்டர்கள் ஒட்டி ஆரவாரம் செய்த போது எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. வடக்கிற்கு சிங்கள இளைஞர்களை, அரசாங்கம் தனது முட்டாள்த்தனமான யுத்த வழிமுறைகளால் பலிகொடுக்கவே திரட்டிச் செல்கிறது என்பது ஒரு பலமான விமர்சனமாக பரவி விட்டிருக்கிறது. இராணுவத்திற்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இப்போதுதெல்லாம் விளம்பரச் செலவைக் கூட சமாளிக்க முடியாதளவிற்கு மோசமாகி விட்டன.

ஆக இது வரை காலமும் தனிச் சிங்கள இராணுவமாக தன் இராணுவத்தை கட்டியெழுப்புவதிலேயே குறியாக இருந்த அரசு, தமிழ் குழுக்களின் உறுப்பினர்கள் சேர முன்வந்தும் கூட இழுத்தடித்து வந்த அரசு (இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஈ.பி.ஆர்.எல்.எப்.இல் இருந்து பிரிந்ததாகக் கூறப்படும் ராசிக் குழுப்பை அரசாங்கம் தனது படையில் சேர்த்துக் கொண்டது ஒரு விதிவிலக்கு) யாழ்ப்பாணத்தில் படைக்கு ஆட்திரட்ட விளம்பரம் செய்திருக்கிறது.

வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களை தமிழ் மக்களை கொண்று குவிக்கவும் அத்து மீறல்கள் என்பவற்றை செய்யவும் மட்டுமே தெரிந்து வைத்திருந்த ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு, குடாநாட்டில் அவர்களால் கொல்லப்பட்டவர்கள் என்று கருதப்படுவோர்களின் புதைகுழிகள் தோண்டப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு வேளையில் இவ் ஆட்திரட்டல் விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது.

யாழ் இளைஞர்கள் இலங்கை இராணுவத்துடன் சேர்ந்து தமது சகோதரர்களை கொல்லவும் சகோதரிகளை மானபங்கப்படுத்தவும் தாய்மார்களையும் பெற்றோர்களையும் கண்ணீரில் குளிக்க வைக்கவும் தயாராக இருப்பார்கள். என்ற நப்பாசை பாதுகாப்பு அமைச்சுக்கு.

தமிழ் இளைஞர்களை இராணுவத்தில் சேர்ப்பதன் மூலம் தமது இராணுவம் ஒரு பல்லின இராணுவம் என்ற பெயரை ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு ஒரு புறமும், அங்கு செய்யப்படும் படுகொலைகளை இனஅழிதொழிப்பு என்ற சொல்லால் அழைக்க முடியாமல் செய்யும் வாய்ப்பு இன்னொரு புறமுமாக அரசை இந்த முயற்சியில் ஈடுபட வைத்துள்ளன.

திட்டவட்டமான ஒரு அரசியல் முயற்சி இது என்பது சந்தேகம் இல்லை.

ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பார்கள். அது மட்டுமல்ல அவனுக்கு தன்னைச் சூழவுள்ள உலக யதார்த்தம் கூட விளங்குவதில்லை என்பதை இந்த நிகழ்வு தெளிவாக காட்டியுள்ளது.

ஆயினும் என்ன?

யாழ் இளைஞர்கள் வருவர்கள் என்று நம்பிக்கை தெரிவித்திருக்கின்றார் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன்.

அவரது எல்லா நம்பிக்கைகளையும் போல இதுவும் அவரது ஆசையில் இருந்து வெளிப்பட்டிருக்கிறது.

அவருக்கு ஒரு அனுதாபச் செய்தியை அனுப்பி வைக்கலாம்.


-அரன்

# மடு : விடுவிக்கப்பட்டது யாருக்காக?

அண்மையில் நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தலுக்கான பிரசாரங்களில் அரசாங்க தரப்பினர் பயன்படுத்தின மிக முக்கியமான பிரசாரங்களில் ஒன்று தான் மடுமாதா தேவாலயத்தை மீட்டெடுத்தது பற்றிய பிரச்சாரம் புலிகளின் பிடியில் இருந்து மடுமாதா தேவாலயத்தை மீட்டெடுத்து நாடெங்கிலும் உள்ள பக்தர்களின் வழிபாட்டிற்கு வழிசமைத்தவர் சந்திரிக்கா என்று அவர் புகழ் பாடும் சுவரொட்டிகள் பரவலாக இந்த தேர்தல்கள் நடைபெற்ற மாகாணங்கள் எங்கும் ஒட்டப்பட்டிருந்தன.

மன்னார் மறைமாவட்ட ஆயர் ஜோசப் இராயப்பு, கொழும்பு மறைமாவட்ட பேராயர் நிக்கலஸ் மாக்கஸ் பெர்னாந்து உட்பட நாடெங்கிலும் உள்ள அனைத்துக் கிறிஸ்தவ மக்களதும் பலத்த எதிர்ப்பை பெற்ற இந்த சுவரொட்டி இரண்டு முக்கிய விடயங்களை செய்ய முயற்சித்தது. ஒன்று மடுமாத தேவாலயம் புலிகளது பூரண கட்டுப்பாட்டிலும் அவர்களது அத்துமீறல்களுக்குள்ளும் சிறைப்பட்டிருந்தது என்பது. இரண்டாவது இந்தத் தேவாலயத்துள் பக்தர்கள் வழிபாட்டுக்காக போகமுடியாத நிலை இருந்தது என்பது.

ஆனால் இந்த இரண்டு தகவல்களுமே பொய் என்பது இலங்கையின் பாதுகாப்பு அமைச்சையும் அதன் தலைவி சந்திரிக்காவையும் தவிர மற்றெல்லோருக்கும் தெரிந்திருந்தது. ஆகவே தான் இந்த சுவரொட்டி ஒரு அரசியல் மோசடியாக அவர்களால் கருதப்பட்டது. அரசாங்கம் தனது தேர்தல் வெற்றிக்காக இத்தகைய பொய்ப்பரச்சாரங்களுக்குள் இறங்கியிருக்கிறது என்று அவர்கள் ஆத்திரப்பட்டனர். அந்த ஆத்திரத்தின் வெளிப்பாட்டை மன்னார் மறைமாவட்ட ஆயர் விடுத்த அறிக்கை தெளிவாகக் காட்டியது. மன்னார் தேவாலயப் பகுதிக்குள் புலிகளின் நடமாட்டமோ அல்லது அவர்களது கட்டுப்பாடோ என்றுமே இருந்ததில்லை என்பது அப்படி அவர்கள் நடமாடினாலும் அதுவும் ஆயுதபாணிகளாக அல்லாமலேயே நடமாடினர் என்பதும் யாவரும் அறிந்த விடயம்.



ஆனால் மடு தேவாலயத்தை விடுவித்ததாக அறிவித்த அரசாங்கமோ தனது படையினர் ஆயுதபாணிகளாக தேவாலய எல்லைக்குள் பிரவேசிக்கவும் அங்கு நிலை கொண்டிருக்கவும் அனுமதித்தது. அது மட்டுமல்லாமல் அங்கு உற்சவ காலங்களில் வரும் யாத்திரிகர்களின் பாவனைக்கென கட்டப்பட்டிருந்த மலசல கூடங்களை என்பவற்றை வீணாக்கவும் அனுமதித்தது. தேவாலைய எல்லைக்குள் ஆயுதபாணிகளாக இராணுவத்தினர் பிரவேசிப்பதை எதிர்த்த ஆயர் அதை நிறுத்துமாறு கோரி ஜனாதிபதியிடம் பலதடவை கூறியும் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆனால் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து வேறு போக்கிடமின்றி தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த அகதிகளை அங்கிருந்து வெளியேறுமாறு உத்தரவு பிறப்பித்திருக்கிறது அரசு. அண்மையில் விஜயம் செய்த பாதுகாப்பு பிரதியமைச்சர் அனுருத்தரத்வத்த அங்கிருந்த அகதிகளை உடனடியாக வெளியேறுமாறு உத்தரவு பிறப்பித்துவிட்டு வந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

யுத்தம் காரணமாக மடு "விடுவிப்பிற்கு" முன்பிருந்தே அங்கு தங்கியிருந்த அகதிகள் உட்பட புதிதாக வந்த அகதிகள் அனைவரையும் பாதுகாப்பற்ற பிரதேசங்களுக்கு போய் குடியேறுமாறு இராணுவம் மிரட்டி வருகிறது. தம்மை அங்கிருந்து வெளியேற்ற வேண்டாம் என்று அவர்கள் கோரியும் எதிர்ப்புத் தெரிவித்தும் மறுத்த போதிலும் பலவந்தமாக வெளியேற்றத்தை இப்போது அரசாங்கம் துரிதப்படுத்தி உள்ளது.

ஆயினும் அரசாங்கத்திடமும் ஜனாதிபதியிடமும் இராணுவத்தினர் ஆயுதங்களுடன் தேவாலய வளவிற்குள் பிரவேசிப்பதை நிறுத்துமாறு ஆயர்கள் விடுத்த கோரிக்கைகளுக்கு எந்த பதிலும் இல்லை. அவர்கள் தொடர்ந்து ஆயுதபாணிகளாக நடமாடி திரிகிறார்கள்.

ஆக நடந்திருப்பதெல்லாம் ஏற்கனவே இருந்த அமைதியான சூழலை குலைத்து அகதிகளை மேலும் நிர்க்கதியாக்கியது, ஆயுதபாணிகள் தேவாலய வளவிற்குள் நடமாடும் நிலமையை உருவாக்கியது என்பது தான்.

இதற்குத் தான் பெயர் விடுவிப்பு! சந்திரிக்கா அரசு விடுதலை பெற்ற பிரதேசங்களில் சிறப்பிற்கு இது ஒரு நல்ல உதாரணம்.

## நான் கவனமில்லாமல் இருந்த போது...

இப்போதெல்லாம் தொலைக்காட்சிச் சேவைகளில் பெண்கள் பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடல்கள் ஒழுங்கு செய்யப்படுவது ஒரு 'பஷன்'ஆகிப் போய்விட்டது.

அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பத்மா சோமகாந்தன், சந்திரிகா சுப்பிரமணியம், செல்வி திருச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்ட உரையாடல் நிகழ்ச்சி ஒன்று ஒளிபரப்பாகியது.

இந்த நிகழ்ச்சியின் போது மிகத் தாராளமாகப் பாவிக்கப்பட்ட ஒரு வார்த்தை தான் கற்பழிப்பு என்ற வார்த்தை.

தமிழ் நாளிதழ்களே இச்சொல்லைப் பாவிக்காமல் விட்டு நீண்ட நாளாகி விட்ட பின்பும் பெண்கள் பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடிய இவர்களுக்கு இதை விட்டுவிட முடியவில்லை.

மற்ற இருவருக்கும் தான் இது பற்றிய அக்கறை இல்லையென்றால் செல்வி திருச்சந்திரனுக்குமா அக்கறை இல்லாமல் போய் விட்டது?

அவரது வாயிலிருந்து திரும்பத் திரும்ப இச் சொற்கள் வந்த போது என்னுடைய காதுகள் தான் பழுதாகி விட்டனவோ என்ற சந்தேகம் எனக்கு வந்து விட்டது. என்கிறார் எனது நண்பர்!

நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

-எஸ்.எஸ்

# இந்திய வம்சாவளி பேரணியின் தோற்றம் ஒரு வரலாற்றுத் தேவை

- மனோ கணேசன்

ஜனநாயக தொழிலாளர் காங்கிரசின் அரசியல் பிரிவின் பொதுச் செயலாளரும், இந்திய வம்சாவளி மக்கள் பேரணியின் உப தலைவர் களுள் ஒருவரும், மேல் மாகாண சபைத் தேர்லில் இந்திய வம்சாவளி மக்கள் பேரணியின் மயில் சின்னத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஒரே வேட்பாளரும், மேல் மாகாண சபை உறுப்பினருமான மனோ(ஹரன்) கணேசனுடனான நேர்காணல்.

**இந்திய வம்சாவளி மக்கள் பேரணியின் தோற்றம். அதற்கு வழி வகுத்த காரணிகள் என்பன பற்றிக் கொஞ்சம் கூற முடியுமா ?**

இன்றளவும் "தோட்ட மக்கள்" என்ற வரையறைக்கு உட்பட்டு அழைக்கப் பட்டுவரும் "இந்திய வம்சாவளித் தமிழர்கள்" இன்று ஒரு "தேசிய இனமாக" வளர்ச்சியடைந்துள்ளார்கள் என்பது ஒரு அடிப்படையான விடயம். தோட்டங்களில் தொழில் புரிபவர்களே இன்னமும் பெரும் பான்மையாக இருந்தாலுங் கூட, இன்று தோட்ட வரம்புகளுக்கு வெளியே இந்த மக்கள் மத்தியிலே ஒரு பாரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. வர்த்தகர்களாகத், தொழில திபர்களாக, ஆசிரியர்களாகப், படித்த பட்டதாரிகளாக, அரச ஊழியர்களாகத், தனியார் துறை ஊழியர்களாக, மருத்துவர் களாகப், பொறியியலாளர்களாகக், கலைஞர்களாகப் பல்வேறு சமூக அடுக்குகள் தோன்றியுள்ளன. இவை யெல்லாம் ஒன்று சேர்க்கப்படும் பொழுது ஒரு "தேசிய இனம்" உருவாகின்றது. இந்தப் புதிய வளர்ச்சிப் போக்கை அங்கீகரித்துப் புதிய தேவைகளுக்கும், எதிர்பார்ப்பு-களுக்கும் ஈடுகொடுக்க வேண்டிய ஒரு தலைமை தேவைப்படுகின்றது.

ஏனென்றால், இயன்றளவும் எமது பிரச்சினைகள் "தோட்டத் துறை"யின் "தொழிற் சங்கப்" பிரச்சினைகள் மாத்திரமே என்று தான் நாடு எண்ணிக்கொண்டிருக்-கின்றது. இந்நாட்டின் ஏனைய இனத் தவர்கள் அரசியல் கோரிக்கைகளை முன்வைத்துக் கொடி கட்டிப் பறக்கும் பொழுது, நாம் குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கின்றோம். வெறும் தொழிலாளர்களாகத் "தோட்ட வரம்புகளு-க்கு" உட்பட்டுத் "தொழிற் சங்க"த் தேவைகளுடன் மாத்திரம் வாழ்ந்த காலம் மலையேறி விட்டது. இன்று தொழிற் சங்கத் தலைமைகளுக்கு அப்பாற்பட்ட பரந்த ஒரு "அரசியல் தலைமை" தேவை என்பது காலத்தின் கட்டாயம். எமது சமூக வளர்ச்-சியின் ஒரு கால கட்டத்திலிருந்து அடுத்த கட்டத்திற்குள் நாம் நுழைந்து கொண்டி-ருக்கின்றோம்.

எமது மக்களின் இந்த அரசியல் தலைமைக்கான வரலாற்றுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக உருவானது தான் "இந்திய வம்சாவளி மக்கள் பேரணி". இங்கிருந்து தான் அடுத்த கட்டம்- அது எதுவாக இருந்தாலும் உருவாக முடியும். இதுதான் இந்திய வம்சாவளி மக்கள் பேரணி உருவாகுவதற்கு வழிவகுத்த அடிப்படைக் காரணி.

கட்சி ரீதியாகப் பிளவுபட்டிருந்த இந்திய வம்சாவளித் தமிழர்களை ஒரு தேசிய இனமாக, ஒரே அணியின் கீழ், ஒரே குடையின் கீழ் அணி திரட்டி அவர்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதை நோக்கமாகக் கொண்டு பேரணி தோற்றம் பெற்றது.

**இந்திய வம்சாவளி மக்கள் பேரணி என்ற பெயர் அவர்களை "மலையக" மண்ணி லிருந்து அந்நியப்படுத்துகின்றது என்ற ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படு கின்றது. அதே போலக் கொழும்பிலும் இந்தப் பெயர் கொழும்புத் தமிழர்களில் சரி அரைவாசியாக இருக்கும் வட — கிழக்குத் தமிழர்களை அந்நியப்படுத்து கின்றது என்ற குற்றச்சாட்டும் முன் வைக்கப்படுகின்றது. இது பற்றித் தங்களின் அபிப்பிராயம் என்ன ?**

முதலாவது, "இந்திய வம்சாவளித் தமிழர்கள்" என்ற இனத்தின் பெயரிலும், "இந்திய வம்சாவளி மக்கள் பேரணி" என்ற அமைப்பின் பெயரிலும் உள்ள "இந்திய" என்ற சொல், இன்றைய "இந்தியா" என்ற நாட்டை அதன் இன்றைய அர்த்தங்களுடன் குறிப்பதாக எண்ணக் கூடாது. இங்கே "இந்திய" என்ற அடைமொழி ஒரு பாரம்பரியத்தையும், கலாசார பண்பாட்டுத் தொடக்கத்தையும் குறிக்கின்றது. இலங்கைக்கு, இந்திய வம்சாவழித் தமிழர்கள் குடிபெயர்ந்த அதே காலகட்டத்தில் வேறு பல நாடுகளுக்கும் குடிபெயர்ந்துள்ளார்கள். இந்த நாடுகளில் எல்லாம் இந்த வகையான மக்கள் தங்களை இந்திய வம்சாவளியினர் என்று கூறிக் கொள்ளத் தயங்குவதில்லை. என்றாலும் "இந்திய வம்சாவளித் தமிழர்", "மலையகத் தமிழர்", "கண்டியத் தமிழர்", "தென்னில-ங்கைத் தமிழர்" என்று தொடங்கிப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும் இந்த இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின் இன ரீதியான பெயர் பற்றிய ஒரு திட்டவட்டமான முடிவிற்கு நான் வந்துவிடவில்லை. உண்மையில் இது சம்பந்தமாக ஆக்கபூர்வமான கலந்துரை-யாடல்கள் நடைபெற வேண்டுமென்று தான் நான் விரும்புகின்றேன்.

ஆனால் இந்த மக்கள் கூட்டம் இன்று ஒரு தனித்துவம் கொண்ட இனமாக வளர்ச்சியடைந்து விட்டது என்பதிலும், இதனால் இந்த இனத்தின் தனித்துவத்தைக் காட்டக்கூடிய ஒரு பெயர் தேவை என்பதிலும் நான் தெளிவாகவும், தீர்மானகரமாகவும் இருக்கின்றேன்.


அடுத்தது கொழும்பு மாவட்டத்திலே வாழும் "ஈழத் தமிழர்க"ளை, "இந்திய வம்சாவளி மக்கள் பேரணி" என்ற பெயர் அமைப்பு ரீதியாக அந்நியப் படுத்துகின்றது என்ற குற்றச் சாட்டை நான் ஓரளவுக்கு ஏற்றுக் கொள் கின்றேன். என்றா லும் இது சம்பந்தமாகச் சில உண்மைகளை நிதர்சனமாக நீங்கள் பார்க்க வேண் டும். 1977 இற் குப் பின்னர் வட மாகாணத் தின் பல்வேறு பகுதிகளில் சென்று குடியேறிய "மலையகத் தமிழர்கள்" இன்று அங்குள்ள மக்களுடன் ஒன்றிணைந்து விட்டார்கள். "ஈழத் தமிழர்களின்" அரசியல் ஸ்தாப-னங்களில் கூட இடம் பெற்றி ருக்கிறார்கள். ஆனால் தங்களது ஒன்றிணைவிற்கு விலையாக இந்த "மலையகத் தமிழர் கள்", "ஈழத் தமிழர்"களின் ஸ்தாபன ரீதியான பெயர் களில் மாற்றத்தைக் கோருவதில்லை. இதே மாதிரியான ஒரு சகோதர ஒருமைப்பாட்டுடன் கொழும்பு வாழ் "ஈழத் தமிழர்கள்" ஏன் ? இந்திய வம்சாவளி மக்கள் பேரணி"யின் கீழ் அணி திரளக் கூடாது ?

எது எப்படியிருந்தாலும் இந்த அமைப்பு ரீதியான பெயர் சம்மந்தமாக ஒரு கருத்துப் பரிமாற்றம் இப்போது நடைபெற்று வருகின்றது. விரைவில் இது சம்பந்தமாக ஒரு பொது உடன்பாட்டிற்கு நாங்கள் வெகுசீக்கிரத்திலேயே வருவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**பேரணியின் இலக்கு, அதன் அரசியல், அதனை முன்னெடுப்பதற்கான வேலைத் திட்டம் என்பன பற்றிச் சற்றுக் கூற முடியுமா ?**

எமது சமூக வளர்ச்சியின் புதிய கட்டத்திற்கு இப்போது நாம் வந்துள்ளோம் என்று நான் ஏற்கனவே கூறியிருந் தேன். இது நடைமுறையில் அமைப்பு ரீதியாகத் தொழிற்சங்கத் தலைமையிலிருந்து, அந்தத் தொழிற் சங்க இயந்திரத்தையும் உள்ளடக்கிப் புதிய ஒரு அரசியல் தலைமையை உருவாக்குவது என்பதே ஆகும். இன்றைய எமது வளர்ச்சி நிலையானது இந்நாட்டின் ஏனைய இனங்களுடன் ஒப்பிடும் பொழுது மிகவும் பின் தங்கியதே ஆகும். எமது மக்களை அரசியல் மயப்படுத்துவதில் நாம் இன்னமும் குழந்தைப் பருவத்திலேயே இருக்கின்றோம். எமது அமைப்பின் அறிவிக்கப்பட்ட திட்ட வட்டமான இலக்கு எமது மக்களுக்கு அரசியல் தலைமையைத் தருவதே. இதற்கான வேலைத் திட்டத்தைப் பற்றி இப்போதைக்கு என்னால் விளக்க மாகக் கூற முடியாதுள்ளது. பல விடயங்கள் இன்னமும் கருத்துப் பரிமாற்ற மட்டத்தில் தான் உள்ளன. என்றாலும் எனது சில கருத்துகளைச் சொல்லலாம் என எண்ணுகிறேன்.

இந்திய வம்சாவளித் தமிழர்களின் "பொது நல அபிவிருத்தி" இன்று நடைமுறையிலுள்ள "தோட்டக் கட்ட-மைப்பு அமைச்சு" மூலமாகச் செயற்-படுத்தப் படுகிறது. இந்த அமைச்சானது இன்றுள்ள ஆட்சியின் அங்கம். நாளை வரும் ஆட்சி இப்படியான ஒரு அமைச்சையே இல்லாது ஒழிக்கலாம். எனவே முதற் கட்டமாக எந்த ஒரு ஆட்சியிலும் மாற்றமுடியாத ஒரு அரசியல் சட்டப் பாதுகாப்பை நாம் ஏற்படுத்த வேண்டும். உதாரணமாக மாகாண சபை அமைப்பு முறை இன்று அரசியல் சட்டப் பாதுகாப்பைப் பெற்றுள்ளது. அதை யாரும் சுலபத்தில் ஒழிக்க முடியாது. இந்த முறையை எதிர்த்தவர்கள் கூட இன்று, இதில் பங்கு



பெறுவதை நாடு பார்க்கிறது.

இதற்கு முதற் கட்டமாகத் "தோட்டக் கட்டமைப்பு" என்ற அமைச்சை ஸ்தாபன ரீதியாக "இந்திய வம்சாவளி மக்கள் அபிவிருத்திச் சபை (Indian Origin Peoples' Development Council)" என்று அரசியல் சட்ட ரீதியாக மாற்ற வேண்டும். இந்தச் சபை பிரதேச வரையறைகளுக்கு அப்பாற்பட்டு இந்திய வம்சாவளி மக்கள் வாழும் அனைத்துப் பிரதேசங்களிலும் தனது செயற்பாட்டு அதிகாரங்களைக் கொண்டிருக்க வேண்டும். பாராளுமன்ற வரவு - செலவுத் திட்டத்தில் இன்று தோட்டக் கட்டமைப்பு அமைச்சிற்கு ஒதுக்கப்படும் நிதி இந்தச் சபைக்கு வழங்கப் படவேண்டும். அதே போல் மாகாண சபைகளில் இந்திய வம்சாவளி மக்கள் நலனுக்காக ஒதுக்கப்படும் நிதிகளும் இந்தச் சபைக்கு அளிக்கப் பட வேண்டும். "இந்திய வம்சாவளி நலத்துறை"க்காக மத்திய அரசாங்-கத்தினால் நியமிக்கப்படும் "அமைச்சரவை அமைச்சர் (Cabinet Minister)" இந்தச் சபையின் தலைவராகச் செயற் பட வேண்டும். இந்தச் சபையின் உறுப்பினர்களாகப் பாராளுமன்றத்திலும், மாகாண சபைகளிலும் உள்ள இந்திய வம்சாவளிப் பிரதிநிதிகள் செயலாற்ற வேண்டும். இந்த உறுப்பினர்களின் பாராளுமன்ற, மாகாண சபைப் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகளும் இந்தச் சபைக்கு வரவேண்டும். இந்தச் சபை வெளிநாட்டு உதவிகளையும் தேடிப் பெறலாம். இந்த நிதி வளங்களைக் கொண்டு இந்தச் சபை இந்திய வம்சாவளித் தமிழர்களின் பல்வேறு சமூகப், பொருளாதாரக், கல்வி, கலாசாரப் பணிகளைச் செய்யலாம்.

மேற் கூறிய அபிவிருத்திச் சபையைத் தவிர நுவரெலிய, பதுளை மாவட்டங்களில் தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ஏற்படுத்தப்பட வேண்டும். தமிழ் உதவி அரசாங்க அதிபர்களும், தமிழ்க் கிராம அதிகாரிகளும் இந்தப் பிரிவுகளில் நியமிக்கப் பட வேண்டும்.

தோட்டப் பகுதிகளிலே தொழிலா-ளர்களின் குடியிருப்புகளும், சுற்றியுள்ள வீட்டுத் தோட்டங்களும் அந்தத் தொழிலாளர்களுக்கே சொந்தமாக்கப்பட வேண்டும். இதன் மூலம் அந்தப் பகுதிகள் கால கதியில் கிராமங்களாக வளர்ச்சி பெறும் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

இன்னும் பல்வேறு விடயங்கள் இருந்தாலும் மேற்கூறிய மூன்றும் அடிப்படையானவை. இந்த மூன்றையும் ஒன்றாக இணைத்துப் பார்த்தால் எங்களது அரசியல் இலக்குப் புரியும். இவையே இந்த நாட்டிலுள்ள இந்திய வம்சாவளித் தமிழர்களின் "அரசியல் கோரிக்கை"யாகத் தேசிய அரங்கில் முன்வைக்கப்பட வேண்டும்.

நான் மேற் கூறியவை பேரணியின் அங்கீகரிக்கப்பட்ட வேலைத் திட்டம் அல்ல. இவை பொதுவாக ஆலோசிக்கப்பட்டு வரும் விடயங்கள்

**பேரணிக்குள் இ.தொ.காவின் மேலாதிக்கம் காணப்படுகின்றது என்ற குற்றச் சாட்டு முன் வைக்கப்படுகின்றது. மாகாண சபைத் தேர்தலிலும் கூட இ.தொ.கா உறுப்பினர்கள் மட்டும் வெல்ல வேண்டும் என்பதிலேயே அதிக அக்கறை செலுத்தியதாகக் கூறப்படுகின்றது. இவை பற்றி யாது கூறுகின்றீர்கள் ?**

இ.தொ.கா. இன்றளவும் மலை-யகத்திலே மிகப் பெரிய தொழிற் சங்கம். அதே போல் நமது மக்களின் சார்பாகப் பாராளுமன்றத்திலும், மாகாணசபைகளிலும் இடம் பெறும் அங்கத்தவர்களில் அநேகமானோர் இ.தொ.காவைச் சேர்ந்தவர்களே. இந்த நிலையில் இ.தொ.காவை உள்ளடக்கிய ஒரு அரசியல் கூட்டணியில் இந்தக் கட்சியின் செயற்பாடும், செல்வாக்கும் அதிகமாக இருப்பது இயற்கையே. இதை நாம் யதார்த்த ரீதியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

பல மேலாதிக்கச் செயற்பாடுகளும், தேர்தல்களின் போது சுயநலப் போக்கு-களும் காணப்படுவதும். காணப்பட்டதும் உண்மைகளாக இருக்கலாம். ஆனால் இவை இந்த மாதிரியான ஒரு அரசியல் கூட்டணியில் சகஜம். இவற்றைப் பரந்த நோக்கில் புரிந்து கொண்டும், இவற்றிற்கு எதிராக அமைப்பு ரீதியான உட் கட்சிப் போராட்டத்தை நடத்திக் கொண்டும் என்னைப் போன்றவர்கள் பொது இலக்கை நோக்கிச் செல்கின்றோம். இதன் மூலமாகத் தனிக் கட்சிகளினதும், தலைவர்களினதும் மேலாதிக்கப் போக்கை மாற்றி, அமைப்-பைப் படிப்படியாக ஜனநாயக மயப்படுத்த முடியும். மறு பக்கத்திலே இப்படியான மேலாதிக்கம் சகிக்க முடியாதளவிற்கு அதிகரிக்குமானால் எம்மைப் போன்றவர்-கள் இப்படியான ஒரு அரசியல் கூட்டணியில் இருக்க முடியாது.

**உண்மையில் பலரது கருத்து இ.தொ.கா. தன்னுடைய இழந்த "செல்வாக்"கினைப் பேரணியைப் பயன்படுத்தி உயர்த்த நினைக் கின்றது என்பதே ஆகும். இது பற்றி... ?**

என்னைப் பொறுத்த வரையில், எமது சமூகத்திற்கு ஒரு அரசியல் தலைமை வேண்டும் என்ற வரலாற்று ரீதியான ஒரு தேவை ஏற்பட்டு இருக்கின்றது. அந்தத் தேவையை நிறைவேற்றும் கருவி தான் பேரணி. இந்தக் கருவியானது தனது வரலாற்று ரீதியான கடமைகளை முறையாகச் செய்யாவிட்டால் நாளை இன்னொரு புதிய கருவியை வரலாறே உருவாக்கும். அதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம். எனவே இந்த வரலாற்றின் பார்வையில் இ.தொ.கா., ஜ.தொ.கா, தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் ஏனைய எந்தவொரு அமைப்பும் தனி முக்கியத்து-வம் வாய்ந்தவையல்ல. அதே போல் எந்தவொரு தனி நபரும் முக்கியமான-வரல்ல. அமைப்பினரும், தலைவர்களும் வரலாறு வரையறுத்துத் தரும் காரியங்-களைச் செய்கின்றார்கள் அல்லது தூக்கி எறியப்படுகின்றார்கள். விஞ்ஞான பூர்வமாகச் சிந்திப்பவர்களுக்கு இது புரியும்.

மற்றப்படி, இ.தொ.கா. மட்டுமல்ல, எந்தவொரு அரசியல் கட்சியும் தனது செல்வாக்கை ஏதாவது ஒரு கட்டத்தில் இழந்திருந்தால் அதை மீளப் பெறுவதற்கு மாற்றுத் திட்டங்கள் அமைத்துச் செயற்படும். இது ஒன்றும் மிகா பாதகச் செயலல்ல.

**பேரணி மூலம் தேர்தலில் நின்றபடியினாலேயே தனக்குரிய ஆசனத்தை இழந்து விட்டேன் எனத் தொழிலாளர் தேசிய சங்கத்தின் டீ. ஐயாத்துரை குற்றம் சாட்டுகின்றாரே? இது போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பேரணிக்குள் என்ன திட்டம் வைத்திருக்கின்றீர்கள்?**

ஐயாத்துரை இந்த விதமாகச் சொல்லி-யிருப்பதாக, நானும் பத்திரிகையில் தான் படித்துத் தெரிந்து கொண்டேன். இது சம்பந்த மேலும் விபரங்கள் பெறாமல் என்னால கருத்துச் சொல்ல முடியாது.

ஆனால் நான் அறிந்த வரையில் ஐயாத்துரை இன உணர்வு கொண்ட ஒரு அரசியல்வாதி. 1977 இல் மலையகத் தமிழர்களுக்குத் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் வாய்ப்பு நெடு நாட்-களுக்குப் பிறகு கிடைத்த போது தொண்ட-மான், அப்துல் அஸீஸ் ஆகியோருடன் நுவரெலிய - மஸ்கெலியத் தொகுதிகளிலே போட்டியிட்டவர். ஒப்பீட்டளவில் பார்க்கும் பொழுது மலையகத்திலே அனுபவம் மிக்க சிரேஷ்ட அரசியல் தலைவர்களில் ஒருவர். எனவே இந்தப் பிரச்சினையை அவர் வெற்றிகரமாகக் கையாள்வார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**மாகாணசபைத் தேர்தலில் கணிசமான வாக்குகள் ஐ.தே.கவுக்கு விழுந்துள்ளன. அதுவும் பதுளை மாவட்டத்தில் பேரணியை விட ஐ.தே.கவே அதிகளவிலான வாக்குகளைப் பெற்றுள்ளது. இந்தப் போக்கினைப் பற்றி என்ன சொல்வீர்கள் ?**

பொதுவாகவே இந்திய வம்சாவளி மக்கள் மத்தியில், ஐ.தே.க. ஓரளவு செல்வாக்குடன் இருப்பது உண்மையே. இதன் காரணம் சுமார் 25 ஆண்டுகளாக நாம் நமது மக்களை இந்த ஐ.தே.கச் சின்னத்திற்கு வாக்களிக்கப் பழக்கி விட்டோம். எனவே இந்த "தொட்டில் பழக்க"த்திலி-ருந்து எமது மக்களை விடுவிப்பது என்பது ஓரிரு தேர்தல்களில் சாத்தியமாகும் விடயமல்ல. ஆனால் இன்று ஐ.தே.கவுக்குத் தமிழர்கள் மத்தியில் உள்ள ஆதரவிற்குப் பலத்த சவாலாக நாம் தனித்துவமாக உருவாகத் தொடங்கிவிட்டதை, நீங்கள் கருத்திற் கொள்ள வேண்டும்.

சில கணக்குகளைப் போட்டுப் பார்த்து, ஆசனங்கள் குறைந்து போய்விட்டன என்ற ஒரு சித்திரத்தை வரைய முயற்சி செய்வது நியாயமில்லை. பெரும்பான்மைத் தேசியக் கட்சிச் சின்னங்களைத், தவிர்த்துத் தனித்துவச் சின்னத்தில் நாம் நாடு முழுக்கப் போட்டியிட்டுப் பெற்றுள்ள இந்த வெற்றி மகத்தானது.

'குறிப்பாகக் கொழும்பு மாவட்டத்திலே எனது பிரச்சாரம் எமது மக்கள் அனைவரையும் சென்றடைந்தது. இதனால் எங்களுக்கு வாக்களிக்காத மக்களைக் கூட எம்மைத் திரும்பிப் பார்க்க வைத்துள்-ளோம். எமக்குக் கிடைத்துள்ள வெற்றி ஒரு ஆரம்பமே. எதிர்காலத்திலே கொழும்-பிலும், மலையகத்திலும், தென்னிலங்கை முழுக்கத் தமிழ் மக்கள் மத்தியிலே எமது தனித்துவக் கொடி பறக்கும். ஏனென்றால் நாடு முழுக்கத் தமிழ் பேசும் மக்கள் இந்தப் பேரினவாதக் கட்சிகளின் மீது நம்பிக்கை இழந்து வருகிறார்கள் என்பது எனக்கு நன்கு புலனாகிறது.

**மாகாண அரசாங்கத்துக்கு ஆதரவு அளிப்பதாயின் நிபந்தனைகளுடன் தான் ஆதரவளிப்போம் எனக் கூறுகின்றீர்கள். அந்த**

நன்றி - நூலகத்திட்டம்



**நிபந்தனைகளைப் பற்றிக் கூற முடியுமா ?**

தமிழ்க் கிராம அதிகாரிகள் நியமனம், தமிழ் உதவி அரசாங்க அதிபர் அமைப்பு, தொழிலாளர்களது வீடுகள் சொந்தமாக்கல், தோட்டப் பாடசாலைகளில் ஆசிரியர் நியமனம், மலையகத்தில் தொழில் நுட்பக் கல்லூரி ஆகிய பல விடயங்கள் தொடர்ந்தும் அரசாங்கத்திற்கும், பேரணியின் பிரதான கட்சியாகிய இ.தொ.காவிற்கும் இடையில் இழுபறி நிலையில் இருக்கின்றன. இதற்கிடையில் இ.தொ.கா. அவசர காலச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்கு அளிக்கின்றது. எமது கோரிக்கைகளைக் காலக்கெடு வைத்து அவசர காலச் சட்டத்திற்கு ஆதரவளிப்பதுடன் முடிச்சுப் போட வேண்டும் என்பது எனது தனிப்பட்ட நிலைப்பாடு. இவ்வகையான நிபந்தனைகள் இன்னமும் பேரணியால் ஒரு பொது வேலைத் திட்டத்திற்குள் கொண்டுவர முடியாமலுள்ளது. இது ஒரு துரதிர்ஷ்டவசமான, கவலைக்குரிய சூழ்நிலை என்பதை நான் ஒப்புக் கொள்கின்றேன்.

**மலையக மக்கள் முன்னணி. எம். எஸ். செல்லச்சாமியின் தேசிய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் என்பன பேரணிக்கு வெளியே உள்ளன. அவற்றையும் பேரணியுடன் இணைப்பது தொடர்பான திட்டங்கள் ஏதாவது உள்ளனவா ?**

மலையக மக்கள் முன்னணி, இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவை மட்டுமல்ல, மலையகத்தில் இருக்கக் கூடிய அனைத்து அரசியல், சமூகத், தொழிற் சங்க அமைப்புக்களும் பேரணியில் இணைய வேண்டும். இது சம்பந்தமாக நான் முயற்சிகளைச் செய்வேன்.

பெ. சந்திரசேகரன் அவர்களையும் பேரணியின் உள்ளே கொண்டு வருவதற்கான முயற்சிகள் ஆரம்ப கட்டத்தில் நடைபெற்றன. அவரும் கொள்கை ரீதியாக இதற்கு உடன்பட்டதாகவே நான் நினைக்கின்றேன். ஆனால் இடையில் நடந்த சில சம்பவங்களால் அவர் பேரணியில் இணைய முடியாது போயிருக்கலாம். சந்திரசேகரன் கொள்கையளவில் நான் இந்த நேர் காணலிலே விபரித்த விடயங்களுடன் வேறுபடுபவரல்ல. செல்லச்சாமியைப் பொறுத்தவரை தனிப்பட்ட முறையில் எனக்குத் தொடர்பு கிடையாது. ஆனாலும் செல்லச்சாமியும் கூட இந்தப் பேரணியினுள் வரவேண்டும் என்பதைப் பொறுத்த வரையில் எனக்கு ஆட்சேபனை ஏதுமில்லை.

**மத்திய மாகாண சபையின் பொ.ஐ.முவின் முதல மைச்சர் வேட்பாளர் நந்தமித்திர ஏக்கநாயக்க பௌத்த மத நிறுவனங்களின் வேண்டுதலின் பேரில் ஐ.தே.கவையும் இணைத்து ஒரு தேசிய அரசாங்கத்தினை மத்திய மாகாண சபையில் அமைக்கப் போவதாகக் கூறியுள்ளார். இது பேரணியின் பேரம் பேசும் அரசியலை முறியடிப்பதற்கான ஒரு தந்திரம் எனக் கொள்ளலாமா? இது பற்றித் தங்கள் கருத்து என்ன?**

தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தப் பெரும்பான்மைத் தேசியக் கட்சிகளால் ஒன்று சேர முடியவில்லை. ஏதாவதொரு தேர்தலை நியாயமாக, வன்முறை இன்றி நடத்தி முடிக்க இந்தக் கட்சிகளால் ஒன்று சேர முடியவில்லை. சர்வதேச நிறுவனமொன்றில், இலங்கையின் சார்பாக ஒரு பாராளுமன்ற உறுபபினரைத் தெரிவு செய்வதற்குக் கூட இவர்களால் ஒன்று சேர முடியவில்லை. அவ்வளவு ஏன்? பேரினவாதக் கண்ணோட்டத்தில் தமிழர்களுக்கு எதிராகப் போர் செய்வதில் கூட ஒன்று சேர்ந்து ஒருமித்துச் செயற்படாத இவர்களா தேசிய அரசாங்கம் அமைக்கப் போகிறார்கள் ?

தேசிய அரசாங்கத்தை மாகாண மட்டத்தில் அமைப்பதாக இருந்தால் அமைத்துப் பார்க்கட்டும். அதன் பின்பு முடிவு செய்வோம்.

**இது போன்ற முயற்சிகள் மலையகத்தில் தொடர்ந்தும் நடை பெறப் போகின்றன. சிங்கள வீர விதான இயக்கம், பயங்கர வாதத்துக்கு எதிரான தேசிய இயக்கம் போன்றவை திட்மிடப் பட்ட அடிப்படையில் சில வேலைகளைச் செய்து வருகின்றன போலுள்ளது. அப்படிச் செய்யும் போது இவை எல்லாவற்றையும் தடுக்கப் பேரணி எவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது ?**

நிச்சயமாகச் சிங்களப் பேரினவாதம் எந்தளவுக்குக் கொழுந்து விட்டு எரிகின்றதோ, அதற்கு எதிரான தீர்மான கர்மான நடவடிக்கைகளைச் சிங்களப் பேரினவாதத்தினால் பாதிக்கப்படக்கூடிய பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஏனைய இனக் குழுக்களும் செய்ய வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகின்றோம். ஆகவே இது ஒரு பொது வேலைத் திட்டத்தின் கீழ்தான் வரமுடியும். பொது வேலைத் திட்டம் என்று கூறும்போது இந்திய வம்சாவளித் தமிழர்கள் மட்டுமல்ல, சிங்களப் பேரினவாதத்தினால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஈழத் தமிழர்கள், முஸ்லிம்கள், இந்திய வம்சாவளித் தமிழர்கள் ஆகிய தமிழ்ப் பேசும் சிறிய தேசிய இனங்கள் மத்தியில் இருக்கக் கூடிய ஒருமைப்பாட்டுப் பொது வேலைத் திட்டத்தின் மூலமாகவே இதனை நாங்கள் எதிர்கொண்டு சந்திக்க முடியும். அதுமட்டுமல்ல ஏற்கெனவே இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை என்பது இலங்கைக் கரைகளின் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட பிரச்சினையாகிச் சென்று விட்டது. அது தெளிவாக நமக்குத் தெரிகிறது. ஆகவே சர்வதேச நிர்ப்பந்தம், சர்வதேச அபிப்பிராயம் போன்ற விடயங்கள் எல்லாம் இதில் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டுள்ளன. அது மட்டுமன்றி இன்றைக்கு நாட்டில் எவ்வளவு தான் சிக்கல்கள், பிரச்சினைகள் தான் இருந்தாலும் முதல் பிரச்சினையாகக் கொழுந்து விட்டு எரியக் கூடிய பிரச்சினை வட - கிழக்குப் பிரச்சினைதான் என்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். ஆகவே அந்த வட - கிழக்குப் பிரச்சினையில் தவிர்க்க முடியாமல் எமது பிரச்சினையும் சம்பந்தப்பட்டுள்ளது. வட - கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. ஏனெனில் நாங்கள் எவ்வளவு தான் எங்களது தனித்துவ அடையாளங் களை முன்வைத்தாலும் அடிப்படையில் தமிழர்கள். ஒரே மொழி பேசும் ஒரே கலாசார்முடைய மக்கள் என்கின்ற பார்வை தான் பேரினவாதிகள் மத்தியில் இருக்கின்றது. ஆகவே பொதுவான ஒரு வேலைத் திட்டத்தின் அடிப்படையில் இலங்கையின் இனப் பிரச்சினை தீர்க்கப் பட வேண்டும். தீர்க்கப்படும் பட்சத்தில் தான் இலங்கைக்கு எதிர் காலம் ஒன்று இருக்கின்றது என நன்றாகத் தெரிகின்றது. இப்படிப்பட்ட ஆங்காங்கே ஸ்தலரீதியாக பல்வேறுபட்ட இடங்களில் சிங்களப் பேரினவாதிகளால் பேரினவாத நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது தெரிகிறது. அவற்றை இவ்வாறுதான் தீர்க்க வேண்டும் என நான் நினைகின்றேன்.

**கொழும்புத் தமிழர்களின் பிரச்சினைகள் எனப்படுவது மலையகத் தமிழ் மக்களதும், வட— கிழக்குத் தமிழ் மக்களதும் பிரச்சினை களிலிருந்தும் சற்று வேறுபட்டதாகக் காணப்படுகிறது. மலையக மக்களுக்கோ அன்றி வட — கிழக்கு மக்களுக்கோ வைக்கும் அரசியல் தீர்வைக் கொழும்புத் தமிழ் மக்களுக்கு வைக்க முடியாது என்ற ஒரு கருத்து நிலவுகிறது. இது தொடர்பாக நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ?**

அடிப்படையில் கொழும்புத் தமிழர்கள் என்று ஒரு இனப் பிரிவு இருப்பதாக நான் நினைக்கவில்லை. கொழும்புத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், இந்தியத் தமிழர்கள் அல்லது மட்டக்களப்பு தமிழர்கள், திருகோணமலைத் தமிழர்கள், மன்னார்த் தமிழர்கள், யாழ்ப்பாணத் தமிழர்கள். அப்படி எல்லாம் பிரிவுகள் இருப்பதாக நான் நினைக்கவில்லை. தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த வரைக்கும் ஈழத் தமிழர்கள், இந்திய வம்சாவளித் தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய மூன்று இனக் குழுக்கள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் அவரவர் சிந்தனைகளின் அடிப்படையில் தங்களைத் தேசிய இனமாகக் கருதலாம். அல்லது சிறுபான்மை இனமாகக் கருதலாம். ஆனால், மூன்று பிரிவுகள் தான் இருக்கின்றதென நான் நினைக்கிறேன். கொழும்பில் வாழுதல் காரணமாக அவர்களுக்குச் சில பிரசசினைகள் இருக்கலாம். மட்டக்களப்பில் வாழ்வதால் சில பிரச்சினைகள் இருக்கலாம். யாழ்ப்பாணத்தில் இருப்பதனால் சில பிரச்சினைகள் இருக்கலாம். அவை உள்ளூர்ப் பிரச்சினைகள் ஆகும். அவற்றைப் பெரிதுபடுத்தி அதை வைத்துக் கொண்டு தனியான இனக் குழுவாகவோ, பிரிவாகவோ அடையாளங் காட்டும் முயற்சியை நான் ஆதரிக்கவில்லை. பொதுவாக இந்திய வம்சாவளித் தமிழர்களுக்குரிய அனைத்துப் பிரச்சினைகளும், கொழும்புத் தமிழர்களுக்கும் இருக்கின்றன. ஆனால், கொழும்பில் ஒரு விஷேட குணாம்சம் என்னவென்றால் இங்கு பெருவாரியான வட - கிழக்கைச் சேர்ந்த பூர்வீகத் தமிழர்களும் கூட கணிசமான அளவு கொழும்பு நகரப் பகுதியில், கொழும்பு மாவட்டத்தில் வாழ்கின்றார்கள்.ஆனால் வாக்காளர்களாக இருக்கின்றார்களா என்பது வேறு விடயம். தேர்தல் அரசியல் பார்வையில் நான் இதனைப் பார்க்கவில்லை. அங்குள்ள நெருக்கடி காரணமாக இங்கு வந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களது அபிலாஷைகளையும் நாங்கள் கணக்கில் எடுக்க வேண்டும் என்ற கட்டாயம் எங்களுக்கு இருக்கின்றது. வெறுமனே இந்திய வம்சாவளித் தமிழர்களதோ, மலையகத் தமிழர்களதோ அபிலாஷைகளை மட்டும் முன்னெடுக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. நான் எனது பிரச்சாத்தில் எப்பொழுதும் தெளிவாக இருக்கிறேன் என்பதைக் கவனித்திருப்பீர்கள் என நினைக்கிறேன். ஏனெனில் என்னைப் பொறுத்தவரை எனக்கு இரண்டு வேலைகள் இருக்கின்றதென நினைக்கிறேன். ஒன்று இந்திய வம்சாவளித் தமிழர்களின் தேசிய அந்தஸ்தை இந்த நாட்டில் நிலை நிறுத்துவது, இன்னொன்று வட- கிழக்கு மக்களின் தேசிய அபிலாஷைகளுக்குத் துணைக் குரல் கொடுப்பது. அதில் நான் தெளிவாகத்தான் இருகின்றேன். அவர்களுக்கு நான் தலைமை தாங்கவோ, புதிய வழிகாட்டவோ போகவில்லை. அது எனது நோக்கமும் அல்ல. ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு ஒரு அரசியல் தலைமை இருக்கின்றது எனத் தெளிவாக நான் சொல்கின்றேன். அரசியல் தலைமை இருகின்றது. யார் அந்த தலைமை என்பதை முடிவெடுப்பது அவர்களுடைய வேலை. அவர்கள் முடிவெடுத்துள்ளார்கள் என நான் நினைக்கின்றேன். அது அவர்களுடைய வேலை. ஆனால், அந்த அபிலாஷைகளுக்குத் துணைக் குரல் கொடுக்க வேண்டுமென நான் நினைக்கின்றேன். அந்த மக்கள் வட - கிழக்கில் கஷ்டப்படுவதைக், கண்ணீர் வடிப்பதைக் கை கட்டிப் பார்க்கும் ஒரு மன நிலை எனக்குக் கிடையாது. அப்படி நான் இருக்கமாட்டேன். மாகாண சபை அங்கத்தவர் என்ற அதிகார வரம்புக்கு அப்பாற்பட்ட விடயங்கள் தான் வட- கிழக்குப் பிரச்சினை. இருந்தாலும், கூட அந்த அந்தஸ்தைப் பயன்படுத்தி என்னால் என்ன செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்வேன். அடிப்படையில் என்னவென்றால் ஒரு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என நாம் எல்லோரும் உணர்கின்றோம். வட- கிழக்கில் போராடிக் கொண்டிருக்கக் கூடிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கூடப் பல தடவை நேரடியாகச் சொல்லியுள்ளது. ஆகவே அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் ஏனோ தயங்குகின்றது. காரணம் மறைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல் (Hidden Agenda) ஏதேனும் இருக்கின்றது என்றே நான் நினைக்கின்றேன். மறைமுகமான ஒரு திட்டம் வைத்திருக்கிறார்கள். ஆகவே அந்தக் காரணத்தினாலேதான் மூன்றாந் தரப்பு அல்லது சர்வதேச மத்தியஸ்தம் நாட்டிற்குள் வரக்கூடாது என்பதில் அவர்கள் எப்போதும் தெளிவாக இருக்கிறார்கள். வெளியுறவு அமைச்சரும் சரி ஏதோ ஒரு காரணத்தை மாறி மாறிச் சொல்லித் தட்டிக் கழித்துக்கொண்டே இருக்கின்றார்கள். ஆகவே அந்த மூன்றாந் தரப்பு மத்தியஸ்தம் வர வேண்டும். அரசியல் தீர்வு வரவேண்டும். அதுவும் அந்த அரசியல் தீர்வும் கூட வட - கிழக்கு மாகாணங்கள் இணைந்த ஒரு அரசியல் தீர்வாக இருக்க வேண்டும் என்பதில் நான் தெளிவாக இருக்கின்றேன்.

**மாகாண அரசாங்கங்களை அமைப்பதற்காகப் பொ.ஐ.முவுடன் மாத்திரமே கூட்டுச் சேர வேண்டும் என்ற கட்டாயத்தைப் பேரணியின் மீது யாரும் திணிக்க வில்லை. திணிக்கவும் முடியாது என்றும். பேரினவாதக் கட்சிகளான பொ.ஐ.மு. (ஸ்ரீ.ல.சு.க.) . ஐ.தே.க. ஆகியவற்றிற்கு மாகாண அரசாங்கம் அமைப்பதற்கு நிபந்தனை அற்ற ஆதரவு அளிப்பதில்லை என்றும் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை உறுப் பினர்கள் 9 பேரும் பதவிப் பிரமாணம் மட்டும் செய்வதெனவும். பின்னர் ஒரு பொது வேலைத்திட்டத்தின் அடிப்படை யிலேயே உத்தேச மாகாண அரசுகளுக்கு ஆதரவு அளிப்பது பற்றி முடிவு செய்யப்படும் என்றும் கூறி இருந்தீர்கள். ஆனால் இன்று அந்தப் பொது வேலைத்திட்டத்தின் அடிப்படை எதுவும் இல்லாத நிலையிலேயே மாகாண அரசுக்கு ஆதரவளிக்கப் பேரணி குறிப்பாக இ.தொ.க. முனைந்திருப்பது நீங்கள் முன்பு சொன்னவற்றிற்கு முரணானதாக இல்லையா?**

சில முரண்பாடுகள் இருக்கின்றன தான். இதைப் பற்றி நாம் பேரணிக்குள் பேசிக் கொண்டுதான் இருக்கின்றோம். என்னைப் பொறுத்தவரை நான் எனது நிலைப்பாடுகளில் உறுதியாக இருக்கின்றேன். பேரணி ஒரு தனிக் கட்சியல்ல. அதே வேளையில் வெற்றி பெற்றுள்ள வேட்பாளர்களுக்கு மாத்திரம் சொந்தமான கட்சியும் அல்ல. பேரணியில் இடம் பெறும் அனைவருக்கும் ஏற்புடைய முடிவுகள் எடுக்கப்படுவது தான் நியாயமானது.

**நேர்காணல் :**
**சிவ. ஜோதிலிங்கம்**
**ந. சரவணன்**
**சீ. செல்வன்.**

# தமிழ் ஆய்வும் வவுச்சர் அறுவடையும்!

தினமும். காலையில் எழுந்து மாணவ எஜமானர்களின் கால்களைத் தொட்டு வணங்கி நாட்கடமையை ஆரம்பிப்பதன் மூலம் புனிதத்துவம் பெற்றது வடக்கு கிழக்கு மாகாண அரசின் கல்வி அமைச்சு. மாணவ எஜமானர்களுக்கு கண்ணில் தூசி விழுந்தாற் கூடக் கலங்கிப்போவது இந்த அமைச்சும் அதன் அதிகாரிகளும் தான். அந்த அளவுக்கு கடமைக்காகக் காலத்தையே அழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சில வேளைகளில் இவர்கள் தமிழ் ஆய்வு செய்வார்கள். மூன்று நாட்கள் முழுநேரப் பணியாக கழுத்துப்பட்டியைத் தளர்த்தி வைத்துக் கொண்டு ஆய்வு செய்தார்களாயின் சங்கப்பலகை தோத்தது போங்கள். ஆங்கிலத்தில் கையெழுத்துக்களைப் போட்டுக் கொண்டு நடைமுறையில் தமிழ்ப் பயன்பாடு பற்றி அறிஞர் களை அழைத்து ஆய்வு செய்தார்களென்றால், வவுச்சர் வவுச்சராக அறுவடை செய்து கொண்டிருப்பார்கள்.

சில வேளைகளில் தங்களுக்குத் தெரிந்தவர்களுக்கு "தமிழ் அறிஞர்" என்று பெயர்சூட்டி எங்காவது ஆடம்பர ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று நான்கு நாட்கள் பண்பாடு வளர்ப்பது பற்றி ஆராய்வார்கள். இந்த ஆராய்ச்சியில் பண்பாடு வளர்கிறதோ இல்லையோ அதிகாரிகளின் "பணப்பாடு" செழித்து வளரும். அறிஞர்கள் எனப் பெயர் சூட்டப்பட்டவர்கள் நான்கு நாட்கள் கனவுலகில் மிதக்க வைத்த அதிகாரிகளுக்கு என்றும் விசுவாசதாசர்களாகப் பின்னாளிற் செயற்படுவார்கள்.

அறிஞர்களை வைத்துக் கொண்டு ஆராய்ந்தால் போதுமா? அதிகாரிகளைக் கொண்டு ஏதாவது ஆராய்ச்சி செய்தால் என்று யோசித்து உதவிக் கல்விப் பணிப்பாளர்களைத் தேடிப்பிடித்து ஆடம்பர ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று மாணவ எஜமானர்களுக்கு எப்படி எப்படி தலைப்பாகை கட்டினால் அழகாக இருக்கும் என சில லட்சங்கள் செலவில் வவுச்சர் ஆய்வு செய்வார்கள்.

இப்படியெல்லாம் ஆய்வு செய்து புனிதர்களான கல்வி அமைச்சு இப்போது புதிய கைங்கரியத்தில் இறங்கியுள்ளது.

திருகோணமலை வலயக்கல்வித் திணைக்களத்தை அதன் சொந்தக் கட்டிடத்திலிருந்து துரத்திவிட்டால் மாணவ எஜமானர்களது மனங்குளிருமா என ஆராய்ந்து வருகிறது.

இந்தக் கட்டிடம் உவர் மலையில் அதன் சொந்த நிலத்தில் அமைந்துள்ளது. மாகாணசபை அமைப்பு வரமுன்னேயே ஒரு ஏக்கர் இரண்டு றூம் இரண்டு பேச் காணியில் ஒன்பது கட்டிடங்களைக் கொண்டு திருகோணமலைக் கல்வித்திணைக்களம் என்ற பெயருடன் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினரும் தகவல் ஒலிபரப்புத்துறை பிரதியமைச்சருமான அப்துல் மஜீத் அவர்களால் 26.05.1977ல் திறந்து வைக்கப்பட்டது.

காலப்போக்கில் தற்காலிக வசதி கருதி மாகாணக் கல்வித் திணைக்களம் மாகாண அரசு அமைக்கப்பட்டதன் பின்னர் இக்கட்டிடத்தின் ஒரு பகுதியில் இயங்கியது. அதிகாரியொருவரின் சோம்பேறித்தனமான நிர்வாக வசதிக்காக கணேசன் சந்தியில் புதிதாகக் கட்டப்பட்ட ஆண்கள் விடுதிக்கு திருகோணமலைக் கல்வித் திணைக்களத்தின் ஒரு பகுதி மாற்றப்பட்டது.

இந்த ஒரு பகுதிக்கே இந்தக் கட்டிடம் போதாது. சந்தை போன்ற அமைப்பில் நெருக்கி நெருக்கியே அதிகாரிகளுக்கு இருக்கைகள் போடப்பட்டன. துரதிருஷ்டவசமாக இந்தத் திணைக்களத்துக்கு வரும் பிராந்திய அல்லது வலய கல்வி அதிகாரிகள் முதுகெலும்பை எங்காவது ஒளித்து வைத்து விட்டு அலுவலகம் வருவதனால் எதிர்ப்புக்கள் எந்த ரூபத்திலும் எழவில்லை.

இதன் பிரதிபலன், இப்போது மாகாணக் கல்வித் திணைக்களம் வலயக் கல்வித் திணைக்களத்தை அதன் சொந்தக் கட்டிடத்திலிருந்து உடனடியாக வெளியேறுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது. நேர்மையையும் திராணியையும் தொலைத்து விட்ட வலயக் கல்விப்பணிப்பாளர் எங்கள் கட்டிடத்தை எங்களுக்குத் தாருங்கள் என்று கேட்கத் துணிவற்று நிற்கிறார்.

இவரது துணிவின்மை வலயப்பணிமனையில் இடநெருக்கடியை மேலும் ஏற்படுத்தும். களஞ்சியப்படுத்த வேண்டிய பொருட்களுக்கு களஞ்சியஅறை இல்லாதபடியால் பொருட்கள் வீணாகும். மாணவ எஜமானர்களின் சீருடை, புத்தகங்களை வைத்து ஒரு நாளைக்கேனும் பாதுகாக்க இடமில்லாமல் போகும். விஞ்ஞான ஆய்வு கூட உபகரணங்கள் ஏனோதானோ என்று கிடக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக திருகோணமலை வலயக்கல்வி அலுவலகம் தனது சொந்தக் கட்டிடத்தை இழந்து அனாதையாக நிற்கும்.

பத்து யார் துரத்துக்கு வாகன வசதிகளைக் கொண்டிருக்கும் மாகாண அதிகாரி நகருக்கு வெளியே காணி எடுத்து மாகாணக் கல்வித்திணைக்களத்தை அமைத்தால் என்ன?

திருகோணமலை மாணவ எஜமானர்களுக்கு இவர்கள் வேறென்ன நல்லது செய்யப் போகிறார்கள்?

- விவேகி

# பேச்சுவார்த்தை

ஆறுகளையெல்லாம்
கடல் கொண்டு போகிறது....
கொக்குகளெல்லாம்
குளம் வற்றிச் செத்துப் போயின்...
வேலிகள்
பயிர்களின் ஆணி வேரறுத்து
இழுத்துப் பிடுங்கி
எடுத்து வீசுகின்றன...
அகதி முகாம்களில்
கோவணத்துக்குக் கூட துணியில்லாமல்
குழந்தைகள் திரிகின்றன....
நமது தேசப்படம்
செல்லரித்துக் கொண்டிருக்கிறது...
சந்திக்கு வருவாயா
சாயங்காலம் -
மீண்டும் இது பற்றிப்
பேசிக்கொண்டிருக்கலாம் -

- அஷ்ரஃப் சிஹாப்தீன்

நன்றி - நூலகத்திட்டம்



## அனுராதபுரம்:

# புனித நகரில் பெருகி வரும் பழம்பெரும் தொழில்

தற்போது இலங்கையின் பாரிய பாலியல் தொழில் மையமாக மாறியுள்ள அனுராதபுரத்தைச் சேர்ந்த பாலியல் விடுதிகளுக்கு சட்ட அந்தஸ்தினைப் பெற்றுக் கொடுக்குமாறும், அவ்வாறில்லாவிடின் அது பாரிய அழிவினை ஏற்படுத்துமெனவும் அறிஞர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம், நாட்டின் பிற நகரங்களைச் சேர்ந்த மற்றும் எல்லைக்கிராமங்களிலிருந்து வருகை தரும் பாலியல் ஊழியம் செய்யும் பெண்களின் மத்திய நிலையமாக மாறத் தொடங்கியது 1980களின் நடுப்பகுதியிலாகும். புலிகள் இயக்கம் ஸ்ரீ மகாபோதிக்கருகில் வைத்து 200 பக்தர்களை படுகொலை செய்த சம்பவமும் மற்றும் கொழும்பில் அமைந்திருந்த யுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் முக்கியமான இராணுவ மத்திய நிலையங்கள் அங்கு இடமாற்றம் செய்யப்பட்டதும் அனுராதபுரம் ஓர் யுத்தச் சூழல் நகரமாக மாற பெரிதும் உதவியது. வடக்கு கிழக்கு பிரதேசங்களிலிருந்து விடுமுறை எடுத்து வீட்டை நோக்கிச் செல்லும் இராணுவத்தினர் மற்றும் விடுமுறை முடிந்து செல்லும் இராணுவத்தினராலும் இப்பிரதேசம் நிரம்பி வழிகின்றமை இந்நகரத்தை ஓர் "பாங்கொக்" காக மாற்றியுள்ளது.

அனுராதபுரத்தில் தற்போது பாலியல் விடுதிகள் சுமார் 60 வரையில் உள்ளன. அனைத்து விடுதிகளிலும் 16 வயதிலிருந்து 45 வயதுக் குட்பட்ட பெண்கள் 8-15 வரையில் நாளாந்தம் பாலியல் தொழில் செய்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் வேலை வாய்ப்பற்ற கிராமியப் பெண்களேயாவர். மேலும் சிலர் எல்லைக் கிராமங்களிலிருந்து பல பாலியல் அவஸ்தைகளுக்குட்பட்ட பின்னர் இத் தொழில் செய்வதற்கென அனுராதபுரத்திற்கு வந்தவர்கள்.

இவ்விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அனுராதபுரத்தைச் சேர்ந்த பிரதான சட்டத்தரணிகள், வைத்தியர்கள், மதப்பெரியார்கள் மற்றும் அரச அதிகாரிகள், மாதக் கணக்கில் யுத்த நடவடிக்கையில் ஈடுபடும் இராணுவத்தினரின் உடல் தேவைகளை நிறைவேற்றுதல் அவசியமானதெனவும், அவர்களது சுகாதாரத்தையும் மற்றும் அனுராதபுரத்தின் சுகாதாரத்தையும் கவனத்தி லெடுக்காவிட்டால் பயங்கரமான சமூக நோய்கள் பரவுவதை தடுக்க முடியாது போய்விடுமென எச்சரிக்கின்றனர். அதேபோல் தற்போது அனுராதபுரத்தைப் போன்று எல்லைக் கிராமங்களில் இராணுவத்தினரினால் மேற்கொள்ளப்படும் பாலியல் பலாத்காரங்களுக்கு முடிவுகட்டவும் இத் தொழிலை சட்டரீதியாக்குவது தான் சரியான வழியென அவர்கள் நம்புகின்றனர். அதேபோல் எயிட்ஸ் நோய்க்கிருமிகளை உடலில் உட்செலுத்திக் கொண்ட தற்கொலை பெண் புலிகள் நகரத்திற்குள் பிரவேசித்தால் ஏற்படக் கூடிய அழிவினை கற்பனை செய்து கூட பார்க்க முடியாதென்கின்றனர் அங்குள்ள வைத்தியர்கள்.

சட்டரீதியான அங்கீகாரமற்ற பின்னணியில் அனுராத புரத்திலிருக்கும் ஆயிரத்திற்குமதிகமான பாலியல் தொழில் செய்யும் பெண்கள், நாளாந்தம் சுகாதாரப் பரிசோதனைகளையும் மேற்கொள்வதில்லை. பாலியல் நோய்களை தடுக்கும் எச்சரிக்கையுணர்வும் அவர்களிடம் கிடையாது. இவர்களின் சேவையைப் பெற்றுக் கொள்ளும் இராணுவத்தினரின் நிலைமையும் அவ்வாறானதே. அவர்களுக்கு இராணுவ முகாமிலிருந்து விடுமுறை பெற்று வெளியேறும் போது வழங்கப்படும் ஆணுறைகள் சிலவற்றை தவிர வேறு ஆலோசனைகள் ஏதும் வழங்கப்படுவதுமில்லை. இதனால் எயிட்ஸ் கிருமிகள் பரவினால் அது ஆயிரக்கணக்கான இராணுவத்தினரையும் பாதிக்கக் கூடும் எனக் கருதப்படுகின்றது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த வைத்திய அதிகாரியொருவர் அனுராதபுரத்தில் பரவும் சமூக நோய்கள் பற்றிய அறிவு கூட அங்குள்ள வைத்தியர்களிடம் கிடையாது எனக் குறிப்பிட்டார்.

மறுபுறம் நாட்டின் மிகப்புராதன தலைநகராகிய, புண்ணிய பூமியாகிய அனுராதபுரத்தின் வீதியோரங்களில், மூலை முடுக்குகளில் இடம் பெறும் இந்த பாலியல் தொழில், சட்டரீதியாக நடாத்தப்படாவிட்டால் எதிர்வரும் காலத்தில் நகரத்திற்கு வருகை தரும் பக்தர்களின் வருகையும் குறையக் கூடுமென பௌத்த பிக்குகள் எச்சரிக்கை விடுக்கின்றனர்.

அனுராதபுரம் முழுதும் துரிதமாக பரவியுள்ள பாலியல் தொழில் காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமை எதிர்காலத்தில் இன்னும் மோசமான நிலையை அடையலாம் எனக் கருத்துத் தெரிவிக்கும் அனுராதபுரத்தைச் சேர்ந்தவர்களின் பொதுவான கருத்து இத் தொழிலை சட்டரீதியாக அங்கீகரிக்க வேண்டும் என்பதாகும். இப்பிரச்சினைக்கு மாற்று தீர்வொன்றை எடுக்கவேண்டும் எனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிடத்தக்கவர்களின் கருத்துக்கள் இவ்வாறு அமைந்திருந்தன.



**தீர்வு அல்லது மாற்று ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.**

**— உருவன்வெலிசாய விகாராதிபதி பள்ளேகம ஹேமரத்ன தேரர்**

இன்று அனுராதபுரம் பாரிய ஒழுக்க சீர்கேட்டிற்கு முகம் கொடுத்துக் கொண்டிருக் கின்றது. இது யுத்தத்தினால் பீடிக்கப்பட்ட நகரமாகியுள்ளது. புண்ணிய நகரமாக, வழிபாட்டுக்குரிய நகரமாக விளங்கிய இந்நகரத்தில் முன்னர் போன்று பக்தர்கள் பெருமளவினர் தங்குவதில்லை. பக்தர்கள் இந்நகரத்தை விலக்கிச் செல்லும் தன்மையையே காணக் கிடைக்கின்றது. பக்தர்களை விட இங்கு இராணுவத்தினர் தாம் அதிகம். ருவன் வெலி சய, ஸ்ரீ மகாபோதி ஆகியவற்றை தரிசிக்க வருபவர்களை, இப்பகுதியிலுள்ள பாதுகாப்பு அரண்கள் வெறுக்க வைத்துவிடும். புண்ணிய பூமிக்குள் அமைதியும் இன்றில்லை.

அதேபோல், வழிபாட்டு நகரம் என்பதைவிட வர்த்தக நகரங்களில் கூட இல்லாத துர்ஒழுக்கங்கள் இங்கு மலிந்து போய் விட்டன. 90 வீதமானவர்கள் சிறுபராயத்தை அனுபவிக்காது பெரியோராகி விட்டனர். சிறுமிகள் பலதரப்பட்ட அவஸ்தைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். முன்னர் சமூகத்தினால் வெறுத்தொதுக்கப்பட்ட விடயங்கள் இன்று வெளிப்படையாக இப்பொழுது இடம் பெறுகின்றன. ஒழுக்கக் கேடான விடயங்களினால் நகரம் மலிந்து போயுள்ளது. இந்நிலைமைக்கு ஏதாவது தீர்வு மாற்று இருக்கலாம். இந்நிலைமைக்கு நாம் அனைவருமே பொறுப்புச் சொல்ல வேண்டும். மேலும் இந் நிலைமை நீடிக்காதிருக்க வழி செய்ய வேண்டும்.

**நகரத்திற்கு புறம்பாக இடம் ஒதுக்குங்கள்**

**— அனுராதபுர ஆளுநர் ஜயம்பதி ஹெட்டியாரச்சி**



இன்று இலங்கையில் நிலவும் யுத்தத்துடன் வளர்ச்சியுறும் பாலியல் சந்தையொன்றும் உள்ளது. இது வியட்நாம் போன்ற நாடுகளின் நிலைமைக்கு சமமானதாகும். நாம் இந்த நிலைமையை இராணுவத்தினரின் சார்பிலும் பார்க்க வேண்டும். விடுமுறையை கழித்து விட்டு வடக்கிற்கு செல்லும் முன் அவர்கள் சந்திக்கும் தெற்கின் இறுதி நகரம் அனுராதபுரமாகும். அவர்கள் யுத்தத்திற்குச் செல்வது மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டாகும். அதனால் அனைத்தையும் அனுபவித்து விட்டுச் செல்லவே விரும்புகின்றனர். அதேபோல் யுத்தம் செய்து விட்டு விடுமுறைப் பெற்றுவரும் போது சந்திக்கும் முதல் நகரமும் இதுவாகும். இந்நிலைமையை தடுக்க வேறு மாற்று வழிகளை எடுக்கலாம். இராணுவத்தினரால் நகரத்திற்கு வெளியே அல்லது குறிப்பிட்ட ஒரு இடத்தில் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளவென இடம் ஒதுக்கலாம். பாலியல் தொழில் புரிவது சட்டரீதியாக இலங்கையில் தடை செய்யப்பட்டிருந்தாலும் தீயொழுக்கம் தடைசெய்யப்படவோ சட்டத்திற்கு முரணானதோ இல்லை.

**யுத்தத்திற்கு போகச் சொன்னால் மற்ற வசதிகளும் செய்து தரப்பட வேண்டும்.**

**— பெயர் கூற விரும்பாத பாலியல் தொழிலில் ஈடுபடும் வர்த்தகர்.**


நான் முன்னர் நண்பரொருவரின் முச்சக்கர வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தேன். அப்பொழுது இராணுவத்தினர் அடிக்கடி வந்து பயணம்போக அழைப்பார்கள். அவர்கள் தமது விடுமுறையை கழிக்க வரும் முன்னரேயே அனுராதபுரத் திலிறங்கி தமது பாலியல் தேவையை பூர்த்தி செய்து கொள்ள எம்மைத் தேடி வருவார்கள். எம்மிடம் அவ்வாறான இடங்கள் இருந்தால் கூறச் சொல்லுவார்கள். அவ்வாறு நான் இரண்டு வருடங்கள் சாரதியாகத் தொழில் புரிந்தேன். ஆனால் வருமானம் போதவில்லை. அதனால் நான் இந்தத் தொழிலை ஆரம்பித்தேன். இப்பொழுது நல்ல வருமானம். அவர்களுக்கும் நல்ல வருமானம்.

ஆனால் இப்பொழுது சட்ட விரோதமாக இத்தொழில் கருதப்படுவதால் பலத்த நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. பாலியல் சேவையை பெற்றுக் கொள்ள வருபவர்களிடமிருந்து பெறும் பணத்திலிருந்து மூன்றிலொரு பகுதியை தாம் இவர்களுக்கு வழங்க வேண்டியுள்ளது. சட்ட விரோதம் என்பதால் சிலருக்கு லஞ்சம் கொடுக்க வேண்டியுள்ளது. எங்கள் வருமானத்தைப் பார்த்தால் அதற்கு மேல் கொடுக்க முடியாது. அதனால் இதனை சட்ட ரீதியாக்கினால் யாருக்கும் அநீதி ஏற்படாது. சும்மா இருந்து பணம் உழைக்கும் தரகர்களின் வருமானத்தையும் இவர்களுக்கே பெற்றுக் கொடுக்கலாம். அதேபோல் மாதக் கணக்கில் துன்பப்பட்டு வரும் இளைஞர்களுக்கு உளவியல் ரீதியாக இத்தொழிலின் மூலம் பலம் கிடைக்கின்றது. மறுபுறம் யுத்தத்திற்கு போ போ எனக் கூறும் போது அவர்களுக்கு ஏற்ற வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

பொதுவாகவே பாலியல் தேவைகள் அனைவருக்கும் பொதுவானது. அதனால் இவ்வாறான இடங்களை சட்டரீதியாக்கி கிரமமான முறையில் அச்சேவையைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமாயின் தற்போது நிலவும் பாலியல் வன்முறைகள் எண்ணிக்கை குறையக்கூடும்.

**சட்ட ரீதியாக்குவதன் மூலம் நிலைமையை கட்டுப்படுத்தலாம்.**

**— விசேட வைத்தியர் சர்தா ஹேமப்பிரிய**



அனுராதபுரத்தை இராணுவத்தினர்கள் தற்காலிக தரிப்பிடமாக பாவிக்கின்றனர். இந்த நகரம் பாலியல் தொழிலுக்கு ஏற்ற சாதகங்களைக் கொண்டிருக்கின்றது. திருமணமான பெண்கள், பாலியல் தொழில் செய்யும் பெண்கள் என பெண்கள் பலர் உள்ளனர். இன்று அனுராதபுரத்தில் பகல் நேரத்தில் பயமின்றி நடமாட முடியாத நிலைமையும் உண்டு. அதே போல் சமூக நோய்களுக்குள்ளாகும் சதவீதமும் அதிகம். இங்குள்ள வைத்தியசாலைகளுக்கே அதிகமான நோயாளிகள் வருகின்றனர். பாலியல் தொழிலை சட்ட ரீதியாக்குவதன் மூலம் இந்நிலைமையை ஓரளவு கட்டுப்படுத்தலாம். ஆனால், அத்தொழிலில் ஈடுபடும் பெண்கள் இதனால் நன்மையடைவர் என நான் கருதவில்லை. இவர்களது தொழில்சார் பொறுப்பாளர்கள் இவர்கள தொடர்பான பொறுப்புடன் நடந்து கொள்வதில்லை. அதே போல எமது நாட்டில் நிலவும் கலாசார கருத்தியல்களின்படி இத் தொழிலை சட்டரீதியாக்கியதன் பின்னர் பிரசித்தமாக இவ்வாறான இடங்களுக்குச் செல்ல நபர்கள் முன்வருவார்களா என்பதும் சந்தேகமே.

**இது உலகத்தின் புராதன தொழில்**

**— உயர்நீதிமன்ற சட்டத்தரணி கருணாரத்ன ஹேரத்**

எந்தவொரு நாட்டிலும் யுத்தத்து ன் சமூக வீழ்ச்சியொன்றும் கட்டாயம் இடம் பெறும். இங்கும் அவ்வாறே நிகழ்ந்துள்ளது. அனுராதபுரத்தில் இவ்வாறான விடயங்களுக்கு சாதகம் அதிகம். வடக்கிலிருந்து தெற்குக்கு வரும் இராணுவத்தினர் முதலில் இங்கு தான் வருகின்றனர். அதேபோல் அவர்களது கைகளில் பணமும் தாராளமாகப் புரளும். இதனால் பாலியல் தேவைகளுக்கு அதிகம் பணத்தைச் செலவழிக்கின்றனர். அதேபோல் பிரதேசத்தில் நிலவும் வறுமையும் அப்பெண்களை இவ்வாறான தொழிலில் ஈடுபட வைக்கின்றது. இந்த அடிப்படையில் 60க்கும் மேற்பட்ட பாலியல் விடுதிகள் உள்ளன. சட்ட விரோதமானாலும் பரவலாக இடம் பெறும் இந்த பாலியல்தொழில் சட்டரீதியாக்கப்பட்டால் அதிகம் நன்மைகள் ஏற்படலாம். இதற்கு பல காரணங்கள் உண்டு. இப்பொழுது இத்தொழில் ஒழுங்கின்றி நடைபெறுகின்றது. இதனால் இதில் ஈடுபடும் பெண்கள் அதிகம் நோய்களுக்குள்ளாகின்றனர். அதேபோல் அதிகப் பணத்தைக் கொடுக்க வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. ஆய்வுகளின் மூலம் ஒரு மணித்தியாலத்திற்கு ரூ. 750 தொடக்கம் 1000 வரையில் அறவிடப்படுகின்றது என தெரிய வருகின்றது. அதனால் இரு சாராருமே சுரண்டலுக்குட் படு கின்றனர். அதேபோல் கருக்கலைப்பு செய்வதனால் ஏற்படும் அதன் பிரதி விளைவுகள் என பலவற்றைக் கூறிக் கொண்டே செல்லலாம்.

பாலியல் தொழிலை சட்ட ரீதியாக்குவதன் மூலம் இவற்றை கட்டுப்படுத்த முடியும். அது நமது கலாசாரத்துடன் ஒன்றாதது அல்ல. உலகத்தின் பழமையான தொழில் இதுவாகும். அதனை சட்ட ரீதியாக்காததனால் தீமை தான் ஏற்படும். அனுராதபுரத்தில் பாலியல் தொழில் உயர் மட்டத்தில் உள்ளதென்பது என்னவோ கசப்பான உண்மையாகும்.

நன்றி- ராவய

நன்றி - நூலகத்திட்டம்



# கொஸோவோவுக்கு இனி நடக்கப் போவது என்ன?

செக் நாட்டின் ஜனாதிபதியும் புகழ்பெற்ற எழுத்தாளருமான வஸ்லாவ் ஹாவெல், சில வாரங்களுக்கு முன்பாகக் கனடியப் பாராளு மன்றத்தில் உரையாற்றியிருந்தார். கொஸோவோ நிலைமை பற்றியும் நேட்டோ நாடுகள் யூகோஸ் லாவியா மீது பொழிகிற குண்டு மழையையும் பற்றிக் குறிப்பிட்ட போது, நேட்டோ நடத்துகிற இந்த யுத்தம் மட்டும் தான் அறம் சார்ந்த அல்லது மானுட விழுமியங்களைப் பேணுவதற்காக இடம் பெறுகிற யுத்தம் என்று குறிப்பிட்டிருந்தார்.



நேட்டோ நாடுகளும், அமெரிக்காவும் தமது சொந்த நலன்களைப் பாதுகாப்பதற்காக அன்றி, கொஸோவோ மக்களுக்கு எதிரான இனத்துவச் சுத்திகரிப்பை நிறுத்துவதற்காகவும் சேர்பியர்கள் கட்டவிழ்த்து விட்ட இனப் பயங்கர வாதத்தை நிறுத்துவதற்குமான ஒரு அறப்போராட்டமே இது என்பது தான் நேட்டோவை ஆதரிக்கும் புத்திசீவிகள், அரசியலாளர் போன்ற பலரது நிலைப்பாடாகும்.

வஸ்லாவ் ஹவைல் தலைமை வகிக்கிற செக் நாட்டில் இருந்து ஆயிரக்கணக்கான ரோமா மக்கள் அகதிகளாக வெளியேறுவதும் ரோமா சிறுபான்மை மக்கள் மீது செக் நாட்டில் காட்டப்படுகிற மோசமான இனவாதமும், ஒதுக்கலும், ஒடுக்குமுறையையும் கவனத்திலெடுத்தால் எவ்வளவு தான் தீவிரமான, சிறந்த எழுத்தாளர் கூட 'அரசியல் யதார்த்தம்" அல்லது நடைமுறை அரசியல் சுழலுள் சிக்குண்டு போகிற போது அறவிழுமியங்களை இழந்து தான் போகிறார்கள்.

வஸ்லாவ் ஹவைலும் ஏராளமான நேட்டோ சார்பு அரசியலாரும் புத்திசீவிகளும் முன்வைக்கிற வாதங்கள் எவ்வளவு தூரம் பொருத்தமானவை?

மஸாச் சூசெற்ஸ் தொழி நுட்ப நிறுவனத்தில் பேராசிரியராகப் பணி புரிய வரும் மொழியியல் துறையில் கீர்த்தி பெற்றவரும் அமெரிக் காவின் இரண்டக நிலை யைச் சலிக்காது அம்பலப்படுத்தி வருபவருமான நோம் சொம்ஸ்கீ நேட்டோ குண்டு வீச்சுகள் தொடர் பாக எழுதியுள்ள கட்டுரையொன் றின் சாராம்சத்தை இந்தக் கேள்விக் கான பதிலாகத் தருகிறோம்.

கொஸோவோவில் ஒரு தீவிரமான பிரச்சினை உள்ளது என்பது உண்மை. உயிரழிவுகளும் சேதங்களும் கொஸோவோ மாகாணத்தில் இருக்கிற அல்பேனிய இனத்துவ மக்களையே பெரிதும் பாதித்துள்ளன. 2000 பேர் வரை கொல்லப்பட்டும் லட்சக் கணக் கானோர் அகதிகளாகவும் உள்ளனர். இந்தச் சூழலில் வெளியார் செய்யக்கூடியவை என மூன்று விஷயங்களை இனங் காணலாம்.

1. பிரச்சினையையும் அழிவையும் மேலும் அதிகரித்தல்

2. சும்மா இருத்தல்.

3. பிரச்சினைகளையும் அழிவையும் குறைக்க, நிறுத்த முயல்தல்.

அழிவிலும், மனித இழப்புக்களிலும் அகதிகள் எண்ணிக்கையையும் பொறுத்தவரை கொஸோவோவின் அளவுக்கு வரக்கூடிய ஏனைய சில நாடுகளை எடுத்துக் கொள் வோமானால் கொஸோவோவுக்கு ஏன் இந்த முக்கியத்துவம் என்பது பற்றி நாம் இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும்.

முதலில் கொலம்பியாவை எடுக்கலாம். அமெரிக்க அரசின். State Department அறிக்கைகளின்படி கொலம்பிய அரசும் அதனுடைய ராணுவ துணைப்படைகளும் வருடாந்தம் 2000 சிறுபான்மை மக்களைக் கொன்று வருகின்றன. 10லட்சம் மக்கள் சென்ற வருடம் அகதிகளாகி உள்ளனர். ஆனால் அமெரிக்கா மற்றும் நேட்டோவின் நிலைப்பாடுதான் என்ன?

கடந்த பல வருடங்களாகவே மேலை நாடுகளதும் அமெரிக்காவினதும் ஆயுத உதவியையும் ராணுவப் பயிற்சியையும் பெறுவதில் முதலிடத்தில் இருப்பது கொலம்பியாவாகும். இந்த உதவி இப்போது மேலும் அதிகரிக்கப் பட்டுள்ளது. கொலம்பியா ஜனாதிபதி கவிரியாவின் ஆட்சியையும் மனித உரிமைகளை மதிப்பதை யும் கிளின்டன் புகழ்ந்து பேசி யிருக்கிறார்.

எனவே இங்கு அமெரிக்காவும் நேட்டோவும் செய்தது என்ன? பிரச்சினைகளையும், அழிவுகளையும் அதிகரித்தமை.

அடுத்ததாகத் துருக்கியை எடுத்துக் கொள்ளலாம். குர்தீஷ் மக்கள் மீதான துருக்கியின் ஒடுக்குமுறையும் அதன் விளைவாக அகதிகளாக் கப்பட்ட குர்தீஷ் மக்களின் எண்ணிக்கையும் மிக இலகுவாகக் கொஸோவோவை விஞ்சி விடும். இந்த ஒடுக்கு முறையின் உச்சம் 1994 ஆம் ஆண்டு இடம் பெற்றது. குர்தீஷ் மக்களின் ஆயிரக்கணக்கான கிராமங்கள் தீயிலிடப்பட்டன. ஆயிரக் கணக்கான மக்கள் ராணுவத்தால் கொல்லப்பட்டனர். பத்து லட்சத்துக்கும் அதிகமானோர் அகதிகளாக டியார்பக்கீர் எனும் பிரதேசத்துக்குச் சென்றனர். அந்த வருடம் தான் அமெரிக்க ராணுவத் தளபாடங்களை வாங்கியதிலும் உதவியாகப் பெற்றதிலும் துருக்கி உலகிலேயே முதலாமிடம் வகித்தது.

துருக்கியும், கொலம்பியாவும் தாம் அமெரிக்க உதவியுடன் பயங்கரவாதத்துக்கு எதிராகப் போரிடுவதாகச் சொல்லிக் கொள்கின்றன. ஸீலோயோடன் மிலோசெவிச்சும் அதனைத்தானே சொல்கிறார்!

இதனைப் போல வேறும் பல உதாரணங்கள் இருக்கின்றன. ஐந்து லட்சம் ஈராக் சிறுவர்கள் மருத்துவ வசதிகளின்றி மடிய நேர்ந்தமை பற்றி, அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் மடலின் ஆல்பிறைட்டை ஒரு செய்தியாளர் கேட்டபோது, அவர் சொன்னது: இது ஒரு கடினமான தெரிவு தான். எனினும் எமது இலட்சியத்தை அடைய அது தேவையாக இருந்தமையால் எங்களுக்கு பயன்படக் கூடியதாகவும் இருந்தது.

கிளின்டன் நிர்வாகம் கொஸோவோ தொடர்பாக அடிக் கடி உச்சரித்து வரும் 'தார்மீகக் கடப்பாடு" பற்றிப் புரிந்து கொள்ள இப்பின்னணிகள் எமக்குத் தேவை.

நேட்டோவும்- பிரதான மாக அமெரிக்காவும் யூகோஸ்லாவியாவைக் குண்டு வீசித் தாக்கி வருவதால் இப்போது நிகழ்ந் திருப்பது என்ன? கொஸோவோ மக்கள் மீது பயங்கரமான தாக்குதல்கள் மேலும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. லட்சக் கணக்கானோர் அகதிகளாக விரட்டியடிக்கப் பட்டுள்ளனர். இப்படி நடக்கு மென்று, தமக்கு ஏற்கெனவே தெரியும் என நேட்டோ தளபதி வெஸ்லி கிளார்க் தெரிவிக்கிறார். அதாவது கொஸோவோ சூழலில் பிரச்சினைகளையும் அழிவையும் மேலும் அதிகரிப்பதே நடந்தேறியுள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் அங்கீகார மின்றிய அல்லது அச்சபையை கருத்திலெடுக்காத நேட்டோவின் இன்றைய நடவடிக்கைகள் சர்வதேச ஒழுங்கையும் சிதைத்து விட்டுள்ளது.

எனவே கொஸோவோவுக்கு இனி நடக்கப் போவது என்ன? உண்மையில் இந்தக் கேள்விக்குப் பதில் இல்லை. அமெரிக்காவும் நேட்டோவும் தெரிந்தெடுத்திருக்கிற பாதை கொஸோவோ மக்களுக்கு மேலும் அழிவைக் கொடுத்துள்ளது. குறுகிய காலத்துக்கு அல்பேனிய இனத்துவ மக்களுக்கு சிலவேளை கொஸோ வோவில் ஒரு தற்காலிக பாதுகாப்பு ஏற்பட்டாலும் நீண்ட காலக் கண்ணோட்டத்தில் நிலைமைகள் மாறலாம். கொஸோவோ விடுதலை இயக்கத்தை பயங்கரவாத இயக்கம் என மெடலின் ஓல்பிறைட் அம்மையாரும் அமெரிக்க அரசும் பிரகடனம் செய்துவிட்டால் என்ன ஆவது?

'சேர்பியா மீது விழுகிற ஒவ்வொரு குண்டும், கொல்லப்படுகிற ஒவ்வொரு இனத்துவ அல்பேனியரும், சேர்பியரும் இனத்துவ அல்பேனியரும் சமாதானமாக வாழமுடியும் என்பதை நீண்டகாலக் கண்ணோட் டத்தில் சாத்தியமற்ற தாக்குகிறது" என்ற Financial Times இன் குறிப்புரையை நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

அமெரிக்காவின் நலன்களும் நேட்டோவின் ஏனைய அங்கத்துவ நாடுகளின் நலனும் இந்த யுத்தத்தில் சம்பந்தப்பட வில்லை என்பது ஆதாரமற்ற ஒரு கூற்றாகும். யூகோஸ்லாவியா, பொஸ்னியா, கொஸோவோ போன்ற போல்கன் பிரதேச நாடுகளின் அரசியலும், உறுதிப் பாடும் நேட்டோ நாடுகளைப் பாதிக்கிற ஒன்று தான். போல்கன் பிரதேசத்தில் அமைதியும் சமாதானமும் நிலவாதவரை நேட்டோ நாடுகளுக்கும் நிம்மதியான நிலை இருக்காது.

---

## கொஸோவோச் சிக்கலின் பின்னணி

இப்பொழுது யூகோஸ் லாவியா என்று அழைக் கப்படுகிற நாடு மூன்று மாநிலங் களின் கூட்டாட்சி அமைப்பாகும். சேர்பியா, மொன்ர நிக்ரோ, கொஸோவா ஆகியவையே இந்த மாநிலங்கள். சேர்பியர்கள் தான யூகோஸ்லாவியாவின் பெரும் பான்மை மக்கள். அவர் களுடைய மொழி சேர்பிய குரேஷிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த சேர்பியன். மதம்: பழமைக் கிறிஸ்தவம். கொஸோவோ மாநிலத்தின் தொண்ணூறு வீதமான மக்கள் அல்பேனிய இனத்த வராகவும் முஸ்லிம்களாகவும் உள்ளனர்.

டிட்டோவின் காலத்தின் போது யூகோஸ்லாவியா பெரிய தொரு குடியரசாக இருந்தது. அப்போது குரோஷியா, பொஸ்னியா ஹேர்சகோவினா, மஸிடோனியா, மொன்ர நிக்ரோ, சேர்பியா ஆகியவை உள்ளடங்கிய பிரதேசமே யூகோஸ்லாவியாவாக இருந்தது. டிட்டோவின் காலத்தில் இனத்துவ, தேசிய வாதங்கள் வெளிக் கிளம்பவில்லை. மேலும் வெவ்வேறு இனத்துவக் குழுக்களுக் கிடையிலும் பரந்த உறவுகளும் இருந்தன.

சோவியத் யூனியனின் உடைவு மற்றும் அதனைத் தொடர்ந்த நிகழ்வுகள் யூகோஸ் லாவியாவையும் பாதித்தன. மொன்ரநிக்ரோ, மஸிடோனியா ஆகியவை தனியரசாக விரும்பின.

சேர்பியத் தலைவர்களில் மோசமான சேர்பிய மேலாதிக்க வாதியான மிலோ செவிச்சும் அவருடைய 'சோஷலிஸ" கட்சியும் தான் போல்கனில் பெருயுத்தம் மூளக் காரணமாக இருந்தவர்கள் எனலாம். அகன்ற சேர்பியா என்ற பெருங்கனவே இன்றைய சேர்பிய தேசியவாதத்தின் மையமாக இருக்கிறது.

கொஸோவோ மாநிலம் டிட்டோவின் அரசின் கீழ் நிறைவான சுயாட்சி பெற்ற ஒரு மாநிலமாக இருந்து வந்தது எனினும் அங்குள்ள சேர்பியர் களுடைய முறைப் பாடுகளைத் தொடர்ந்து மிலோசவிச் கொஸோவோ மாநிலத்தின் சுயாட்சியை ரத்துச் செய்து விட்டார். இதன் பின்னரே அல்பேனியர் களுடைய தனி நாட்டு இயக்கம் மெல்ல மெல்ல வளர ஆரம்பித்து இப்போது கொஸோவோ விடுதலை இயக்கம் (KLA) என வளர்ந்துள்ளது.

KLAயை பயங்கரவாதிகள் என வர்ணிக்கும் மிலோசெவிச்சின் அரசு பிரச்சினையின் காரணம் பயங்கரவாதம் என்கிறது. மிலோசெவிச்சின் அரசில் கருத்துச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் எதுவும் கிடையாது. மிலோ செவிச்சை விமர்சித்த பத்திரிகை ஆசிரியர் ஒருவர் சென்ற மாதம் ராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கொஸோவோ மாநிலத்திலிருந்து முழு அல்பேனிய இனமக்களையும் வெளியேற்றி விடுவது என்பதே மிலோசெவிச் தலைமையிலான ஷேர்பியர்க ளுடைய இலக்கு. ஏற்கனவே 763,000 மக்களை வேறு நாடு களுக்கு அகதிகளாக வெளியேற்றி விட்டனர்.

நேட்டோ ஆதரவுடன் கொஸோவோ பிரச்சினைக்காகத் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தில் மிலோசெவிச் கையொப்பமிட மறுத்து வருகிறார். பிரான்ஸ் நாட்டின் றம்புயே எனுமிடத்தில் உருவான இந்த ஒப்பந்தம் கொஸோவோ மக்களுக்கும் மாநிலத்துக்கும் சுயாட்சி வழங்குகிறது. எனினும் கொஸேவோ அல்பேனியா மக்கள் தனிநாடு உருவாக்குவதை ஒப்பந்தம் ஆதரிக்கவில்லை கொஸோவோ விடுதலை ராணுவம் (KLA) இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கைச் சாத்திட்டுள்ளது.

நேட்டோ படைகள் ஒப்பந்தத்தை அமுல்படுத்துவ தற்காக யூகோஸ்லாவியாவுள் நுழைவதை சேர்பியர் ஏற்கவில்லை. ரஷ்யாவின் தூது முயற்சிகளும் பலன் தரவில்லை. இப்போது ஐக்கிய நாடுகள் சபை சார்பான ஒரு அமைதிப்படையை மிலோசெவிச் ஏற்றுக் கொள்ளக் கூடும் என்ற தகவல் வெளியாகி உள்ளது. ஐக்கிய நாடுகள் அவையின் குழு ஒன்று மனிதாபிமான அடிப்படையில் யூகோஸ்லாவியாவையும் கொஸோவோவையும் சென்று பார்வையிட இருக்கிறது.

நன்றி - நூலகத்திட்டம்

# ஜே.வி.பி.யின் வளர்ச்சியும் அரசு வகுத்து வரும் நவீன வியூகங்களும்!

தனிமைப்படுத்துவதிலும் தாம் தனிமைப்படுத்தலிருந்து மீள்வதிலுமே எந்தவொரு வெற்றியும் தங்கியிருக்கும்.

இம்முறை நடைபெற்று முடிந்துள்ள ஐந்து மாகாண சபைகளுக்குமான முடிவுகளிலும் ஜே.வி.பி. இந்த வழிமுறையைக் கடைப்பிடிக்க அதிக அக்கறை காட்டியிருந்தது. மக்களிடம் தமது விவேகத்தை எடுத்துரைப்பதில் அக்கறை காட்டுவதிலும் பார்க்க மக்களிடம் எதிரியை அதிகபட்சம் அம்பலப்படுத்துவதே முதலில் செய்ய வேண்டிய காரியம் என்பது ஜே.வி.பி.யின் இன்றைய வழிமுறை. இன்று ஆயுதப் போராட்டம், புரட்சி, என்பவை தொடர்பாக பேசுவதைக்கூட தவிர்த்து வருவது மாத்திரமன்றி, வன்முறைக்கு தாங்கள் எதிரானவர்கள் என்றும் ஜனநாயக வழியே சரியான வழியென்றும், பாராளுமன்ற வழிமுறையை தாங்கள் நாடியிருப்பதாகவும் ஜே.வி.பி.யினர் கூறிவருகின்றனர்.

கடந்த வட மேல் மாகாண சபைத் தேர்தல் மற்றும் அதற்குப் பின்னர் நடந்த ஐந்து மாகாண சபைகளுக்குமான தோதல்களிலும் ஜே.வி.பி. உறுப்பினர்கள் மீது தேசிய முதலாளித்துவக் கட்சிகளான ஐ.தே.க. மற்றும் பொ.ஐ.மு ஆகியவை தங்களின் கைவரிசையைக் காட்டி வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டிருந்தனர். அரச யந்திரம், குண்டர்கள், பாதாள உலக கோஷ்டியினர், என சகலவற்றையும் பிரயோகித்து இந்த வன்முறைகளை ஏவிவிட்டிருந்தன, பெருங்கட்சிகள் இரண்டும். அப்போதும் ஜே.வி.பி.யினர் அவர்களுக்கு எதிராக பிரயோகிக்கப்பட்ட வன்முறைகளை வன்முறைகளால் எதிர்கொள்ளவில்லை. மாறாக சகலவற்றுக்கும் துணிந்து முகம் கொடுத்தனர். தங்களுக்கு எதிரான தாக்குதல்களுக்கு அதிகம் வாய்ப்பு உண்டு என்று கருதப்பட்ட இடங்களிலெல்லாம் அவர்கள் இருந்தார்கள். தங்களின் பிரயோகிக்கப்பட்ட சகல வன்முறைகளையும் அம்பலப்படுத்துவதிலும், அவற்றை எதிரிகளுக்கு எதிராக பிரச்சாரம் செய்வதிலுமே அதிகம் அக்கறை காட்டினார்கள். ஜே.வி.பி. இவ்வாறான இடங்களில் கனதியான அரசியலை மக்களிடம் போசாது தந்திரோபாய ரீதியில் "அவர்களும் இப்படித்தான் இவர்களும் இப்படித்தான். மணியை வெல்ல வைப்போம்.", "யானை, கதிரை திருட்டுக் கும்பலை தோற்கடிப்போம்." போன்ற கோஷங்களை எழுப்பினர். இது ஜே.வி.பி.க்கு சாதகமானதாகத் தான் ஆகியது. சமீப காலமாக இரு பெரும் கட்சிகளிலும் விரக்தியுற்று இருந்தவர்களை தங்களின் பால் கவர வைப்பதற்கு இவ்வகையான கோஷங்கள் பெருமளவு உதவின. தேர்தல் அரசியலைப் பொறுத்தவரை ஜே.வி.பி.யின் அரசியலை விளங்கிக் கொண்டு ஆதரிப்பவர்கள் ஒரு புறமிருக்க இரு பெரும் கட்சிகளின் மீதும் வெறுப்புற்று அக்கட்சிகளை பழிவாங்குமுகமாக ஜே.வி.பி.யை பலப்படுத்த வேண்டும் என்கின்ற கருத்தும் இன்று பரவலாக வளர்ந்து வருகிறது. தற்போது நடந்து முடிந்துள்ள மாகாண சபைத்தேர்தல்கள் முடிவுகளிலிருந்து இதனை தெளிவாக அடையாளம் காணலாம்.

ஜே.வி.பி. நடந்து முடிந்த தேர்தல்களில் ஆதிக்க சக்திகளின் அடக்குமுறைகளின் மத்தியிலும் அது ஒரு தீர்மானகரமான சக்தியாகத் தன்னை நிலைநாட்டியதையும், அது அவற்றை எதிர்கொண்ட விதமும், இது வரை தொடர்ச்சியாக ஜே.வி.பி.யை விமர்சித்து கண்டித்து வந்த எழுத்தாளர்கள், புத்திஜீவிகள், இடதுசாரிகள் போன்றோர் ஜே.வி.பி.க்கு ஆதரவாக பெருமளவு பேசியும், எழுதியும் வருவதை தொடர்பு சாதனங்களில் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட விவாதங்கள், கலந்துரையாடல்கள், செய்திகள் என்பவற்றிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது. குறிப்பாக பத்திரிகையைப் பொறுத்தவரை ஜே.வி.பி.க்கு எதிராக இது வரை எழுதி வந்த ராவய, லக்பிம, யுக்திய போன்ற பத்திரிகைகளிலும் இந்த மாறுதல்களைக் காணமுடிகிறது அவற்றின் ஆசிரியர்களும் முன்னர் போல ஜே.வி.பி.யின் கடந்தகால அராஜகங்களைக் கூறிக்கொண்டே இருப்பதிலிருந்து சற்று மாறி ஜே.வி.பி.யின் மீது தொடுக்கப்பட்டு வரும் வன்முறைகளை எதிர்த்துப் பேசி வருவதுடன், அவர்களை மீண்டும் வன்முறை அரசியலுக்குள் தள்ளிவிடக் கூடாது என்றும் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்

இந்த முறை தமிழர்களின் வாக்குகள் ஜே.வி.பி.க்கு கிடைத்திருக்க வாய்ப் பிருக்கவில்லை. அப்படி கிடைத்திருக்கக் கூடிய தமிழ் வாக்குகளும் பிரதான கட்சிகளைப் பழிவாங்கும் வாக்குகளாகத் தான் இருக்க முடியும் என விமர்சகர்கள் பலர் சுட்டிக்காட்டியிருந்தனர். ஜே.வி.பி. இன்னமும் தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து காட்டி வரும் அக்கறையீனம், சுயநிர்ணய உரிமைக்கு எதிரான நிலைப்பாடு என்பன ஜே.வி.பி.யிடமிருந்து தமிழ்மக்களை அந்நியப்படுத்தியிருப்பது உண்மையிலும் உண்மை.

இவை எவ்வாறிருப்பினும் இம்முறை நடந்து முடிந்துள்ள தேர்தல் எதிர்வரும் தேர்தல் முடிவுகளை பற்றி கணிக்கும் ஒத்திகைத் தேர்தலாக இருந்தது என்ற வகையில் அத் தேர்தல் முடிவுகளின்படி ஜே.வி.பி.யானது ஆளும் சக்திகளை நிர்ணயிக்கிற ஒரு சக்தியாக வளர்ந்திருப்பதை உணர்த்துகிறது. எனவே இனி வரப்போகும், மத்திய அரசை நிர்ணயிக்கின்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலிலும் இதே நிலைமை தோன்ற அதிகம் இடமிருப்பதையும் தெட்டத் தெளிவாக உணரக்கூடியதாக இருக்கிறது. இதனை தென்னிலங்கையின் சிங்களத் தரப்பில் நடந்து வரும் அரசியல் விவாதங்களிலிருந்து அதிகம் கவனிக் கலாம். ஒரு நிலையில்லாத ஆட்சி அமைவதற்கு அதிகம் வாய்ப்பு இருப்பதை சகலரும் உணர்ந்துள்ள நிலையில் பிரதான கட்சிகள் அதிகம் கலவரமடைந் திருப்பதையும் சமீப கால அவற்றின் அரசியல் வியூகங்களிருந்து அவதானிக்க முடிகிறது.

இந்த நிலை உருவாக்கியிருப்பதானது பொ.ஐ.மு. மற்றும் ஐ.தே.க. ஆகிய பிரதான முதலாளித்துவ கட்சிகளுக்கும் பெரும் அச்சத்தை உண்டுபண்ணியிருக்கிறது. இனி ஜே.வி.பி.யை எப்படியேனும் அழித் தொழிக்கும் முயற்சியில் அவை திட்டமிட்டு ஈடுபடக்கூடிய வாய்ப்புகள் உண்டு. ஜே.வி.பி.யைப் பொறுத்தவரை அது 1993இல் மீண்டும் பகிரங்க அரசியலுக்குள் பிரவேசித்தது தொடக்கம் எதுவித வன்முறைக் குற்றங்களுக்கும் இலக்காகவில்லை. எதுவித குற்றங்களையும் சுமத்த முடியாத வண்ணம் அது அரசியல் நடத்திக் கொண்டிருக்கிறது. இந் நிலையில் அரசைப் பொறுத்தவரை ஒன்றில் அதன் கடந்த காலத்தை மீண்டும் கிளறுவதன் மூலமோ, அல்லது போலிக் குற்றச்சாட்டுக்களை உருவாக்கி பழியை ஜே.வி.யின் மீது போடுவதன் மூலமோ தான் அதன் மீதான வேட்டையாடலைத்



தொடரமுடியும். அல்லது சட்டத்துக்குப் புறம்பாக அதிகார பலத்தைக்கொண்டு பாதாள உலகைக் கொண்டு அழித்தொழிப்பில் ஈடுபட முடியும். பிரேமதாச காலத்திலும் இந்த வழிமுறை கையாளப்பட்டதை நாம் நினைவிற் கொள்ளலாம். எப்படியோ ஜே.வி.பி.யை நசுக்கும் முயற்சியில் அரசு எந்தவகையிலும் ஈடுபட வாய்ப்புண்டு. அதன் வளர்ச்சியால் கலக்கமுற்றிருக்கும் பல்தேசியக் கம்பனிகள் மற்றும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏகாதிபத்திய சக்திகள் என்பன நிச்சயம் இந்த அழித்தொழிப்பில் நிச்சயம் நேரடி மற்றும் மறைமுக ஆதரவளிக்க வாய்ப்புகள் அதிகமுண்டு.

எதிர்வரும் தென்மாகாண சபைத் தேர்தலில் இந் நிலைமையை சமாளிக்கவென பல வியூகங்களை அமைத்திருக்கிறது. பொ.ஐ.மு. அரசாங்கம்.

அவற்றில் குறிப்பிட்டு சொல்லக்கூடியவை முழு அரச யந்திரத்தையும் தென்மாகாணத்தில் ஒன்று குவிக்கும் வகையில் பிரச்சாரம், திடீர் அபிவிருத்தி வித்தைகள், குண்டர் படைகளை குவிக்கும் முயற்சிகள் என செயற்பாடுகளை முடுக்கிவிட்டுள்ளது.

தேசிய புலனாய்வுப் பிரிவினரைக்கொண்டு ஜே.வி.பி.யின் கடந்த காலங்களைத் தோண்டும் முயற்சியில் இறங்கியிருப்பதை புதிய தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏற்கெனவே 1994இல் பொ.ஐ.மு. அரசாங்கம் பதவிக்கு வந்ததும் ஜே.வி.பி.யின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவென ஒரு விசேட புலனாய்வுப் பிரிவை உருவாக்கியிருந்ததை சரிநிகர் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தது. இதற்கிடையில் கடந்த 1998 இறுதியில் தேசிய புலனாய்வுப் பணியகம் '2005 திட்டம்" எனும் அறிக்கையொன்றை பாதுகாப்பு அமைச்சிடம் கையளித்திருந்தது. அவ்வறிக்கையின்படி ஜே.வி.பி.யானது 2005ஆவது ஆண்டு ஆகும் போது பாராளுமன்ற வழிமுறைக்கூடாக அதிகபட்சம் 12 வீதத்தை மட்டுமே அடைய முடியும் என்றும் அதன் பின்னர் ஜே.வி.பி.யால் பாராளுமன்ற வழிக்கூடாக சற்றும் அசைய முடியாது என்றும், அப்படியே நிலைபெத்து நிற்க முயற்சித்தால் ஒன்றில் ஏனைய இடதுசாரிக்-கட்சிகளைப் போல பாராளுமன்ற அரசியலிலேயே தொடர்ந்து இருநதுவிட வேண்டிவரும் என்றும் அல்லது போனால் அது பாராளுமன்ற வழிக்கு வெளியிலான அரசியலை நாட வேண்டி வரும் என்றும் அப்படியேற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டா என்று தொடாந்து கண்காணிக்க வேண்டிவரும் என்றும் தெரிவித்திருக்கிறது. இவ்வறிக்கை வெளியிடப்பட்டகையோடு புலனாய்வுப் பிரிவானது இரண்டு துணைப்பிரிவுகளை உருவாக்கியிருந்தது. அதில் ஒன்று DII-Directorate of Intelligence, மற்றது DFI-Directorate of Foriegn Intelligence. இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதைப் போல அரசு ஜே.வி.பி. குறித்து மிகுந்த கவனம் எடுத்து வருவதும் அதனை நசுக்க வாய்ப்புகளுக்காக காத்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது. அந்த வகையில் ஜே.வி.பி. அந்த வாய்ப்புகளை அளிக்காத வகையில் தனது தந்திரோபாயங்களை வகுத்து செயற்பட்டு வருவதையும் அதன் முன்னெடுப்பு களிலிருந்து அறிய முடிகிறது.

நடக்கவிருக்கும் தென் மாகாண சபைத் தேர்தலைப் பொறுத்தவரை அரசு வகுத்து வரும் வியூகங்களில் ஒன்றாக ஆளும் பொ.ஐ.மு.விலிருந்து ஜே.வி.பி.யை எதிர்கொள்வதற்காக டளஸ் அழஹப்பெருமவை (பாராளுமன்ற உறுப்பினர்) நியமித்தது. ஏனெனில் டளஸ் அழஹப்பெரும ஜே.வி.பி.யின் உறுப்பினராக இருக்காவிட்டாலும் ஒரு காலத்தில் அதன் ஆதரவாளராகவும், ஜே.வி.பி.யினருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்திருந்தவராகவும் இருந்தவர். ஜே.வி.பி. பற்றி பெரிதும் அறிந்தவர் அவர் என்று பொ.ஐ.மு கருதியது. ஆனால் அந்த முடிவினை பல பொ.ஐ.மு. பிரமுகர்கள் எதிர்த்திருந்ததால் பின்னர் அந்த முடிவு மாற்றப்பட்டு இறுதியில் மகிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அது போல ஜன விமுக்தி சாயோகித்தா பெரமுன (மக்கள் விடுதலை தோழமை முன்னணி) எனும் அமைப்பை ஜே.வி.பி.க்கு எதிராக களத்தில் இறக்கியுள்ளது. இவ்வமைப்பின் தலைவர் கமல் கருணாதாச என்பவர். இவர் முன்னாள் ஜே.வி.பி. உறுப்பினர். இக்கட்சியில் முன்னாள் ஜே.வி.பி. உறுப்பினர்கள் சிலர் உள்ளனர். கடந்த வருடம் இவர்களின் கட்சி பிரகடனப்படுத்தப்பட்ட போதே இவர்கள் பொ.ஐ.மு.வின் கருவிகள் என்பது அம்பலமானது. ஆரம்ப பத்ரிரிகையாளர் மாநாட்டில் இவர்கள் சுயவிமர்சனம் எனும் பேரில் ஒரு கைநுாலொன்றையும் வெளியிட்டனர். அதில் ஜேவி.பி.பற்றிய விமர்சனத்துக்குப் பதிலாக அதன் மீது அரசு கூறி வந்த அதே போலிக்குற்றச்சாட்டுகள் பிரச்சாரப்படுத்தப்பட்டிருந்தன. இக்கட்சியை பதிவு செய்யக்கோரி தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடப்பட்ட போதும் தேர்தல் ஆணையாளர் அதனை நிராகரித்தார். ஆனால் இம்முறை தென் மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் செய்யப்பட்ட போது தடல்புடலாக இக்கட்சி பதிவு செய்ய முயற்சித்தபோது உடனடியாக அது ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் இம்முறை தேர்தலிலும் அக்கட்சி போட்டியிடுகிறது. இக்கட்சியைப் பதிவு செய்வதில் அம்மையார் நேரடியாகவே தலையிட்டிருந்ததாக ஜே.வி.பி.யினர் கருத்து தெரிவிக்கின்றனர். தென் மாகாண சபைத்தேர்தலில் இம்முறை போட்டியிடும் ஜே.வி.பி. உறுப்பினர்கள் ஆரம்பகால தீவிர செயற்பாட்டாளர்கள். கட்சியின் ஆரம்பகால மத்திய குழு மற்றும் அரசியல் குழுக்களில் இருந்தவர்கள். கடந்த காலங்களில் அரச பயங்கரவாதத்துக்கு பலியானவர்கள். நீண்ட காலம் சிறைவாழ்க்கையையும், வதை முகாம் கொடுமைகளையும் அனுபவித்தவர்கள். இவர்கள் ஏனைய கட்சிகளின் வேட்பாளர்களோடு ஒப்பிடுகையில் பலமான பிரமுகர்கள். இறுதியாக தென்மாகாணத்தில் நடந்த தேர்தலில் ஜே.வி.பி.க்கு 65 ஆயிரம் வாக்குகள் அங்கு உள்ளன. அது மட்டுமே கிடைத்தால் கூட கணிசமான உறுப்பினர்களைப் பெறக்கூடிய வாய்ப்புகள் அங்கு உண்டு. ஆனால் அதனை விட அதிகம் எதிர்பார்க்கலாம் என்றே அதன் பின்னைய நிலைமைகள் தெளிவுறுத்துகின்றன.

பொ.ஐ.மு.வைப் பொறுத்தவரை தென்மாகாண சபைத் தேர்தலில் ஐ.தே.க.வைவிட ஜே.வி.பி.க்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொள்வதிலேயே அதிக அக்கறை காட்டிவருகிறது. ஏனெனில் ஐ.தே.க. எதிர்ப்பு வாக்குகள் பல கடந்த காலங்களில் பொ.ஐ.மு.வை வந்தடைந்தது. இன்றைய நிலையில் பொ.ஐ.மு.எதிர்ப்பு வாக்குகள் பல ஜே.வி.பி.க்கே செல்வது நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளிலிருந்து தெரிய வந்திருக்கறது. எனவே அதனைத் தடுக்கும் முயுற்சியிலேயே அதிக அக்கறை காட்டி வருகிறது. கடந்த வருடம் டீ.என்.எல். தொலைக்காட்சி சேவையில் நடந்த ஒரு கலந்துரையாடலில் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ. ளை கூறிய கூற்று இங்கு நினைவிற்கு கொண்டுவருவது பொருந்தும். ஐ.தே.க.வுக்கு எதிரான வாக்குகள் பொ.ஐ.மு.வை வந்தடைய வேண்டும். பொ.ஐ.மு.வுக்கு எதிரான வாக்குகள் நிச்சயம் ஐ.தே.க.வுக்குத்தான் கிடைக்க வேண்டும். இன்னொரு சக்திக்கு கிடைக்க விட முடியாது. அப்படி வராமலிருக்க இரு கட்சிகளுமே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டது ஜே.வி.பி.க்கு எதிராகத்தான். இப்படித்தான் ஒரு சந்தர்ப்பத்தில் இரு முதலாளித்துவ சக்திகளும் ஒன்று சேர்வார்கள் தான். அந்த கட்டம் தானா இது என்று தோன்றுகிறது. இனி ஒரு அடக்குமுறை நடக்குமாயிருந்தால் அதற்கு எதிராக நிச்சயம் இரு சக்திகளும் இணைந்து செயற்பட்டாலும் ஆச்சரியப்படு வதற்கில்லை. இதன் காரணமாகத்தான் எதிரியை மக்களிடம் இருந்து அந்நியப்படுத்துவதும், தாம் மக்களிடம் நம்பிக்கையை பெறுவதும் கட்டாயமான கடமையாக கொள்ளப்படுவது புரட்சிகர இயக்கங்களின் வழிமுறையாகிறது. ஜே.வி.பி. மீது அழித்தொழிப்பு பிரயோகிக்கப்பட்ட 1971, 1987-1990 ஆகிய இரு காலப்பகுதிகளில் முதலாளித்துவ அரச யந்திரம் இந்த வழிமுறையைத் தான் கையாண்டது. அவ்விரு சந்தர்ப்பங்களிலும் முக்கியமாக சக இடதுசாரி சக்திகளிடமிருந்து கூட மிகவும் அந்நியப்பட்டு இருந்தது. 1971இல் ஜே.வி.பி. மீதான அழித்தொழிப்பின் பின்னணியில் பாராளுமன்ற இடதுசாரி சக்திகள் தொழிற்பட்டார்கள். அதே போல 1987-1990 காலப்பகுதிகளில் இடம்பெற்ற அழித்தொழிப்பின் போது இடதுசாரிக் கட்சிகள் கருவிகளாகப் பயன்படுத்தப் பட்டார்கள். அக்காலப்பகுதியில் ஜே.வி.பி. அவ்விடதுசாரிக் கட்சிகளின் உறுப்பினர்கள் பலரைக் கொன்றது. அதன் விளைவாகவே அவர்களும் தற்காப்புக்கு ஆயுதம் ஏந்தத் தள்ளப்பட்டனர். சில இடதுசாரிகள் அரசோடு சேர்ந்து துணைப்படையாக நின்று அழித்தொழிப்பில் நேரடியாக ஈடுபட்டார்கள்.

அரசை அம்பலப்படுத்துவதிலும், அதனை தனிமைப்படுத்துவதிலும், அதே வேளை தம்மைப் பலப்படுத்துவதிலும் அக்கறை காட்டுவதற்கு முன்நிபந்தனையாக மக்களிடம் தம்மைப் பற்றி சரியான புரிதலை ஏற்படுத்தல் வேண்டும். அதற்கு அது சுயவிமர்சனத்தை வெளியிட்டாக வேண்டும். ஆனால் ஜே.வி.பி. தொடர்ச்சியாக விட்டுவரும் தவறு' கடந்தகாலம் பற்றிய சுயவிமர்சனத்தை வெளியிடாமல் காலம் தாழ்த்துவது. இதன் மூலம் கடந்தகால அதன் செயற்பாடுகள், அதன் நிலைப்பாடுகள் அனைத்தும் சரியானது தான் எனும் முடிவிலிருப்பதாக மக்கள் கருத வாய்ப்பை ஏற்படுத்தி விடுகிறது. சுயவிமர்சனத்தை வெளியிட அது தமக்குள் கூறிவரும் காரணம் என்னவெனில் அதனை எதிரிகள் இலகுவாகப் பயன்படுத்துவர் என்பதே. ஆனால் எதிரியைப் பொறுத்தவரை உண்மையைச் சொன்னாலும் சொல்லா விட்டாலும் தமது நிலைப்பாட்டிலிருந்து மாறப்போவதில்லை. மேலும் கட்சியாக அதனை ஒப்புக்கொள்ளாதவரை எதிரியின் போலிப்பிரச்சாரங்களுக்கும் வழியைத் திறந்துவிட்டதாகி விடுகிறது. எனவே மக்களிடம் தம்மை சுயவிமர்சனம் செய்வதற்கு தயங்கவோ, வெட்கப்படவோ, பின்வாங்கவோ எந்தவித நியாயங்களும் இருக்க முடியாது.

எப்படியோ ஜே.வி.பி. சமீபகாலமாக எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் அது பாராளுமன்ற வழிமுறைக்குள் சிக்கி விட்டதோ எனும் சந்தேகத்தை பரவலாக ஏற்படுத்தியுள்ளது என்பது தான் உண்மை.

-தலைக்கி

நன்றி - நூலகத்திட்டம்



# விக்கிரமபாகுவும் மேல் மாகாண சபாநாயகர் பதவியும் !

மேல்மாகாண சபைக்கு புதிய இடதுசாரிமுன்னணியினால் தெரிவு செய்யப்பட்டுள்ள நவ சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்னவுக்கு மேல்மாகாண சபையின் சபாநாயகர் பதவியை வழங்கும் முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சி கடந்த மாத இறுதிப்பகுதியில் ஈடுபட்டது. மேல்மாகாணத்தில் ஐ.தே.க. மற்றும் பொ.ஐ.மு. ஆகிய இரு கட்சிகளும் சமமான பலத்தைப் பெற்றிருந்த நிலையில் சிறிய கட்சிகளின் ஆதரவை நாடியிருந்தன இரு கட்சிகளும். ஆனாலும் இரு கட்சிகளுக்கும் பலமில்லாத நிலையில் 08 ஆசனங்கள் இருந்த ஜே.வி.பியின் உதவியை நாட முயற்சித்த போது அதற்கு ஜே.வி.பி. சம்மதிக்கவில்லை. எந்தவொரு கட்சிக்கும் தமது கட்சி ஆதரவளிக்கப் போவதில்லையென்றும் என்றாலும் ஆட்சியைக் கவிழ்க்கத் தாம் முயற்சி செய்யப் போவதில்லையென்றும் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சரியான பிரேரணைகளுக்கு தாம் ஆதரவளிப்பதாகவும் தெரிவித்திருந்தனர். இறுதியில் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், இந்திய வம்சாவளிப் பேரணி ஆகியவற்றின் உதவியுடன் பொ.ஐ.மு. ஆட்சியமைத்தது. இருந்த போதும் இது நிலையற்ற ஒரு ஆட்சியாகவே இருக்கிறது. இந்த நிலையில் சபாநாயகர் பதவியும் பொ.ஐ.மு.வுக்குப் போகாத வண்ணம் செய்வதற்கு ஐ.தே.க. முயற்சித்தது புதிய இடதுசாரி முன்னணியின் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னவை இப்பதவிக்கு சிபாரிசு செய்தால் அதனை ஜே.வி.பி.யையும் ஆதரிக்கக் கோரலாம் என்று கருதியது. இது குறித்து ஜே.வி.பி.யிடம் பேசிய போது அப்படியான ஒரு பிரேரணை கொண்டு வரப்பட்டால் தாங்கள் அதனை ஆதரிப்பதாகக் கூறிய ஜே.வி.பி. விக்கிரமபாகு இதனை ஏற்காவிட்டால் என்ன செய்வது என்று கேட்டிருக்கின்றனர்? அதற்குப் பின் அப்படி ஏற்காவிட்டால் மக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதிநிதி பந்துல குணவர்தனவை பிரேரிக்கின்றோம் சம்மதிப்பீர்களா என்று கேட்கவே ஜே.வி.பி.யும் ஒத்துக் கொண்டுள்ளது. இது குறித்து ஐ.தே.க. விக்கிரமபாகுவின் விருப்பத்தைக் கேட்டிருக்கிறது. பாகுவும் தான் கட்சியில் இது குறித்து பேசி முடிவெடுப்பதாகக் கூறி வந்துள்ளார்.



கடந்த ஏப்ரல் 30ஆம் திகதியன்று நவ சமசமாஜக் கட்சிக் காரியாலயத்தில் இது குறித்து முடிவு எடுக்குமுகமாக கட்சியின் மத்திய குழுவில் விவாதிக்கப்பட்டுள்ளது. அதில், அரைவாசிக்கு அரைவாசி உறுப்பினர்கள் இதனை எதிர்த்தும் ஆதரித்தும் இருக்கின்றனர். அன்றே நடத்தப்பட்ட அரசியல் குழுக்கூட்டத்தில் பாகு சபாநாயகர் பதவியை ஏற்பதனை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது குறித்து இறுதியான முடிவினை எடுப்பதற்காக மே 4ஆம் திகதிக்கு அக்கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. ஆனால் 3ஆம் திகதியன்று கூடிய புதிய இடதுசாரி முன்னணியின் தலைமைக் கமிட்டிக் கூட்டத்தில் அனைவரும் இந்த யோசனையை எதிர்த்திருக்கின்றனர். எனவே 4ஆம் திகதி பேசப்பட இருந்த கூட்டத்துக்கான அவசியம் அற்றுப்போனது.

புதிய இடதுசாரி முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அனைத்துக்கும் தலா ஒவ்வொரு வீட்டோ அதிகாரம் உண்டு. ஒருவர் எதிர்த்தாலும் போதும்.

பாகு இப்பதவியை ஏற்க வேண்டும் என்ற கருத்துடையவர்கள் முன் வைத்திருந்த கருத்துக்களின்படி பாகு ஒரு மாகாண சபை உறுப்பினராக இருந்து தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பதை விட ஒரு சபாநாயகராக கருத்து வெளியிடும்போது பலம் அதிகம் என்று தெரிவித்த அவர்கள் இதனை விட, பாகு இந்தப் பதவியை ஏற்காது போனால் அது இனவாதியான பந்துல குணவர்தனவுக்குப் போய் சேரும் அப்படி ஒரு இனவாதிக்கு இப்பதவி போவதற்கு நாங்கள் வழிவிட்டவர்களாவோம் என்று வாதிட்டனர்.

இதனை எதிர்த்துப் பேசியவர்கள் இந்தக் கட்டமைப்பில் எந்தப் பதவியையும் பாகு பெறக்கூடாது என்றும். இனவாதிக்கு இப்பதவி போகும் என்பதற்காக நாங்கள் அதனை ஏற்க வேண்டும் எனகின்ற வாதம் அரசியல் முதிர்ச்சியற்ற வாதமென்றும். அரசியலில் இப்படி பல இனவாதிகள் வந்து போகத்தான் போகிறார்கள் என்றும் அவ்வொருவ்ருக்காகவும் நாங்கள் எங்களின் நிலைப்பாடுகளை மாற்றுவதிலும் பார்க்க ஒட்டுமொத்த எமது அரசியலுக்கு சாதகமாக எது இருக்கிறது என்பதிலிருந்து முடிவுகளை எடுப்பதே சரியான வழிமுறை என்றனர். அத்துடன் சபாநாயகர் பதவியை பாகு ஏற்பதற்கூடாக உண்மையில் வெற்றியடையப் போபவர்கள் முதலாளித்துவ கட்சிகள் இரண்டும் தான் என்றனர். ஏனெனில் பாகு போன்ற ஒரு தீவிரமான ஒருவரை வெறும் சமாதானப்படுத்தி வைக்கும், சபையைக் கட்டுப்படுத்தும் பணியை தந்து அவரது குரலை கட்டுப்படுத்திவிடவோ இல்லாது செய்துவிடவோ முடியுமல்லவா என்றனர். அது எதிரிகளுக்கு சார்பானது என்றனர்.

பாகு பதவியை ஏற்க வேண்டுமென்ற நிலைப்பாட்டில் இருந்தவர்கள் இதற்கு பதிலளிக்கும் போது, பாகு பதவிக்கு ஆசைப்படுபவர் அல்லர் என்றும் அப்படி பதவிக்கு ஆசைப்படுபவராக இருந்தால் அன்றே வாசுவோடு சேர்ந்து கட்சியை பொ.ஐ.மு.வுக்கு பலியாக்கியிருப்பார் என்றும், சபாநாயகர் பதவி ஏற்றால் அவரது பணி குறைந்து விடாது என்றும் அவர் பேச வேண்டிய சந்தர்ப்பங்களில் பிரதி சபாநாயகரிடம் ஒப்படைத்துவிட்டுப் பேசலாம் என்றும் கூறினர்.

ஆனால் இதனை எதிர்த்தவர்கள், எமக்கிருப்பதோ ஒரே ஒரு உறுப்பினர் தான். அவரை அனுப்புவதே பிரச்சினைகளைப் பேசத்தான். பிரச்சினைகளையே சுமந்து கொண்டிருக்கும் ஒருவர் சபாநாயகர் பதவியை ஏற்றுவிட்டு அப்பொறுப்பை எந்தநேரமும் பிரதிசபாநாயகரிடம் ஒப்படைத்து விட்டு அவர் பேசுவது நடைமுறையில் சாத்தியமே இல்லை என்றும். இது கற்பனைக்கு மட்டுமே சரியாக இருக்குமென்றும். பாகு சபாநாயகராக இருந்து செயவதை விட சாதாரண உறுப்பினராக இருந்து பல மடங்கு சாதிக்கலாம் என்றும் வாதிட்டனர்.

இந்தப் பதவியை ஏற்பதில் பாகுவுக்கு விருப்பம் இருந்ததாக கட்சியின் மத்தியில் குழு உறுப்பினர்கள் மத்தியிலிருந்து கிடைத்த தகவல்களிலிருந்து தெரிகிறது. அப்படி ஏனைய எல்லோரும் இதற்கு உடன்பட்டு பாகு பதவியேற்றால் தான் தீக்குளிப்பதாக ஒரு தமிழ் உறுப்பினர் தெரிவித்தார். அவர் கடந்த தேர்தலில் கொழும்பு மாவட்ட வேட்பாளர்.

இறுதியில் சபாநாயகர் பதவிக்கு பொ.ஐ.மு.வே தனது கட்சியைச் சேர்ந்த ஒருவரை எதிர்ப்பில்லாமல் தெரிவு செய்தது.


புதிய இடதுசாரி முன்னணி தேர்தல் காலத்தில் திடீர் திடீர் என ஆரவாரமாக 'மேற்கொண்ட நடவடிக்கைகள் தேர்தல முடிந்ததோடு காணாமல் போனதாகவே படுகிறது. பொதுவாகவே நவ சமசமாஜக் சட்சிக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் பலமானது அதன் செயலின்மை குறித்த விடயம். தற்போது புதிய இடதுசாரி முன்னணியில் அதனுடன் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுக்கும் இதே விமர்சனம் பொருந்தும். இம்முறை நடந்த மே தினக்கூட்டத்துக்கான ஒழுங்குகளை மேற்கொள்வதிலும் நவ சமசமாஜக் கட்சியின் தொண்டர்களே முழுக்க முழுக்க ஈடுபட்டனர். அவ்வாறு ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்த ஒரு தொண்டர் முன்னணியிலுள்ள பலருக்கு நாங்கள் மேடை ஏற்படுத்திக் கொடுப்பது தான் மிச்சம். நாளைய மே தினத்துக்கு சொகுசாக வந்து மேடையைப் பயன்படுத்தி விட்டுப் போவார்கள் இந் நிலைமைக்கு எப்போது முடிவு வரப்போகிறதோ தெரியவில்லை என்றார். புதிய இடதுசாரி முன்னயின் இப்போக்கை அவதானிக்கையில் இது வெறும் தேர்தலுக்கான கூட்டுதானோ என எண்ணுமளவுக்கு அதன் செயலின்மை காணப்படுகிறது.

இதே வேளை தென் மாகாண சபைத் தேர்தலில் ஜே.வி.பி.யுடன் கூட்டு சேர்ந்து போட்டியிடும் முயற்சியில் புதிய இடதுசாரி முன்னணி ஈடுபட்டிருந்தது. எனினும் அது தோல்வியில் முடிந்தது. இதற்குரிய காரணம் இது வெறும் தேர்தல் கூட்டாகவே அமைக்கும் அடிப்படையையே கொண்டிருந்தது. ஜே.வி.பி.யைப் பொறுத்தவரை அது வேட்புப் பட்டியலிலுள்ள நபர்களுக்கு வாக்களிக்கக் கோருவதில்லை. கட்சிக்கும் கட்சியின் கொள்கைக்கும் வாக்களிக்குமாறே அவர்கள் பிரச்சாரம் செய்து வருகின்றனர். இம்முறை மே தின ஊர்வலத்தில் இந்த விருப்பு வாக்கு முறையை கேலி செய்யும் வகையில் நாய்க்கு மாலை அணிவித்து, இலக்கப்பலகையை அணிவித்து ஊர்வலம் சென்றதும் குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் புதிய இடதுசாரி முன்னணி நடத்தும் பேச்சுவார்த்தையானது பிரதிநிதித்துவத்தை நாடாத ஒரு பேச்சுவார்த்தையாக இருந்தால் மாறாக ஒரு குறிப்பிட்ட வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அப்படிப்பட்ட கூட்டு அமைந்தால் அது சாத்தியப்பட்டிருக்கும். ஆனால் பிரதிநித்துவ நாட்டத்தையே அதிகளவு கொண்டிருக்கும் புதிய இடதுசாரி முன்னணியைப் பொறுத்தவரை தென்மாகாண வபைத்தேர்தலில் போட்டியிடுவதாயின் அது தமது கட்சியின் அங்கத்தவர்களுக்கு வாக்களிக்கும்படி கோர வேண்டிவரும். அது ஜே.வி.பி. ஏற்கெனவே கொண்டிருக்கும் நிலைப்பாட்டை சிதைப்பதாக அமையும். அது நடைமுறையில் சாத்தியமில்லாமல் போனதன் பின்னணி இது தான்.

இதற்கிடையில் வாசுதேவ நாணயக்கார முன்னரே அறிவித்திருந்தபடி இம்மாதத்திலிருந்து பாராளுமன்ற எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து காட்டினார். இதற்கு அவர் அங்கம் வகிக்கும் லங்கா சமசமாஜக் கட்சியினர் எதிர்த்ததுடன் அவர் அப்படி செய்தால் அவர் கட்சி உறுப்புரிமையை இழப்பார் என்றும் தெரிவித்தனர். ஆனால் வாசுதேவ நாணயக்காரவோ, இதற்கு முன்னர் அவசரகால சட்ட பிரேரணைக்கு கட்சிஆதரவளிக்கக் கூடாது என்ற முடிவு எடுக்கப்பட்டபோது அதனை தொடர்ந்தும் மீறி வரும் அத்தாவுட செனவிரத்னவுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையையும் இது வரை எடுக்கவில்லை என்றும், பொ.ஐ.மு. சகல வாக்குறுதிகளையும் மீறி விட்டதென்றும், இன்று உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியத்துக்கும் கட்டுப்பட்டே ஆட்சியை நடத்துகின்றது என்றும், மக்களுக்கு பெரும் பொருளாதார சுமையை சுமத்தி விட்டுள்ளது என்றும் இனிமேலும் தான் அரசாங்கத்தில் இருந்தால் மக்களுக்கு துரோமிழைத்தவனாவேன் என்றும் தெரிவத்து வருகிறார்.

இது வரை ல.ச.ச.க. வாசு குறித்து இறுதியான முடிவு எதனையும் எடுக்கவில்லை. ஆனால் வாசு இலங்கையில் சகல இடதுசாரி அமைப்புகளையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கப் போவதாக அறிவித்துள்ளார். ஏற்கெனவே ஜே.வி.பி மற்றும் புதியள இடதுசாரி முன்னணி என்பன வாசு குறித்து மோசமான அபிப்பிராயம் இல்லை என்பதாலும் வாசுவின் முடிவை வரவேற்கின்றவர்களாகவும் இருக்கின்றன.

-மாடசாமி



நன்றி - நூலகத்திட்டம்



# கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உலக நாடக விழா

## சில அவதானக் குறிப்புகள்

வெ.அழகரத்தினம்


நாடகமும் அரங்கியலும், நுண்கலைகள் எனும் இரண்டு கற்கை நெறிகளை உள்ளடக்கியதாக செயற்படுகின்றது. இவை இரண்டுமே இரண்டு விதமான கற்கை முறைகளைக் கொண்டவை.

1. கோட்பாடு நீதியான கற்கைகள் (Theoriticals for activism) எனவே விரிவுரை மண்டப கற்பித்தலுக்கு அப்பாலும் பயிற்சிகள் வழங்கப்படுவது அவசியத் தன்மை வாய்ந்ததே. இதற்கான பிரயத்தனங்கள் பல மேற் கொள்ளப்பட்டும், பல பயிற்சிகள் வழங்கப்பட்டும் வந்துள்ளன. இந்தப் பின்னணியில் தான் உலக நாடக தின. விழாவையும் ஒரு பயிற்சிக் கற்பித்தலாக நோக்க வேண்டியிருக்கின்றது.

இந்தக் கட்டுரையானது இரண்டு விடயங்களில் மட்டுமே மையப்படுத்தப் பட்டதாய் இருக்கும். அவை

1. உலக நாடக தின விழா கொண்டாடப்படுவதன் அவசியத்தன்மை .

2. இந்த ஆண்டு உலக நாடக தின விழா பற்றிய மேலோட்டமான விபரிப்பு. எனவே இது முழுமையானதும், விபரங்கள் அனைத்தும் உட்கொண்டதான விபரிப்பையோ, பகுப்பாய்வையோ கொண்டிராது. இவ்விரண்டு அம்சங்களிலும் முதலாவது அம்சம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில் நுண்கலைத்துறை இவ்விழாவினை ஏன் கொண்டாடுகின்றது. என்ற கேள்வி எல்லோரது மனதிலும் எழுந்தது உண்மையே. இதற்கான விடையைக் கண்டு விட்டால் உலக நாடக தின விழா



கொண்டாடப்படுவதன் அவசியத்தன்மை உணரப்பட்டு விடுவதுடன் அது பற்றிய செயல்வாத பிரக்ஞையும் ஏற்பட இடமுண்டு. பின்வரும் விளக்கங்களை உணர்வு பூர்வமாக விளங்கிக் கொள்வதன் ஊடாக மேற்கண்ட கேள்விக்கான விடையைத் தெரிந்து கொள்ள வாய்ப்பு உண்டு.

1. நாடகம், அரங்கு சார் செயல்முறைப் பயிற்சிக்கு உரமூட்டுதல் இன்றைய கல்வி முறையில் செயல்முறைப் பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது ஒரு புறமிருக்க நாடக அரங்க செயற்பாட்டிற்கு செயல்முறைப்பயிற்சி முக்கியமானது என்பதை மறுப்பதற்கில்லை. வெறும் பயிற்சிப் பட்டறைகளுடன் மட்டும் நின்றுவிடாது ஆக்கப்படைப்பு வேலைகளில் ஈடுவடவும் முடிகின்றது. இந்த நாடக விழாவை ஒரு களியாட்டமாக நோக்காது ஒரு கற்கை நெறியாக நோக்க வேண்டும். இவ்விழாக் காலங்களில் மாணவர்களுக்கும், விரிவுரையாளர் களுக்கும் சிறந்த பயிற்சி பெறும் வாய்ப்பக் கிடைக்கின்றது. என கொங்கைத்தீ அறிமுகவுரையின் போது பேராசிரியர் மௌனகுரு கூறியது இதனையே சுட்டுகின்றது.

2. ஆளுமை உள்ள நடிகர்களையும் தயாரிப்பாளர்களையும் உருவாக்குதல். நாம் நாடகத்தை ரசித்தலுடனும் மட்டுமே நாடக செயற்பாட்டுடன் தொடர்புபடுகின்றோம். ஆனால் ஒரு நாடக தயாரிப்புக்கு அல்லது அரங்க அளிக்கைக்குப் பின்னால் இருக்கும் சிக்கல்கள் சவால்கள் என்பவற்றையும் அறிந்து கொள்ள வேண்டும். இச்சிக்கல், சவால்களை முறியடித்து நாடகம் ஆக்கப்படும் போது தனிமனித, சமூக ஆளுமை விருத்தி, திறன்விருத்தி என்பன ஏற்படுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களை நாடகதின விழா வழங்குகின்றது என பேராசிரியை சித்திலேகா மௌனகுரு தமது ரையிப் குறிப்பிட்டதும், நவீன எண்ணக்கருக்கள் என தற்கால முகாமைத்துவக் கோட்பாடு கூறுகின்ற குழுவேலை உடல் மொழி (body language) இயக்கம் (Diredtion) முதலியன நாடக செயற்பாட்டில் இருக்கின்றன, இவற்றை நாடக தினவிழா வழங்குகின்றது என்று வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதி என லோகேஸ்வரன் கூறியதும் இவ்வாரத்திற்கு வலுச்சேர்க்கிறது.

3. பராம்பரிய கலைவடிவங்களைப் பாதுகாத்தலும், நவீன கலை வடிவங்களை அறிமுகப்படுத்தலும் கல்வி விருத்திஈ பொருளாதார, அரசியல மாற்றம் தொழில்நுட்பத்தின் ஊடுருவல் என்பன மக்களது சமூக வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதால் பாரம் பரிய கலை வடிவங்கள் அருகி வருகின்றன. இவற்றுள் அருகி விட்ட கலைவடிவங்களான பறைமேளக்கூத்து மகிழக்கூத்து என்பன காட்சிப்படுத்தப்பட்ட உலக நாடக தின விழா ஏதவாக அமைந்தது. இதற்கும் மேலாக அருகிக் கொண்டு வருகின்றதும், பிரபல்யம் வாய்ந்ததுமான வசந்தன் கூத்து, வடமோடி, கூத்துக்களை முதன்முதலில் பார்த்து வியர்ந்த பலரும் இருந்தனர். முதல் நாள் நிகழ்வின் பிரதம அதிதி தர்மசிறி பண்டார நாயக்கா இவ்வாறான அரங்க வடிவங்களும் அறிக்கை முறைகளும் இருப்பதனைக் கண்டு வியந்தார்.

6. நாடக, அரங்குசார் அறிவு விருத்திக்கு உதவுதல்.

பல்கலைக்கழகத்திற்கு உள்ளிருந்தும், வெளியிலிருந்தும் நாடகம் அரங்கியல், அது சார்ந்த துறைகள் முதலியவற்றில் பாண்டித்தியம் பெற்ற அறிஞர்களை தேர்ந்தெடுத்து கருத்தரங்குகளையும் கருத்தாடல்களையும் ஒழுங்கு செய்வதன் மூலம் மாணவர்களும், ஏனையோரும் பயிற்சிகளுடன் சேர்ந்து கோட்பாட்டு ரீதியான அறிவையும் பெற உதவுகின்ற முதல் நாள் நிகழ்வில் தர்மசிறி பண்டாரநாயக்காவுடன் இடம் பெற்ற கருத்தாடல் சிங்கள நாடக, அரங்க செயற்பாடுகள் சம்பந்தமாக பல விடயங்களை அறியக் கூடியதாக இருந்தது. இது போன்று இறுதி நாள் நிகழ்வு முற்றாக கருத்தரங்கிற்கும், கருத்தாடலுக்குமாக ஒதுக்கப்பட்டது இந்நோக்கம் குறித்த செயற்பாடேயாகும்.

7. தகவல் திரட்டலுக்கு உதவும் கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல்.

ஒவ்வொரு வருடமும் இடம் பெறும் கண்காட்சிகளில், நாடகம் அரங்கு சார்பான நூல்கள், நாடக, கூத்துக்குரிய உடைகள் முடி முதல் அணிகள், அரங்குகளின் மாதிரிவடிவங்கள், இதுவரை இயங்கி வந்த நாடக மன்றங்கள், இயக்குனர்கள், அறிக்கை செய்யப்பட்ட நாடகங்கள் முதலிய தரவுகளும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இதனால் இது சார்ந்து அறிவைப் பெற விரும்புவோருக்கு சந்தர்ப்பம் அளிக்க இந்நாடக தினவிழா உதவியாக இருந்தது.

8. ஆவணப்படுத்தலும் அதன் பிரயோகமும்.

அருகிவிட்டதான பறைமேளக் கூத்து, முதலான பாரம்பரிய கலைவடிவங்களில் அனுபவமுள்ளவர்களை கொணர்ந்து அறிக்கை செய்து அதனை ஒளி நாடாவில் ஆவணப்படுத்தலும், அருகிக்கொண்டு வருகின்ற கலைவடிவங்களை ஒளிப்பதிவு செய்து ஆவணப் படுத்துவதுமாகும். இம்முயற்சியானது இது வரையில் கற்பித்தலில் இருந்து வந்த குறைபாட்டை நீக்க உதவும். அதாவது விரிவுரை மண்டபத்தில் வீடியோ காட்சி (video visual) மூலம் கற்பிக்க முடிந்திருப்பது ஒரு வரப்பிரசாதமே.

இவ்வாறான முக்கியத்துவங்களை கொண்டதான உலக நாடக தின விழாவில் இவ்வாண்டு என்ன நடந்தது என்பதை அறிவதும் உலக நாடக தின விழா பற்றிய மதிப்பீட்டுப் பிரக்ஞையை ஏற்படுத்தும்.

இந்த ஆண்டுக்குரிய உலக நாடக தினவிழாவின் கருப்பொருள் மரபும் மாற்றமும் என்பதாக இருந்தது. எனவே நாடக நிகழ்வுகளின் வைப்பு முறையும் கருப்பொருளை மையப்படுத்தியதாகவே இருந்தது. முதல் இரண்டு நாளும் பாரம்பரிய கலை வடிவங்களும், மூன்றாம் நாள் பாடசாலை நாடகங்களும், நான்காம் நாள் ஆங்கில நாடகங்களும், ஐந்தாம் நாள் நவீன நாடகமும் அறிக்கை செய்யப்பட்டன. இறுதி நாள் நிகழ்வாக மரபும் மாற்றமும் என்ற தொனிப் பொருளில் கருத்தரங்கும் கருத்தாடலும் இடம்பெற்றன. இந்த அறிக்கைகளுள் பல மரபுகள் காணப்படுகின்றதனால் மட்டக்களப்புடன் தொடர்பான அரங்க வடிவங்கள் அனைத்தும் உள்ளடங்கப் பட்டிருக்கின்றன. அரங்கின் பல்வேறு வகைகளையும் கண்டு கொள்வதற்கான கனமான இவ்விழா அமைந்திருக்கின்றது. என உபவேந்தர் அவர்கள் தமது தொடக்கவுரையில் கூறியது பொருத்தமுடையதாகவே உள்ளது.


இங்கு ஆற்றுகை செய்யப்பட்ட கலை வடிவங்களூடே மட்டக்களப்பு நாடக வரலாறு அல்லது மட்டகளப்பின் நாடக அரங்கப் போக்குகளின் பல பரிணாமங்களை அறிய நேர்தல் ஒரு புறமிருக்க அதற்கும் அப்பால் மட்டக்களப்பின் சமூதாய வாழ்க்கையில் காணப்பட்ட, காணப்படுகின்ற தொழில், பொருளாதார, சமய சமூக நிலமைகள் தெளிவாகத் தென்பட்டன. சமூகவியல் ஆய்வுக்குரிய களம் அதிகமும் இம்மரபுவழி நாடகங்களில் காணப்பட்டன. உதாரணமாக வந்தாறு மூலை கலைஞர்களால் ஆற்றுகை செய்யப்பட்ட மகிடிக்கூத்தானது சடங்கிலிருந்து முற்றிலும் விடுபடாத ஒரு அரங்க வடிவம். இதனுள்ளே சமூகவியல் ஆய்வுக்குரிய விடயத்துவங்கள் பல உள்ளன. வசந்தன், கரகம், முதலியவற்றினுள்ளும் இத்தகைய பல பின்னணிகள் உள்ளன. இவற்றை வெறும் கலைகளாக மட்டும் நோக்காது மட்டகளப்பு மக்களது வாழ்வியல் விழுமியங்களின் கூறுகளாக மட்டும் நோக்குதல் சிறப்பானது.

மட்டக்களப்பு பாடசாலை அரங்கச் செயற்பாட்டில் ஈடுபாடு காட்டியவர்களை மூன்று காலகட்டத்திற் குரியவர்களாக அடையாளப்படுத்தலாம். முதலாம் கட்டத்திற்-குரியவர்களாக சி.மௌனகுரு, வெ.தவராஜா ஆகியோரையும் இரண்டாம் கட்டத்திற்குரியவர்களாக சி.ஜெயசங்கர், பாலசுகுமார் போன்றோரையும், மூன்றாம் கட்டத்திற்குரியவர்களாக சதாகரன், அன்பழகன் திலக நாதன் முதலியோரைக் குறிப்படலாம். இவர்கள் நாடகமும் அரங்கியலையும் பாடசாலையில் கற்பிப்பவர்கள். இவர்களது தயாரிப்புக்களான மனிதன் பாடசாலையில் கற்பிப்பவர்கள். இவர்களது தயாரிப்புக்களான மனிதன் தேடும் மனிதன், புழுவாய் மரமாகி, தாயுமாய் நாயுமானாய் என்பன மூன்றாம் நாள் விழாவில் அறிக்கை செய்யப்பட்டன. பாடசாலை நாடகங்களின் தற்கால நிலையை இவர்களது நாடகங்கள் பிரதிபலித்தன.

நான்காம் நாள் முழுமையும் ஆங்கில நாடகத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. மட்டக்களப்பின் ஆங்கில நாடகப் பாரம்பரியமானது நகரப் பாடசாலைகயையும் தேவாலயமும் அதனுடன் சார்ந்த கலைக்குழுக்களையும் மையம் கொண்டே வளர்ந்து வந்தது. இப்போக்கு இவ்விழாவிலும் தென்பட்டது. ஆங்கில நாடகங்கள், அது இலக்கிய நாடகமாயினும் சரி, சமூக நாடகமாயினும் சரி வசன ஒப்புவித்தலோடு நின்று விடுவதே மரபு. இந்நாடகங்கள் சற்று விலகி நடிப்பையும் ஓரளவு வெளிப்படுத்தின. சிசிரியா பெண்கள் பாடசாலை மாணவிகள் வளங்கிய சோக் சேக்கிளில் நீதிபதியாக நடித்த ருக்சாணி அல்பியன் கலைக்குழு வழங்கிய ரோமியோ அன்ட் யூலியட் நாடகத்தில் அருட் தந்தையாக நடித்த ஸ்கந்தன் முதலியோரின் நடிப்பை குறித்துக் காட்டலாம். இந்நாடக தயாரிப்புகளுக்குப் பின்னணியில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பங்கும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்திரா பார்த்த சாரதி எழுதிய கொங்[illegible]த்தீ பாலசுகுமாரின் நெறியாள்கையில் [illegible]ாம் நாள் நிகழ்வில் ஆற்றுகை செய்யப்பட்டது. சிலப்பதிகார கதையை மறுவாசிப்புக்குட்படுத்திய இந்நாடகம் நவீன யுக்திகளை கையாண்டு ஆற்றுகை செய்யப்பட்டது. உருவம், உள்ளடக்கம் என்பவற்றில் நவீனம் இருந்ததுடன் மேடை வடிவமைப்பும், தளங்கள் உபயோகிப்பும் புதுமையின் வெளிப்பாடாகவே இருந்தன. இருக்கின்ற வளங்களையெல்லாம் பயன்படுத்தி பிரமிப்பூட்டுவது, நெறியாளனின் கடமையல்ல. இருக்கின்ற வளங்களை எவ்வாறு பொருத்தமாகப் பாவிப்பது என்பதே அவன் கடமை என்பதை நெறியாளர்கள் கவனிக்க வேண்டும். அதிகமும் பாடலும் நடனமும் இடம் பெற்றதால் ஒரு நடன நிகழ்ச்சி பார்க்கும் உணர்வு தோன்றியது. ஆனால் பாத்திரங்களின் அசைவும் நடிப்பும் கலைஞர்களுக்கு திருப்தியைத் தந்தன. எல்லா அம்சங்களும் இணைந்ததனால் பார்வையாளர்களைக் கவர்ந்தது என்பது உண்மையே.

இவை எல்லா ஆற்றுகைகளுக்கும் சிகரம் வைத்தாற்போல் இறுதி நாள் நிகழ்வாகிய மரபும் மாற்றமும் எனும் தலைப்பிலான கருத்தரங்கும் கருத்தாடலும் இடம் பெற்றது. நுண்கலைத்துறைத் தலைவரின் தலைமையில் அவரது அறிமுகவுரையுடன் கருத்தரங்கு ஆரம்கமானது.. பேராசியரியர் சிவத்தம்பியின் தளவுரையானது மரபு மாற்றத்தை எண்ணக் கருரீதியாக விளக்குவதாயும் இலக்கியத்தில் மரபு மாற்றம் பற்றி விபரிப்பதாயும் அமைந்திருந்தது. பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு மரபு மாற்றத்தில் பெண்ணிலை அரங்கு பற்றிப் பேசும் போது பெண்களது நாடகங்கள், பெண்கள் பற்றிய நாடகங்கள் எனும் இரு தளங்களை அடிப்படையாகக் கொண்டார். பேராசியரியர் கிருஷ்ணராஜாவின் உளர பண்பாட்டு மெய்யியலின் அடிப்படையில் மரபு மாற்றம் பற்றி



19 -->

நன்றி - நூலகத்திட்டம்





# தலாக்

சிங்கப்பூரைச் சேர்ந்த தமிழ்க் கவிஞரும் நாடக ஆசிரியருமான இளங்கோவனின் அண்மைய நாடகமான தலாக்' சிங்கப்பூரில் பலத்த சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

1998 டிசம்பர் மாதம் தலாக் முதன் முதலில் மேடையிடப்பட்டது. தமிழ் நாடகமான 'தலாக்' ஆங்கில உபதலைப்புக்களுடன் மேடை— யேற்றப்பட்டமையால் தமிழ் மொழி அறிந்திராத ஏராளமான சிங்கப்பூர்களும் நாடகத்தைப் பார்க்க முடிந்தது.

'தலாக்' ஒரு இளம் முஸ்லிம் பெண்ணின் கதை. ஆணாதிக்கத்துக்கும் பெண்ணுரிமை . பெண் உணர்வு களுக்குமிடையேயான பல தளப் போராட்டங்களின் ஒரு தளத்தை மிகுந்த கவனத்துடனும் உறுதியாகவும் கலாபூர்வமாகச் சித்திரிக்கிறது தலாக்.

சிங்கப்பூரில் இருக்கக்கூடிய சில அடிப்படைவாதத் தமிழ் பேசும் முஸ்லிம் சங்கங்களை இந்நாடகம் சங்கடத்தில் ஆழ்த்தியிருக்கிறது. நர்கிஸ் பானு எனும் இளம் பெண் நாடகத்தின் முக்கியமான பாத்திரமான நிஷாவாக நடித்திருக்கிறார். நாடகம் ஒரு தனிமொழி (Monologue) ஆகும். நர்கிஸ் பானு மட்டுமே பங்கேற்கிறார். ஏனைய பாத்திரங்கள் அவரின் தனிமொழிக் கூடாகப் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பொருத்தமான வகையில் சித்திரிக்கப்படுகிறார்கள்.

நாடகத்தைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வெற்றியளிக்கவில்லை.

இளங்கோவனின் பல நாடகங்கள் ஏற்கெனவே மேடையேறியுள்ளன. 1991—98 காலப்பகுதியில் அக்கினிக் கூத்து என்னும் ஆங்கில — தமிழ் இருமொழி நாடக அமைப்புக்கூடாக 19 நாடகங்களை இளங்கோவன் தயாரித்திருக்கிறார். அவரின் முக்கியமான நாடகங்கள்" ஊடாடி (1992). புலி (1992). நாய்கள் (1998). மோட்சம் (1998). புத்தரின் கைக்குண்டு (1998).


வெளியாகியிருக்கும் இளங்கோவனின் கவிதைத் தொகுதிகள்" விழிச்சன்னங்களின் பின்னால் (1979). மௌனவதம் (1984), Transcreations (இருமொழி நூல் — 1988)

வெளியாகியிருக்கும் நாடக நூல்கள்" தலாக் (1999), Dogs and Other Plays (1996)

நாடகம் மற்றும் அரங்கியலில் Western Anstration Acadamy of Performing Arts நிறுவனத்தில் பட்டம் பெற்றிருக்கும் இளங்கோவன் புகழ்பெற்ற பிரேஸில் நாடகரான அகஸ்தோ புவாரிடமும் பயிற்சி பெற்றிருக்கிறார்.

தமிழில் நவீன நாடகத்துறையில் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கும் இளங்கோவனின் நாடகங்களைப் பார்க்கிற வாய்ப்பு சிங்கப்பூருக்கு அப்பாலும் வாழும் தமிழ் மக்களுக்கும் கிடைக்க வேண்டும். நூலாக வெளியாகியிருக்கும் அவருடைய தலாக் நாடகத்தை நன்றியுடன் மறுபிரசுரம் செய்கிறோம்.

ஆ—ர்.



*(மேடையில் இருள் மங்கிய ஒளி, மேடை பிரகாசமடையும் போது, கறுப்பு பர்தா அணிந்த பெண் தூய வெண்ணிற மேடையில் வலதுபுறமாக ஒருக்களித்துப் படுத்திருப்பது தெரிகிறது. அவள் அருகே ரோஜா மலர்ப்பூங்கொத்து. 'நலம் பெற வேண்டும்' என்ற வாழ்த்து அட்டை, அருந்த நீர் ஆகியன இருக்கின்றன. அவள் மெல்ல வலியுடன் முனகியவாறு எழுந்து உட்கார்ந்து வாழ்த்து அட்டையை விரித்துப் படிக்கிறாள்.)*

One day a woman asked the prophet... may peace be upon you sallaahu alahi vasalam... what were her duties towards her husband. To her he replied: "A wife should not leave her home without her husband's permission. Women are the twin halves of man. The world and all things in it are valuable and one of the most valuable in the world is a virtuous woman. God enjoins you to treat woman well, for they are your mothers, daughters, aunts. The rights of women are sacred. See that woman are maintained in the rights assigned to them. When a woman performs the five daily prayers and fasts in the month of Ramadan and is chaste, and is not disobedient to her husband, then tell her that she can enter paradise by whichever door she chooses.

They (wives) are your garments and you are their garments. (Quran 2:187) of all things allah has made lawful, what he hates most is divorce.

(Hadith from abu Dawud)

When a woman who has been called to her hubands, bed refuses and he spends the night angry, the angels curse her until the morning.

(Hadith from Bukhari and Muslim)

If a woman asks her husband for divorce without some strong reason, the scent of paradise will be forbidden to her.

(Hadith from Ahmad, Tirmidhi, Abu Dawud, Ibn'Majah)

Paradise is reward of a wife who pleases her husband until death.

(Hadith from Ibn Majah)

Dear Nisha,

These words are for you. I hope you will read them and get spiritual strength please forgive me for putting you in this difficult situation. The roses are for your quick recovery.

with love, Sam.



*யா அல்லாஹ்....1*

*(பாடுகிறாள்)*

*ஆராரோ அடி ஆராரோ*
*கண்ணே நீ ஆராரோ ஆரிராரோ...*

*தித்திக்கும் தேனே - என்*
*தெவிட்டாத தெள்ளமுதே*

*சித்தத்தில் உள்ளினிக்கும்*
*செங்கரும்பே கண் வளராய்*

*எங்கள் குலம் மங்காமல்*
*எதிர்குலத்தார் ஏசாமல்*

*தங்கமணிப் பொக்கிஷத்தை*
*தானாள வந்த கண்ணே*

*(தேம்புகிறாள்.)*

Nisha! did your husband call?

No Doctor, I'm still waiting for his call

If he doesn't turn up, please let me know. Don't worry. It is over. Everything is fine. Relax okay.

Thank you Doctor.

(எழுகிறாள்.)

இன்னும் ஐந்து மாதம் போனா அழகான பெண் குழந்தையா பொறக்க வேண்டியது. முந்தா நாள் தான் வெளியே வந்து உலகத்தைப் பார்த்தது. Partial - birth abortion. Partial - birth abortion அதோட அசைவை ultra sound screenலே பார்த்தாங்க. டாக்டர் அதோட உடம்பையும் கைகளையும் வெளியே இழுத்தாரு. அதோட பிஞ்சு விரல்கள் ஒன்னோட ஒன்னு பிணைஞ்சிருந்தது. என்னைக் காப்பாத்துங்க என்னை கொன்னுடாதீங்கன்னு கெஞ்சுற மாதிரி துடிச்சிக்கிட்டிருந்தது. அதோட சின்னக் கால்கள் கருப்பைக்குள்ளே விட்டு விட்டு உதைச்சதை நான் உணர்ந்தேன். அந்த மயக்கத்திலேயும் என்னால உணர முடிஞ்சுது.

டாக்டர் கத்திரிக்கோலை எடுத்து அதோட தலையின் பின்னால அழுத்திக் குத்தினாரு. உடனே அது இரண்டு கைகளையும் அதிர்ச்சியோட விரிச்சது. கீழே விழப்போறமோங்கிற பயத்துல குழந்தைகள் வெடுக்குன்னு இழுத்துக்கிறமாதிரி.. அம்மான்னு...!

டாக்டர் கத்திரிக்கோலை இன்னும் கொஞ்சம் விரிச்சாரு. தலைக்குப் பின்னால சின்ன ஓட்டை. அந்த ஓட்டையிலே High powered suction tube ஐ திணிச்சாரு. குழந்தையோட மூளையை அப்படியே உறிஞ்சி எடுத்துட்டாரு. குழந்தை அசைவே இல்லாமல் கிடந்தது. அதை மெதுவா வெளியே இழுத்து கழிவுத்தொட்டியிலே தூக்கிப் போட்டாரு. அதோட முகத்துல ஒரு சிரிப்பு உறைஞ்சு போயிருந்தது.

சரிதானே நிஷா... நிஷா... சொல்லு நிஷா....

*(விழுகிறாள். தரையில் சிசு கிடப்பதாகக் கற்பனை செய்து கொண்டு அதை வெறித்துப் பார்க்கிறாள்.)*

நிஷாமா நான் சொல்லுறேன்மா...!

வாப்பா... வாப்பா! எங்க வாப்பா! எங்க வாப்பா வந்துட்டாங்க.. வாப்பா!

ஆமாம்மா, நான் சொல்றேன்டா.. நல்லா கேட்டுக்குங்க...

*(சிறுமியாகிக் கதை சொல்கிறாள்.)*

ஒரு அழகான உப்பு பொம்மை இருந்துச்சி. அதுக்கு ரொம்ப நாளா தான் யாருன்னு தெரியல. அதனால காடு மேடெல்லாம் அலைஞ்சிச்சு. ஆயிரக்கணக்கான மைல் தாண்டி ஒரு நாளு கடல் முன்னால வந்து நின்னுச்சி. அதுக்கு ரொம்ப அதிசயமா இருந்துச்சு. யப்... பா.. இவ்வளவு பெரிய அலைகளான்னு ஆச்சரியப் பட்டுப் போய் கண் கொட்டாம கவனிச்சிக்கிட்டே இருந்தது.

ஏய், யாரு நீ.. உப்பு பொம்மை கடலைக் கேட்டுச்சு.

கடல் சிரிச்சது. சிரிச்சிக்கிட்டே... உள்ளே வந்து பாரேன் நான் யாருன்னு தெரியும்னு சிரிச்சது. உப்பு பொம்மையும் தைரியமா கடலுக்குள்ளே இறங்கி நடந்துச்சு. அது போகப்போக கரைஞ்சு போயிக்கிட்டே இருந்துச்சு.

கடைசியிலே அதோட வாய் மட்டும் இருந்துச்சி... இப்ப தான் யாருன்னு தனக்கே தெரிஞ்சுதுன்னு சொல்லிக்கிட்டு ஒரு சாந்தமான சிரிப்போடு கரைஞ்சு போச்சு... காணாமப்போச்சு... அலைகளோடு அலையா பேரே இல்லாமப் போச்சு....

நிஷாமா, நீ உப்பு பொம்மை மாதிரி உங்களை நிக்காஹ் பண்ண வர்ற வெளியூர் மாப்பிள்ளை அந்தக் கடல் மாதிரி.... அவ்ரே உனக்கு சகலமும் நிஷா...செல்லம். எல்லார்கிட்டேயும் இருக்கிற நல்ல குணத்தை மட்டும் ஏத்துக்குங்க. அவரு பேரைக் கேட்கலியே? தீன் டிகிரி வாங்கினவரு... கை நிறைய சம்பளம். பெரிய குடும்பம். அவங்க ஊரு பெண்ணெல்லாம் வேணாம்னு நம்ம ஊருக்கு வந்திருக்காங்க.

உங்களை பத்தி தெரிஞ்சிக்கிட்டு அமைதியான பிள்ளைன்னு இந்தப் பொண்ணுதான் வேணும்னு கேட்டாங்க... அல்ஹம்துலில்லாஹ்... நீங்க எனக்கு ஒரே பிள்ளை உங்களை ஊரு கடந்து ஊரு அனுப்ப எனக்கும் உம்மாவுக்கும் மனசில்லம்மா... ஆனா நீங்க எங்கே இருந்தாலும் நல்லா இருக்கணும்கிறது தான் எங்க விருப்பம்.

வாப்பா... வாப்பா...

என்னம்மா?

இன்னொரு கதை சொல்லுங்க வாப்பா...!

ஒரு அழகான பட்டம்பூச்சி கூட்டுலே இருந்து வெளியே வந்துகிட்டு இருந்ததாம். அதை ஒரு மனுஷன் உன்னிப்பா பார்த்துகிட்டே இருந்தானாம். என்னடா இது... இவ்வளவு அழகான பட்டாம்பூச்சி எப்படி பறக்குதுன்னு பார்க்கலாம்னா... ரொம்ப நேரம் எடுக்குதேன்னு... சலிச்சிக்கிட்டானாம். அவனுக்குக் காத்திருந்து பார்த்து, ரசிக்க பொறுமையே இல்லை... என்ன பண்ணுனான் தெரியுமாம்மா?

பக்கத்துல வந்து உதடுகளைக் குவிச்சு ஊதினான். அப்ப தான் ஈரம் காய்ஞ்சு பட்டாம்பூச்சு சீக்கிரமா சிறகடிக்குமாம். பட்டாம்பூச்சியும் வெளியே வந்தது. ஆனா அதோட சிறகுகள் இரண்டிலேயும் நிறைய பொத்தல்கள். அதால பறக்க முடியலே.. பாவம்...

இனிமே நான் கதை சொல்ல மாட்டேன்மா, நீங்க தான் சொல்லணும்.

வாப்பா... வாப்பா... போகாதீங்க வாப்பா! என்னை விட்டுட்டுப்போகாதீங்க வாப்பா... வாப்பா...

என்னால பறக்க முடியலே வாப்பா...

*(அலறுகிறாள்.)*

*(மௌனம்.)*

பாண்டிச்சேரியிலே இருந்தோம்... வாப்பா ஒரு கம்பெனியிலே வேலை செஞ்சிக்கிட்டுருந்தாங்க. கொஞ்சம் வசதியான குடும்பம். வாப்பாவை பார்த்தாலே எல்லா-ரும் ஸலாம் சொல்ல வைக்கிற அமைதியான தோற்றம். ஒரு மரியாதைக்குரிய கம்பீரம். கண்ணுல தெளிவு. தீர்க்கமான பார்வை. நடையில உறுதி. ஊர்க்காரங்க பிரச்சினை எதுவானாலும் வாப்பா சுமுகமா தீர்த்து வைப்பாங்க.

வாப்பாக்கு ஏத்த ஜோடி உம்மா. மென்மையான குணம். வாப்பா உம்மா இரண்டு பேரோட அந்நியோன்யம். பார்த்துப் பொறாமப் படவைக்கும். எனக்கு தெரிஞ்சு அவங்க சண்டை போட்டதே இல்லை. சின்ன சின்ன வருத்தங்களையும் வெளிக்காட்டிக்கவே மாட்டாங்க.

வாப்பா படுக்கப்போறதுக்கு முந்தி எப்பவும் பால் குடிப்பாங்க. உம்மா பால் எடுத்து வைப்பாங்க. வாப்பா டம்ளர்ல உள்ள எல்லாப் பாலையும் குடிக்காம எப்பவும் உம்மாவுக்காக, கொஞ்சம் மிச்சம் வைப்பாங்க. ஏதும் மன வருத்தம் இருந்தாலும் அரை கிளாஸ் பால் வைக்கிறது மட்டும் நிற்காது. சமயத்துலே என்கிட்டே கொடுத்து உங்க உம்மாகிட்டே கொடுங்கன்னு சொல்வாங்க. உம்மாவும் இதுக்கு மட்டும் குறைச்சலில்லேன்னு சிணுங்கிக்குவாங்க.

ரொம்ப செல்லத்தோடும் பாதுகாப்போடும் வளர்ந்தேன். வீட்டுலே வாப்பாவைத் தவிர வேற ஆண்கள் கிடையாது. பக்கத்து வீட்டு ஆண்களை பார்த்தது பேசினது கூட கிடையாது. அவ்வளவு கட்டுப்பாடு.

ஸ்கூல் கூட கேர்ல்ஸ் ஸ்கூல்தான். டீச்சர்ஸ் கூட பெண்கள் தான். ஸ்கூல் போறப்போ நான் புர்கா போட்டுக்கிட்டுதான் போவேன். புர்காவுக்குள்ளே நான் பாவாடை தாவணி, அல்லது பஞ்சாபி சூட் போட்டுக்கிட்டிருப்பேன்.

எனக்கு நெட் பால் விளையாட ரொம்ப பிடிக்கும். விளையாடும்போது பஞ்சாபி சூட்தான் போட்டுக்குவேன். ஸ்கூல் போன உடனே புர்காவை கழட்டி வைச்சிடுவேன்.

என் மேல் எல்லாருக்கும் பிரியம். ரொம்ப மார்டனாக இல்லாம இப்படி முழுசா இழுத்து போர்த்திக்கிறியேன்னு என் பிரண்ட்ஸ் எல்லாம் கிண்டல் பண்ணுவாளுங்க. என்னோட யாரும் பேசாம இருந்தா என்னால தாங்கிக்க முடியாது. எனக்கு எல்லாரும் சந்தோசமா இருக்கணும். சிரிச்சிக்கிட்டே இருக்கணும். சண்டை சச்சரவு இல்லாம இருக்கணும். உம்மனா மூஞ்சிங்க கூட என்னைப் பார்த்தா சீக்கிரமா பழகிடுவாங்க.

*(சிரிப்பு அமர்கிறாள்.)*

செல்லமே எங்க நிஷாமாவுக்கு ஒரு நல்ல இளவரசன் வரப்போறான். ஒரு மாயக்குதிரையிலே உன்னைத் தூக்கிட்டு போயி, மேகங்களை எல்லாம் கடந்து தூரத்துல சுற்றிலும் கடல் சூழ்ந்த ஒரு சொர்க்கலோகத்துல, உயரமான அரண்மனையில, வாழ்நாளெல்லாம் சந்தோஷமா வச்சிருப்பான் பாருங்களேன்.

ம்ம்ம் போங்கமா... எனக்கு இளவரசனும் வேண்டாம்.. குதிரையும் வேண்டாம்.. அரண்மனையும் வேண்டாம். வாப்பாவும் உம்மாவும் போதும் இப்படியே இருந்துடறேன்னு அடம் பிடிப்பேன்.

வயசுக்கு வந்ததும் ஒரே அதிர்ச்சியா இருந்தது. என் உடலில் நிறைய மாற்றம். ஆனா மனசு மட்டும் மேகம் மாதிரி லேசா இருந்துச்சி. ஏன்னா எங்க வாப்பா உம்மா என்னை மகாராணி மாதிரி வச்சிருந்தாங்க.

நாங்க குடும்பத்தோட படம் பார்க்க போவோம். எப்பவாவது தான். ஆங்! நான் புர்கா போட்டுக்கிட்டுதான் கிளம்புவேன். தியேட்டருக்கு போய் விளக்கெல்லாம் அணைச்சப்பிறகு தான் புர்காவை தூக்கிவிட்டுட்டு படம் பார்ப்பேன். இண்டர்வெல் சமயத்துலே மறுபடியும் புர்காவை இழுத்து முகத்தை மறைச்சுடுவேன்.

படத்துல திருமண காட்சி இருக்கும். பெற்றோரை விட்டுப் பிரியும்போது நாயகியோ, நாயகனோட தங்கச்சியோ அழுவாங்க.. எனக்கு ஒரே சிரிப்பா இருக்கும். என்னை அறியாம சத்தம் போட்டு சிரிச்சிடுவேன். வாப்பாவும் உம்மாவும் 'உஷ்'ன்னு அடக்குவாங்க. அந்த இருட்டுலேயும் சினிமா பட வெளிச்சத்துல அவுங்க இரண்டு பேரோட கண்ணோரம் தேங்கி-யிருக்கிற கண்ணீர் பளிச்சிடும். என்னம்மா. இதுக்கெல்லாம் போய் அழுவுறீங்க என்பேன். அவங்க கண்ணை துடைச்சிக்குவாங்க.

நான் ப்ளஸ் டூ படிக்க ஆரம்பிச்சு மூனு மாதம் தான். மாப்பிள்ளை வந்துட்டாரு. நிக்காஹ் ஏற்பாடெல்லாம் மும்முரமா நடக்க ஆரம்பிச்சிடுச்சு.

மாப்பிள்ளை போட்டோவை கூட பார்க்கலே. எனக்கு எல்லாம் ஒரு விளையாட்டு போல இருந்தது.

நான் கண்ணை இறுக்க மூடிக்கிட்டு உட்கார்ந்து இருந்தேன். என்ன நடக்குதுன்னு கூட தெரியலை. நிக்காஹ் சமயம் ஒப்பந்தத்தில் கையெழுத்து போடும் போது வாப்பா பத்திரத்தை கொண்டு வந்து என் முன்னால வைச்சாங்க. உங்களுக்கு சம்மதமான்னு கேட்டாங்க. நான் மௌனமா இருந்தேன்.

என்ன சொல்லுறது? பிடிக்குது பிடிக்கலைன்னு மறுப்பு சொல்லும் உரிமை பெண்ணுக்கு இருக்குதுன்னு தெரியாத பதினாறு வயசுப் பொண்ணு நான்.

என் மௌனத்தை சம்மதமா எடுத்துக்கிட்டாங்க. குழப்பம். பயம். பெத்தவங்களைப் பிரியப் போறோம்னு பயம். சினிமா படத்தில வாற மாதிரி தோழிமார்களெல்லாம் டீஸ் பண்ணலை. அவுங்க எல்லாருக்கும் ஏறக்குறைய என் வயசுதான். அவுங்களுக்கே என்ன நடக்குதுன்னு புரியலை. இன்னும் கொஞ்ச நாள்லே நான் எங்கேயோ போயிடுவேன்னு ஒரே சோகத்தோடு இருந்தாங்க.

அவங்களோட எடுத்துக்கிட்ட போட்டோவுல எல்லாம் நான் மட்டும்தான் தலையில துணிபோட்டுக்கிட்டு இழுத்து மூடிக்கிட்டு இருப்பேன். உம்மும்மா அடிக்கடி சொல்லுவாங்க...

தலையிலே துணி நகரக்கூடாது. நீங்க மத்த பிள்ளைங்க மாதிரியில்ல எங்க நிஷாமா!

நிஷா நீ சரியான ஓல்ட் பேஷன்னு பிரண்ட்ஸ் அடிக்கடி டீஸ் பண்ணி இருக்காங்க. நிஷாங்கிற பட்டிக்காட்டுக்கு திடீர்னு நிக்காஹ்ன்னா... அந்த அதிர்வுகளை அவங்களால தாங்கிக்க முடியலே. ஏதோ உயரத்துல ஜிவ்வுன்னு ஏறிக்கிட்டே இருக்கிற மாதிரி உணர்வு.. நிக்காஹ் முடிஞ்ச ராத்திரி பாதாளத்துல இறங்குற மாதிரி இருந்துச்சு.

(வரும்)

நன்றி - நூலகத்திட்டம்



"இனிமேல் ஏழாயிரத்து ஐந்நூறு தான் கூலி. அதுக்கு குறையாது. உங்களுக்கு பிடிச்சா' ¿இருங்க. இல்லாட்டி இந்த மாதம் வீட்டை காலி செய்யுங்க" - வீட்டுச் சொந்தக்காரன் பீரிஸ் சிங்களத்தில் சொல்லிவிட்டுப் போன வார்த்தைகள் அவன் காதில் ஒலித்துக் கொண்டிருந்தன.

திடீரென இரண்டாயிரம் ரூபா ஏற்றம்! ஐயாயிரத்து ஐந்நூறிலிருந்து ஏழாயிரத்து ஐந்நூறுக்கு ஏற்றம்.

எவ்வளவு*சொல்லியும் அவன் இளகுவதாய் இல்லை.

மூன்று வருடங்களுக்கு முன்னர் வந்தபோது நாலாயிரத்து ஐந்நூறிலிருந்து அடுத்தவருடம் ஐயாயிரத்து ஐந்நூறாகி, இந்த வருடம் ஏழாயிரத்து ஐந்நூறாகிவிட்டது!

இவ்வளவு காலமும் பழகிய பழக்கத்தை முன்வைத்து இரந்து பார்த்தும் பீரிஸ் இறங்கி வருவதாய் இல்லை. அவனும் அந்தப் பழக்கத்தைப் பேணுவது போலவே சிரித்துக் கதைத்தவாறே தன் நிலைப்பாட்டிலிருந்து இம்மியும் விலகாது இருந்தான்.

அதற்கு மேலும் பேசுவதற்கு இடமிருக்கவில்லை.

பீரிஸ் போய்விட்டான்.

அவன் போன பின்னர் சிவா மேசையில் கை இரண்டையும் குத்த வைத்து நாடியைத் தாங்கியவாறு உட்கார்ந்திருந்தான்.

பாண்டவர்கள் தங்குவதற்கு ஐந்து கொட்டில்களாவது போட்டுக்கொள்ள இடந்தமாறு துரியோதனன் முன் இரந்து நின்ற கிருஷ்ணன் மனச்சோர்வோடு திரும்பிக் கொண்ருந்தான்.

"அவர்களுக்கு ஈ இருக்கும் இடங்கூடத் தரமாட்டேன்" என்று துரியோதனன் கூறியது கிருஷ்ணன் காதுகளில் மீளொலிக்க அவன் இதழ்களில் மாயப்புன்னகை தவழ்ந்தது.

செல்வநாயகத்தோடு செய்த உடன்படிக்கையை பண்டாரநாயக்கா கிழித்தெறிகிறான்.

செல்வநாயகம் செய்வதறியாது கையைப் பிசைந்தபடி பார்த்துக் கொண்டு நிற்கிறார்.

இதைப் பார்த்து ஜயவர்த்தனா கைக்கொட்டிச் சிரிக்கிறான். தன் கண்டி யாத்திரைக்கு கைமேல் பலன் கிடைத்ததில் அவனுக்கு பரம சந்தோசம்.

வீட்டுச் சொந்தக்காரன் பீரிஸ் ஜயவர்த்தனாவில் புகுந்து பண்டாரநாயக்காவில் வெளிவருகிறான்.

இப்போ சிவா இருந்த இடத்தில் செல்வநாயகம் நாடியில் கைவைத்தவாறு இருக்கிறார்.

சிவாவுக்கு பழைய நினைவுகள் கிளம்பி வந்தன.

அவனுடைய அப்பா சிங்கள நாட்டில் பெரிய கடை முதலாளி. அவருடைய கடைக்குப் பின்னால் அன்றாடம் கூலிப்பிழைப்பை நம்பி வாழும் ஏழைச் சிங்களக் குடிகள். அந்தக் குடிசைகளில் வாழும் சிங்களப் பிள்ளைகளும் அவர்களுடைய பெற்றோரும் இவனோடு அன்பாகப் பழகுவதும் இவர்களிடம் அடிக்கடி ஜீவனோபாய உதவிபெறுவதும் வழமையாகிப் போய்விட்ட ஒன்று.

திடீரென்று பண்டாரநாயக்கா, '24 மணித்தியாலத்தில் சிங்களம் மட்டும்' என்று கத்துகிறான்.

செல்வநாயகம் ஆதியார் பாராளுமன்றத்திற்கு முன்னாலிருக்கும் கடற்கரையில் போய் குந்தியிருந்து சத்தியாக்கிரகம் செய்கின்றனர். கல்லெறி விழுகிறது. குந்தியிருந்தோர் நெற்றிகளில் இருந்து இரத்தம் வழிகிறது.

இவன் கடைக்குப்பின்னால் இவனோடு விளையாடிய சிங்களப் பையன்களின் முகத்தில் ஒரு மாறுபாடு. இவனைக் கண்டதும் இப்போ முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக் கொண்டு, "யாப்பன மாடு... ஓடு" என்று அவர்கள் இடையில் துாஷணத்தைப் புகுத்தி கொச்சைத் தமிழில் கூறிப் பெரிதாகச் சிரித்தனர். பெரியவர்கள் இவனையும், இவன் அப்பாவையும் பார்த்து, முகத்தில் திடீரென ஏற்பட்ட விகாரத்தோடு "உம்பலாட்ட பெடறல்த ஓண? உம்பலாட்ட பணாஹட்ட பணஹத ஓண?" என்று கேலி செய்கின்றனர்.

சிவாவின் உள்மனம் ஒருவித அசௌகரியத்தால் கூனிச்சுருக்கங்கள் கண்டது.

அவனது அப்பாவின் கடை, சொத்து, சம்பாத்தியம் எல்லாம் திடீரென அடித்தளம்கெட்டு ஆட்டங்காணுவதுபோல் அவனுக்குப்பட்டது.

இனி வீடு தேடும் படலம் ஆரம்பமாயிற்று. செல்வநாயம் யோசிக்கிறார்.

சிவா அவருக்குள்ளிருந்து வெளிப்பட்டுச் செல்கிறான். அவனது வீடுதேடும் விவகாரத்திற்கு உதவி செய்ய பல இடைத்தரகர்கள் வந்து சேர்கிறார்கள்.

"இப்ப வீடு வெள்ளவத்தையில் எடுக்க முடியாதய்யா. மாதம் பத்தாயிரம் ரூபா ஒன்றரை வருஷம் அட்வன்ஸ். உங்களுக்கு குடுக்க முடியுமா?" - வீட்டு புறோக்கர் பெரேரா கேட்கிறான்.

"எனக்கு இந்தக் கூலி கட்டாது. மாதம் ஐயாயிரம். ஒரு வருஷ அட்வான்ஸ் எண்டா பேசுங்க. அதுக்கு மேல ஒரு சதமும் என்னால முடியாது"- சிவா கூறினான்.

"அதெல்லாம் முந்தி. இப்ப வெள்ளவத்தையில நீங்க சொல்லிற கணக்குக்கு வீடில்ல.." புறோக்கர் பெரேரா மிகக் கேலியாகவும் அலட்சியமாகவும் கதைத்தான்.

உாவின் பேச்சிலிருந்த கேலி முன்னர் அவன் அப்பாவின் கடைக்குப்பின்னால் இருந்த சிங்களவர்கள். அவன் அப்பாவைப் பார்த்து, "உங்களுக்கு சமஷ்டியா வேணும்? உங்களுக்கு ஐம்பதுகம்பதா வேணும்?" என்று கேட்டுக்கேலி பண்ணியதை ஏனோ நினைவூட்டிற்று.

முன்னர் எழுபதுகளில் அவனது நண்பர்கள் ஒரு பெரிய வீட்டையே வெள்ளவத்தையில் 250ரூபா கூலிக் கெடுத்து தங்கியிருந்தபோது அவனும் தங்கியிருக்கிறான். இப்போ 2500 ரூபாவுக்கு கூட ஒரு அறை எடுக்க முடியாது!

செண்பகப் பெருமாள் 'பப்பா பட்டினத்து' மண்ணை எடுத்து வந்து தங்கப்பேழையில் வைத்து லங்கா ராணியிடம் கையளித்து வணங்கி நிற்கிறான். அவள் அவனுக்கு பதவி உயர்வு கொடுத்து முதுகில் தட்டிவிட பெருங்களி கொள்கிறான்.

முன்னர் இனக்கலவரம் கொழும்பில் வெடித்தபோது 'லங்கா ராணிக்' கப்பலில் அகதிகளாக தமிழர்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டபோது அவனும் அதில் போயிருக்கிறான். அப்போது யாழ்ப்பாணத்தில் வீடு இருந்தது. இப்போ வீடுதேடி கொழும்பில்.—

"ஏன் இப்ப வெள்ளவத் தையில



வீடு எடுக்க முடியாது?" புறோக்கர் பெரேரா கூறியவற்றுக்கு ஏதும் பேசாது தன் சிந்தனை-வயப்பட்டிருந்த சிவா திடீரென முடுக்கி விடப்பட்டவன்போல் யந்திரக்கதியில் கேட்டான்.

"இப்ப வன்னியில் இருந்து மிச்சம் சனம் வாறதுதானே மஹாத்தயா.. அதனால இப்ப எல்லாம் கூடக் காசு.

"அப்ப இனி எங்க வீடு "சீப்பா' எடுக்கலாம்?"

"தெஹிவளையில பாப்பமா? அங்க கொஞ்சம் றேற் குறைவு"

"சரி அங்க பாப்பம்"

0 0 0

யாழ்ப்பாணத்து மண் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டதன்பின் கொழும்பு மண்ணுக்கு இன்னும் கிராக்கி அதிகரிக்கிறது. அக்திகளாக யாழ்ப்பாணத்தவர் கொழும்பு வந்து நிற்கின்றனர். யாழ்ப்பாணத்தில் இவர்கள் வீடும் தோட்டந்துரவுகளும் புல்லோஸர் கொண்டு இடிக்கப்பட இங்கே கொழும்பில் மூலை முடுக்கு சந்துபொந்துகளிலெல்லாம் வீடுகள் எழுகின்றன. அரை குறையாகக் கிடந்த வீடுகள் தமிழரின் அட்வான்ஸ் பணத்தில் பெரிதாக நிமிர்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இறந்தவர்களின் கல்லறைகள் கூட இருக்கக்கூடாதென்ற நிலையில் தரைமட்ட மாக்கப்பட்ட, அவர்களின் ஆவிகளுக்குக் கூட நிம்மதி கிடைக்காத அந்தரநிலை.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தவர் எல்லாம் கொழும்புக்கு அள்ளுப்படுவது தம் உயிரைத்தக்கவைத்து நிம்மதி தேடவா?

பல வீட்டுப் புறோக்கர்களுக்குப் பின்னால் வீடு தேடும் படலத்தில் சிவா.

பெரேரா காட்டிய வீடுகள் ஒன்றும் சரிவரவில்லை. பின்னர் அவனே கைவிட்டு விட்டான்.

இன்னும் பெரேராவின் சகாவான பீற்றர் எங்கெங்கோவெல்லாம் கொண்டுபோனான். ஆனால், இவன் காட்டிய வீடுகளும் 'தமிழர்களை எங்காவது தள்ளிவிட்டு காசு பெற்றுக் கொண்டால் போதும்' என்ற சுயநலத் தேவைகளால் உந்தப்பட்டவைபோலவே பட்டன.

'சரனங்கர றோட்டில் இருக்கிற வீடு எப்படி?" பீற்றர் கேட்டான்.

"அந்த வீடு றேற் குறைவுதான். ஆனா மிகவும் சின்னவீடாப்போச்சு" சிவா கூறினான்.

"அப்ப பரவாயில்லை. ஆனா நல்ல உள்ளுக்கபோயிற்று கனதுாரம் நடக்கவேணும். பள்ளிக்கூடம் போறபிள்ளையளுக்கு சரிவராது".

"அப்ப அந்த பன்சல வீடு?"

"அந்த வீட்டுக்கு அருகில இருக்கிற ஆக்கள் நல்ல ஆக்கள் மாதிரி படேயில்ல..."

"ஆரு சொன்னது?"

"ஆக்களைப் பார்க்க அப்படித்தான் படுகுது.."

"அப்ப அந்த ஹில் ஸ்றீற் வீடு நல்லதுதானே?'

"அதுக்கு இரண்டு பஸ் எடுக்கோணும்"

"சும்மா போங்கய்ய... உங்களுக்கு வீடு எடுக்கேலாது- பீற்றர் ஆத்திரப்பட்டு கதைத்தான்.

மேலிட்டது.

பீற்றர் காட்டிய வீடுகளை சிவா நிராகரித்தமைக்கு அவன் கூறிய வெளிக்காரணங்களை விட, வீட்டுச் சொந்தக்காரர்கள் வைத்த நிபந்தனைகளே முக்கிய காரணிகளாக நின்றன.

ஒரு வீட்டில், இரவு பத்து மணிக்குமேல் லைற் எரிக்கக் கூடாதென்றனர். இன்னோர் இடத்தில் பைப் தண்ணீரை விட்டு கிணற்று நீரையே பாவிக்க வேண்டுமென்றனர். இன்னொரு வீட்டில் விசிற்றர்ஸ் என்று யாரும் வரக்கூடாது என்றனர். இன்னொரு வீட்டில் இரவு பத்து மணிக்குள்ளேயே எல்லோரும் வீட்டுக்கு வந்துவிடவேண்டும் என்றனர்.

பீற்றர் காட்டிய வீடுகளில் முன்வைக்கப்பட்ட இத்தகைய ஐந்து அம்ச ஆறம்ச நிபந்தனைகள்தான் சிவாவை அந்த வீடுகளை அணுகவிடாது ஓட ஓட விரட்டின. இந்த விவகாரங்களும் அதையொட்டியெழும் மனித இருப்பையே நசுங்க வைக்கும் மேலாத்திக்கப்போக்குகளும் புறோக்கர்மாருக்கு எங்கே விளங்கப்போகுது?

"தன் நெஞ்சிலேயே வீட்டைச் சின்னமாக வைத்துக்கொண்டு வீடுதேடிய செல்வநாயகத்துக்கே ஒழுங்கான வீடுகிடைக்கேல்லையாம். நீங்களா வீடு தரப்போறியள்?" சிவா சிறிது சத்தம்போட்டு தன்னோடு கூட வந்த புறோக்கர் பீற்றருக்குக் கேட்கும்படியாகச் சொன்னான்.

புறோக்கருக்கு அவன் சொன்னது அரை குறையா விளங்கிற்று.

"ஆரு செல்வநாயகம்?" - அவன் கேட்டான்.

"அந்த தமிழ்ப் புறோக்கர்" - சிவா கூறினான்.

"அப்பிடியா? ஆனா அவங்களுக்கு இந்த ஏரியாவில வீடு எடுக்க ஏலாது. அவங்களுக்கு இந்தப் பக்கம் பழக்கம் இல்ல."

"பழக்கம் என்ன பழக்கம். நெஞ்சில உரம் பத்தாது!"

"அது சரி" - மீண்டும் புறோக்கர் ஒன்றும் விளங்காது ஒத்துக்கொண்டான்.

கையில் காசில்லாமல் என்னைப்போல் வீடு தேடும் ஒருவன் எங்கும் இருக்கமாட்டான். இன்னும் வீடு கிடைக்கவிட்டாலும் என்னை வீடு பார்க்கக் கூட்டித்திரியும் புறோக்கர் மாருக்கு ஐம்பது நூறென்று 'சந்தோச'ப்படுத்தல் வேறு.

ஒவ்வொரு சிறுதொகை செலவுகூட எனக்கு என் இரத்தத்தை உறிஞ்சுவது போலவேபட்டது.

போனவருடம் வீட்டுக்கு அட்வான்ஸ் கொடுப்பதற்காக அடைவு வைத்த நகைகள் இன்னும் மீட்கப்படவில்லை. அவை இருந்தாலாவது இம்முறை வீடுதேடுவதை கொஞ்சம் தைரியத்தோடும் செய்யலாம். ஆனால், இப்படி ஒன்றுமே இல்லாத கையறு நிலையில் வீடு எங்கே எடுப்பது வீடு!

எவ்வாறானாலும் வீடு தேடியே ஆக வேண்டும்.

ஆனால், எப்படி என்றுதான் தெரியவில்லை.

மந்திரத்தால் மாங்காய் பறிக்கிற விவகாரமா வீடு தேடுதல் என்பது? எனக்கு கிடைக்கிற வருவாயின் லட்ணத்தில் வீட்டுக்கு அட்வான்ஸ் கொடுக்க முடியுமா?

வெளிநாட்டிலுள்ள அவன் உறவினர்களுக்கு பல கடிதம். தொலைபேசி மூலம் செய்தி அனுப்பியாயிற்று. மருமக்கள், பெறாமக்கள், ஒன்றவிட்ட சகோதரர்கள், பேரமார் என்று எத்தனை வகையான உறவுகள். அவர்களுக்கு இங்கிருந்து பிறப்பு பத்திரம், விவாகப்பத்திரம், கலியாணப் பொருத்தம், நற்சாட்சிப் பத்திரம் என்று உதவி தேவைப்படும்போது காலநேரம் பார்க்காது தொலைபேசி அழைப்புக்கள் வந்த-வண்ணமிருக்கும் ஆனால், இவர்களுக்கு இங்கிரு ஏதாவது இப்படி உதவி இக்கட்டான நேரத்தில் தேவைப்படும்போது எல்லா உறவுகளும் மூடுண்டு நிசப்தமாகிவிடும். இவ்வேளையில் எந்தவித இரத்த உறவுமற்ற நண்பர்களிடமிருந்து திடீரென வந்துசேரும் உதவிகள் உண்மையில் கடவுகளின் வருகையாகவே அவனுக்கு படுவதுண்டு. இம்முறையும் அப்படி ஒரு நம்பிக்கை அவனுக்கு இருந்தது.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலத்தில் எங்கள் வீடும், இருப்பும் எம் பிரக்ஞையில் தட்டுப்படாத வெறும் சடங்காகவே இருந்திருக்கிறது என்பதை இப்போதே அவன் உணர்கிறான்.

"வீட்டுக்கு நேரே புள்ளடி
அதிகப்படி பத்தாயிரம்
சிறைச்சாலை பூஞ்சோலை
தூக்குமேடை பஞ்சுமெத்தை
வீடின்றி வாழ்வில்லை.."

என்றவாறு முன்னர் ஐந்து வருடத்திற்-கொருக்கால் வரும் தேர்தலின்போதும் பின்னர் மாவட்ட சபைத்தேர்தல், மாகாணசபைத் தேர்தல் என்று வருகின்ற 'போராட்டங்களின் போதும் தமிழருக்கு வீடுபெற்றுத்தரப் 'போராடும்' கறுப்புக் கோட்டு புறோக்கர்மார் ஏவி விடும் ஏவல் பிசாசுகள் இப்படி வந்து யாழ்ப்பாணத்து வாழ்க்கையை சுரணை கெட்டதாக்கியிருக்கலாம் என்று அவன் எண்ணியதில் நிரம்ப உண்மையுண்டு.

ஆனால், இப்போ கொழும்பு வந்ததிலிருந்து இந்த இருப்பு பற்றிய பிரக்ஞை, பிறழ்வுபட்டு விகாரம்பட்டதுபோன்ற நிலை. ஒவ்வொரு ஒரு ரூபா செலவிலும் அதன் நோண்டுதல் பிரா முதல் எமது பிரக்ஞையை பலூன் மாதிரி உப்பவைத்தது.

மாதம் மாதம் தண்ணீர்க்காசு, கரண்ட்டுக்காசு என்பவற்றோடு நாளாந்தம் பாண் தேயிலை, பால், மீன், மரக்கறி என்று ஒவ்வொன்றுக்கும் கொட்டுகிற காசு சதா எங்கள் இருப்பை சத்துணவு இல்லாத சோமாலியா குழந்தைகளின் வயிற்றைப்போல் வீங்கவைத்துக்கொண்டே இருந்தது.

இவ்வளவோடு இது நின்று விடப் போகிறதா?

இரவு 12 மணிக்கு வீடே நல்ல உறக்கத்தில் மூழ்கி இருக்கும்போது உமது இருப்பை நிச்சயப்படுத்திக்கொள்வதுபோல் கதவு தட்டப்படும். துடித்துப்பதைத்துக் கொண்டு தூக்கம் முகமெல்லாம் வழியக் கதவைத் திறந்தால் இரண்டு ராணுவக்காரர் ஆயுதம் சகிதம் காவல் தர பொலிஸார் வீட்டுக்குள் நுழைந்துகொண்டே-

"பொலிஸ் றிப்போட். பொலிஸ் றிப்போட்" ஒருவர் குரல் கொடுக்க, "ஐடென்றிற்றிக் கார்ட்", ஐடென்ரிற்றி கார்ட்" அடுத்தவர் கேட்க நாம் அவற்றை எங்கிருந்தோவெல்லாம் துழாவியெடுத்து பயபக்தியோட கையளிக்க வீட்டில் உள்ள அனைவரும் ஆவியுலகத்தவர்போல் தோற்றம் அளிக்க பொலிஸாரின் உதடுகளில் ஒரு வித கேலிச்சிரிப்பு.

"உங்களுக்கு சமஷ்டியா வேணும்? உங்களுக்கு ஐம்பதுக்கம்பதா வேணும்?" - முன்னர் சிவாவின் கடைக்குப் பின்னால் இருந்த சிங்களவர்கள கேட்ட கேள்விகள் இப்போ இந்தப் பொலிஸாரின் கேலிச்சிரிப்பில் எக்காளமிடுவதை அவன் காண்கிறான்.

முன்னர் பொலிஸ் றிப்போர்ட்டுக்கு புகைப்படம் என்பது தேவைப்படவில்லை. இப்போ புகைப்படங்கள் குடும்ப சமேதரராய் எடுத்து அதில் ஒட்டப்பட்டிருக்க அதில் இவர்களின் அனாதைத் தோற்றம் பொலிஸாரின் கேலிக்கும் கிண்டலுக்கும் மேலும் தூபம் இடுவதாகவே இருந்தது.

இவ்வாறு நள்ளிரவுகளில் துாக்கக் கலக்கத்தோடு பொலிசாரோடு போராடும் நிகழ்வுகளுக்கு வாய்ப்பளிப்பதுபோல் சிலவேளைகளில் பகல்

நன்றி - நூலகத்திட்டம்



நேரங்களில் கதவு தட்டப்படும். அவசர அவசரமாக தகவைத்திறந்து பார்த்தால் ஒரு மகான் கையில் ஒரு லிஸ்ரோடு இழுவுண்ட காற்சட்டையும் சேர்ட்டுமாக நின்று கொண்டிருப்பார்.

"என்ன வேணும்?"

"றோஹினி றோட்டில் ஹீன் மாஹாத்தையா செத்துப்போனது. அவரை கனத்தைக்கு கொண்டு போக உதவிசெய்யுங்க.." சாராய நாற்றமும் சிகரட் புகையுமா நிற்குமவர் ஒரு மாதத்திற்குள் எத்தனையோ பேரைச் 'சாகடித்து'விட்டு கணத்தைக்கு கொண்டுபோக வந்திருக்கிறார். அப்படி வரும் இத்'தொண்டர்' எந்தச் சிங்கள வீட்டுப்பக்கமும் தன் தலையைக் காட்டாமல் பார்த்துக்கொள்வது தான் அவரது தனி விசேடம், திறமை.

"இப்ப காசில்லை..."

"கொஞ்சமாவது குடுங்க.."

"கொஞ்சமும் இல்லை"

"பொய் சொல்ல வாணாம் ஐயா. கொஞ்சமாவது குடுங்க"

"எனட்ட காசில்ல போ".

"என்ன போ சொல்லிறது? பறதெமலா! நீ பாமன்கட சந்திக்கு வா நான் பாக்கிறன்!"

ஒவ்வொரு நிகழ்விலும் எமது இருப்பென்பது முள்ளந்தண்டில் குத்தப்படுவதுபோன்ற அனுபவம்.

ஊரில் இருக்கும்போது தமக்குள் சாதிபார்த்து தன்னினத்தில் பலரைத் தீண்டாதோராய் தள்ளிவைக்கும் தமிழரை ஏற்கெனவே சிங்களவன் பஞ்சமரில் ஒருவனாகக் கண்டு 'பறத்தமிழன்' என்று தள்ளிவைத்திருக்கிறான் என்பது தான் வேடிக்கை!

0 0 0

இரண்டு மாதகால அலைச்சலுக்குப் பின்னர் ஒருவாறு வீடு கிடைத்தது. அவன் எதிர்பார்த்ததுபோலவே ஓர் அன்புள்ளம் ஒன்று பிறநாட்டில் இருந்து பணம் அனுப்பியது தக்கநேரத்தில் உதவிற்று. அதைக்கொண்டு அவன் புதிய வீட்டுக்கு அட்வான்ஸ் கொடுத்தான். முஸ்லிம் ஒருவருக்கு சொந்தமான வீடு அது. அவரது பெரிய வீட்டுக்குப் பின்னால் இந்த வீடு இருந்தது. முன்பிருந்த பீரிஸ் தந்த வீட்டைவிட இது எவ்வளவோ மேல். புறோக்கரோடு எனது வீட்டுச் சொந்தக்காரரை சந்திக்கச் சென்றபோது என் கண்களை முதலில் கவர்ந்தது அந்த வீட்டு கண்ணாடி அலுமாரிக்குள் தெரிந்த முகமட் ஜின்னாவின் படந்தான். இந்தியாவிடமிருந்து முஸ்லிம்களுக்கு பாகிஸ்தானைப்பெற்றுக்கொடுத்த ஜின்னா! ஏனோ அந்தப்படம் என்னையே உற்றுப்பார்ப்பது போல்பட்டது.

அன்றிரவு பதினொரு மணியாகியும் புதிய வீட்டு ஒழுங்குகள் முடியவில்லை. பழைய வீட்டிலிருந்து புதிய வீட்டுக்குப்பொருட்களை ஏற்றி இறக்கியது. அதற்காக லொறிக்காரனுக்கு அறுத்துக்கொட்டிய கூலி. புறோக்கருக்கு தாரைவார்த்த கூலி. பொலிஸ் றிப்போர்ட்டுக்னெ புகைப்படம் எடுக்க ஸ்ரூடியோகாரனுக்கு அள்ளிக்கொடுத்தது. தமிழர்களை அவர்கள் வாழும் இடங்களில் இருந்தெல்லாம் குடியெழுப்பி அகதிகளாக அலையவிட்டுக் கொண்டே அவர்கள் மூலம் சிங்களவர்களுக்கு வியாபாரம் காட்டும் அரசாங்கம்! எல்லாவற்றிலும் இந்த வியாபாரம் உள்ளோடியிருந்தது. ஏதாவது அவசரமாக யாழ்ப்பாணம் போகவேண்டுமா? இருக்கிறதே, 5000, 6000 ரூபா என்று கறந்துகொண்டு உங்களை 'அனுப்பி'வைக்க லயன் எயார் என்றும், மொனறா என்றும்! வவுனியா தடுப்புமுகாமைவிட்டு கொழும்பு வரவேணுமா? 40,50ஆயிரம் என்று அந்தச் 'சேவை' செய்ய இருக்கிறார்கள் பொலீஸ் அதிகாரிகள்! தமிழ் மக்களின் ஒவ்வொரு 'விடுதலை இருப்புக்கும்' விலைபேச வைக்கும் ஆட்சி!

ஏன் இந்த அவலம்?

யார் செய்த பழி எம்மில் சூழ்ந்தது?

என் நினைவில் பொன்னம்பலம் ராமநாதன் ஓடி வருகிறார். பின்னர் ஜி.ஜி. பொன்னம்பலம் நினைவுக்கு வருகிறார்.

இங்கிலாந்தில் இருந்து வந்து துறைமுகத்தில் இறங்கிய பொன். இராமநாதனை சிங்களவர்கள் பல்லக்கில் இழுத்து வருகிறார்கள்.

1915சிங்களவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையியே மூண்ட இனக்கலவரத்தில் சிங்களவர்களுக்காக ஆங்கில ஆட்சியினரிடம் சென்று பரிந்துரைத்தமைக்கு நன்றி செலுத்தும் முகமாக அவர்கள் இவரைப்பல்லக்கில் வைத்து குதிரைகள் போல் இழுத்து வருகிறார்கள்.

வாறார் வாறார் தலைவர் வாறார்!
எங்கள் லிங்கம் அமிர்தலிங்கம்!
அதிகப்படி பத்தாயிரம்!
வீட்டுக்கு நேரா போடு புள்ளடி!

நான் காணாத பல்லக்கில் காவப்பட்ட தலைவரை நான் கண்ட கூட்டணி பல்லக்கு காவிகளின் ஊர்வலத்தோடு என மனம் என்னையறியாமல் ஒப்பிட்டுப்பார்க்கிறது.

இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டபோது, தான் பல்லக்கிலைவத்து காவப்பட்டதால் உச்சி குளிர்ந்து பெரும்பான்மை இனத்தோடு ஒண்டுக்கிக்கலாம்' என்று எண்ணிய பொன்ராமநாதன் ஆதியார் கருத்து, கூட்டணி திருச்செல்வம் ஆதியார் ஊமாக வந்து இன்றுள்ள பல தமிழ்க்கட்சி புறோக்கர்களிடம் ஊறி வியாபித்து நிற்கிறதா?

சுதந்திர பிரகடன காலத்தில் தமக்கென தனியான இடத்தைக்கேட்கும் சந்தர்ப்பத்தைத் தவறவிட்ட தலையில்லாத தலைவர்கள், இல்லை தலையில்லாத புறோக்கர்கள்! இல்லை பல்லக்கில் தூங்கிய மகான்கள்!

ஜின்னா படுபயங்கரமாகச் சிரிக்கிறார்.

ஜின்னா மகாத்மா காந்தியைக் கூட நம்பவில்லை!

காந்திக்குப் பின் வருபவர்கள் எல்லாம் காந்திமாதிரி இருப்பார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

ஜின்னாவிடம் தீர்க்க தரிசனம் சரியாகவே இருந்தது.

"பாபர்மசூதி - ராமர்கோவில்' இடிபாடுகளுக்கிடையியே 'ஈஸ்வர அல்லாஹ் தேரேநாம்' என்ற காந்தியார் பஜனை உயிரற்று ஒலிக்கிறது.

0 0 0

அன்று இரவு புது வீட்டில் சிவாவுக்கு நித்திரை வருவதாய் இல்லை.

அவன் படுக்கையில் கிடந்து உழன்றுகொண்டிருந்தான.

பல கற்பனைகளும் எண்ணங்களும் அரைகுறைக் கனவுகளும் காட்சிகளும் அவனை மூழ்கடித்துக்கொண்டிருந்தன.

ஜின்னாவுக்கு இந்தியப் பிரதமர் பதவியைக் கொடுக்க வேண்டும் என்று காந்தி நிற்கிறார்.

ஆனால், சுயநல நோக்குடைய நேரு, பட்டேல் போன்றவர்களுக்கு அதில் விருப்பமில்லை.

ஜின்னாவை இந்தியப் பிரதமர் ஆக்கியிருந்தால் பாகிஸ்தான் கிடைத்திருக்குமா?

செல்வநாயகம் யோசிக்கிறார்.

பொன் இராமநாதன் சிங்களவர்கள் பல்லக்கில் வைத்து இழுத்திருக்காவிட்டால் தமிழ்ப் பிரதேசங்களுக்கு இன்றுள்ள நிலை ஏற்பட்டிருக்குமா?

ஜயவர்த்தன இலங்கையைத் துண்டாடியபடி கண்டி யாத்திரை செல்கிறார்.

பண்டாரநாயக்க, செல்வநாயகத்தோடு செய்து கொண்ட ஒப்பந்ததைக் கிழித்தெறிகிறார்.

செல்வநாயகம் யாழ்ப்பாணக் கச்சேரியடியில் சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்கிறார்.

மூன்று மாதங்கள் நீடிக்கும் சத்தியாக்கிரகப் போராட்டம்!

ஓர் நாள் இரவு சத்தியாக்கிரகிகளுக்கு எதிராக ராணுவ நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சத்தியாக்கிரகிகள் அடித்து விரட்டப் படுகின்றனர். சிறைக்குள் தள்ளப்படுகின்றனர்.

ஒரு நாள் ராணுவ நடவடிக்கையோடு சத்தியாக்கிரகம் நின்றுபோகிறது!

காந்தியும் ஜின்னாவும் மாறிமாறிப் பெரிதாகச் சிரிக்கின்றனர். "இது சத்தியாக்கிரகமா? இது சத்தியாக்கிரகமா? என்பது போல் அவர்கள் சிரிப்பொலி கேட்கிறது.

கதவு தட்டப்படுவது போல் இருக்கிறது.

சிவா விழித்தெழுந்து போய்த் திறக்காமலே யாரோ உள்ளே வருவது தெரிந்தது. ஒரு காரிய உருவம் போல் இருந்தது. நெஞ்சு படபடக்க அவன் வந்தவனைப் பார்க்கிறான்.

யார் அவன்? அந்த மாயப் புன்னகை!

கிருஷ்ணனா?

"கிருஷ்ணா, நீ எங்கே இந்த நேரத்தில்...?"

"மீண்டும் துரியோதனிடம் போகிறேன். பாண்டவர்களுக்கு இடம் கேட்டு"

"பாண்டவர் பிரச்சினை எப்பவோ முடிந்து போயிற்றே? இப்போ என்ன திரும்பவும்?"

"இல்லை, காலங்காலமாக, ஒவ்வொர் இடத்தில் ஒவ்வொர் தளங்களில் அது நடந்து கொண்டுதான் இருக்கிறது"

"எங்கள் நிலையைப் பார்த்தாயா?"

"உங்களுக்கென்ன, ஏதோ விதத்தில் தப்பிவந்து கொழும்பில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.. ஆனால்,..."

"ஆனால் என்ன...?"

ஆனால், குந்தியிருக்க இடமின்றி உடுக்க உடையின்றி ஒரு நேரக் கஞ்சிக்கே வழியின்றி காட்டிலும் ரோட்டிலும் செத்துக்கொண்டிருக்கும் உன் ஊர் மக்களைத்தெரியுமா?"

"ஆம்' என்பதுபோல் நான் பேசாது இருக்கிறேன்.

"அவர்களுக்காகத்தான போகிறேன்"

அவன் என்னைக் கடந்து மேலே போவது தெரிந்தது. யூதர்களை அழைத்துச்சென்ற மோசஸ்போல் அவன் நடையில் துயர் தெரிந்தது.

அவன் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியிலும் துயர் அதற்கு சுருதி கூட்டுவதுபோல் நான் கொஞ்ச நாட்களுக்கு முன்னர் படித்த நம்மூர்க்கவிஞனின் பாடல் எழுந்து வந்து என்னுள் ஒலித்தது.

"துயர் வரினும் சுகம் வரினும்
நமது கூட்டுக்குள்
சுதந்திரமாய் செத்து மடிவோம்
அந்த மண்ணிலிருந்து
நம் காயங்களைப் பேச விடுவோம்

அவமானச் சின்னங்களாய்
வேற்று மண்ணில்
சிறுத்துக் குறுகும்
ஒட்டுண்ணி வாழ்வுக்கொரு
விடை கொடுப்போம்...."

புதுப்பாடு

## வாழ்வின் மீதான துயரத்தை எழுதுகையில்...

சித்திரையோ
தைப்பொங்கலோ
இனி எந்தவிதமான கொண்டாட்டங்களும்
எங்களுக்கில்லை
பொழுது புலரும் செய்தி கொணரும்
ஓர் அதிகாலை விடிவெள்ளியை எதிர்பார்த்தபடி
கண்ணயரும்
எங்கள் குழந்தைகளின் கனவை
வெடிச்சத்தம்
கலைத்து விடக்கூடாதே எனும்
மிகுந்த பயத்தோடு நாமிருந்தோம்.
காகம் பறக்கும்
நீல இருள் வெளியில்
நட்சத்திரங்கள் பூத்துச் சிரிக்கும் தூரத்தே
ஒரு வனத்தில்
பூக்கள் மலரும் வாசமிகு நாட்கள்
நாட்பட நாட்பட
பிணவாடை வீசத்தொடங்கியது துரதிர்ஷ்டமே
எனினும்
எங்களது எல்லா வீதிகளிலும்
எல்லாத் தெருக்களிலும்
காற்று வீசுகின்றது
நிலா எறிக்கின்றது
சூரியன் வருகின்றது
பூக்கள் மலர்கின்றது
அஃதே
பாடசாலை சென்று திரும்பி வராத
எங்களது கிருஷாந்தி
இன்னும்
எங்களுடனே இருக்கிறாள்
எங்களது பாடப்புத்தகங்களில்
அவளது பெயரையே
எழுதி வைத்திருக்கிறோம்
உங்களது மன்னம்பேரி
உங்களுக்கு எவ்வளவு முக்கியமோ
எங்களது கிருசாந்தியும்
எங்களுக்கு முக்கியமானவளே
உறைந்து போன எங்கள் இரத்தத்தின் மீதும்
உருக்குலைந்து போன எங்கள் வாழ்வின் மீதும்
சத்தியம் பண்ணிச் சொல்கிறோம்
நாங்களும் இந்த மண்ணில் தான் பிறந்தோம்
இந்த மண்ணின் புழுதியைத் தான் உண்டு மகிழ்ந்தோம்
தயவு செய்து
எங்களை(யும்) வாழவிடுங்கள்!

- லைலா -

## தவிர்க்கமுடியாமை

நானும் மாசுபடுகின்ற சூழலாகிப் போனேன்
நிலம் குளிர ஒரு மழை பெய்து
ஊனமின்றி ஒரு பூமலர்ந்து
வெகுநாட்கள்

பலரும் மூக்கைப் பொத்திக் கொண்டு திரிகின்றனர்
அடிக்கடி நீ கூட ஓங்களிக்க முயல்கிறதாகவும்,
உன் தலைமயிர்கள் ஒருமுறை பொசுங்கியதாகவும்
அறிகிறேன்

வெயில் உரத்து, ஒலிகூடி
நச்சுப்புகை கனத்துப்போனதென
உணர்கையில் உயிர் கருகிப்போகிறது

என்செய்வேன்
என் கண்மணிகளின் வழியே
செவிச்சோனைகளின் வழியே
மூக்குத் துவாரங்களின் வழியே
உள்நுழைந்து, உள்நுழைந்து
மாசுபடுகிறதென் மனம்

சிவ - வரதராஜன்

நன்றி - நூலகத்திட்டம்



# ஈழ சினிமா:

# ஆறு குறுந்திரைப்படங்கள்

- யமுனா ராஜேந்திரன்

சமீபத்தில் ஈழத்தில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிதர்சனம் தொலைக்காட்சியினரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் முல்லை மாவட்டக் கலைப்புண்பாட்டுக் கழகத்தினரும் இணைந்து தயாரித்திருந்த ஆறு குறுந்திரைப் படங்களைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. ஈழத்து சினிமாவின் கதை என்றொரு புத்தகம் வந்திருக்கிறது. பாலுமகேந்திரா இதற்கு முன்னுரை எழுதியிருக்கிறார். இதுவன்றி லண்டனில் இருந்து வெளியாகும் ஃபிரேம் வொர்க் (Frame Work) எனும் பத்திரிகை தமிழ்/ சிங்கள சினிமா பற்றிய இலங்கைச் சிறப்பிதழொன்றும் வெளியிட்டிருக்கிறது. கனடாவிலிருந்து வெளியாகும் தேமதுரம் வீடியோ சஞ்சிகையில் காவலூர் ராஜதுரையின் பொன்மணி திரைப்படம் பகுதிகளாக சேர்க்கப்பட்டிருக்கிறது. லண்டனில் இயங்கும் பொதுநல அமைப்பு லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் உட்பட குறிப்பிடத்தக்க சிங்களக்கலைஞர்களின் படங்களை திரையிட்டிருந்தது. இச்சூழலில் நான் பார்த்த ஆறு குறும்படங்கள் இருவிதங்களில் என்னை சிந்திக்கத்தூண்டின.

1. வரலாற்று ரீதியில் இனப்பிரச்சினையின் நெருக்கடி தமிழ், சிங்கள திரைப்படங்களை/ திரைப்படத்தொழிலைப் பாதித்தது எவ்வாறானது?

   ஹாலிவூட் இந்திய சினிமாக்கள் எவ்வகையிலான ஆதிக்கத்தை சிங்கள / தமிழ் பட வளர்ச்சியின் மீது கொண்டிருந்தது?

2. ஈழத்து சினிமா இருவேறு கால கட்டங்களிலும் மூன்று வெவ்வேறு காலங்களிலும் நிகழ்ந்திருக்கிறது.

அ. ஈழப்போராட்ட எழுச்சிக்கு முந்தைய படங்கள் இலங்கையில் மட்டுமே தயாரிக்கப்பட்டு திரையிடப்பட்டன.

ஆ. ஈழவிடுதலை எழுச்சிக்குப் பின்னால் இரு இடங்களில் ஈழத்திரைப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஈழத்திலும் படங்கள் வருகின்றன. ஐரோப்பாவில் புலம்பெயர்ந்த தமிழர்களும் படங்கள் கொண்டு வருகிறார்கள்.

இம்மூன்று வகைகளுக்கும் இடையிலான தொடர்புகள் எத்தகையவை? குணரூப வேறுபாடுகள் என்ன?

நிச்சயமாக எந்த தேசிய விடுதலைப் போராட்ட சமூகங்களிலிருந்தும் வருகின்ற திரைப்படங்கள் வடிவத்திலும், உள்ளடக்கத்திலும் உடைப்பை உருவாக்கும் தன்மைகளைக் கொண்டிருக்கும் அதேவேளை உடனடிப் பிரச்சார நோக்கத்தையும் கொண்டிருக்கும். ரஷ்ய சீனப்புரட்சிக்குப் பிந்திய பின்நோக்குப் படங்களிலும் இலத்தீனமெரிக்க தலைமறைவு சினிமாவிலும் (Undergroud Cinema), ஆபிரிக்க விடுதலைச் சினிமாவிலும் (African Liberation Films) ஆனந்த் பட்வர்த்தனின் அவசர நிலை காலச் சினிமாவிலும் (Ciema at Emergency) இத்தகைய தன்மைகளை நாம் காணலாம்.

பிரச்சாரம் பற்றிய படங்கள் வெகுசீக்கிரமாகவே வரலாற்று ஆவணங்கள் என்ற நிலையை அடைந்து விடுகிறது. வெகு சில படங்களே கலையனுபவத்தைத் தொடர்ந்து எழுப்பும் படங்களாக நிற்கிறது. ரஷ்யாவில் ஐன்ஸ்டினது படங்களும், பிரேசிலில் கிளாபர் ரோச்சாவின் படங்களும், அர்ஜென்டினாவில் ஸொலானஸுடையதும், கியூபாவில் குடிரெஸ் அலியாவினுடையதும் அத்தகைய சிருஷ்டிகள்.

நான் பார்த்த ஈழத்து திரைப்படங்கள் ஆறு. ஆறு படங்களில் 1. காற்றுவெளி, 2. இது எங்கள் தேசம், 3. தமிழோசை, 4. தாயகக் கனவு போன்றவை 45/50 நிமிடங்கள் வரும் படங்கள். வீரசீலம், சின்னவிழிகள் போன்றவை குறும்படங்கள். இதில் காற்றுவெளி, இது எங்கள் தேசம், சின்ன விழிகள், தமிழோசை போன்றவை கதைப்படங்கள். வீரசீலம், தாயகக் கனவு இரண்டும் நினைவு சம்பவத்தெறிப்புக்கள்.

சின்னவிழிகள், தாயகக் கனவு, தமிழோசை படங்களை பொ. தாசன் இயக்கியிருக்கிறார். காற்றுவெளி, வீரசீலம் படங்களை ஞானரதன், வை. கலையரசன் தந்திருக்கிறார்கள். இது எங்கள் தேசம் படத்தை வை. ராமநாதன் இயக்கியிருக்கிறார். குறிப்பிட்ட எல்லாப் படங்களுமே வரலாற்று நிகழ்வுகளின் அடிப்படையில் இயல்பானவை.

இப்படங்களைப் பற்றிப் பேசுவதற்கு முன் 1983 - ஆம் ஆண்டுக்கு முன் ஈழத்து சினிமா / தமிழ் - சிங்கள சினிமா/ புலம்பெயர் ஐரோப்பிய தமிழ்ச் சினிமா பற்றியும் சில குறிப்புக்களை முன்வைக்க விரும்புகிறேன். இந்த பின்னோக்கிய பயணம் நான் இங்கு பேசவிருக்கும் ஆறு குறுந்திரைப்படங்களைப் பற்றிய ஆழமான புரிதலுக்கு முகாந்திரமாக இருக்கும். எத்தகைய சினிமாவை சமூக மாற்றத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் படைக்கப் போகிறோம் என்பதற்கான விவாதத்திற்கான தூண்டுதலையும் அது கொண்டிருக்கும்.

லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், தர்மசேன பத்திராஜா போன்றவர்கள் சிலாகிக்கப்படும் சிங்கள சினிமா இயக்குனர்கள். லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் இலங்கை சத்யஜித்ரே என சொல்லப்படுபவர். இடதுசாரி விமர்சகர்கள் சொல்கிறபடி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் முதலாளித்துவ தாராளவாத மனிதாபிமானத்தையும், ஐரோப்பிய அழகியல் மதிப்பீடுகளையும் ஏற்றுக் கொண்டவர். அரசியல் பிரக்ஞையிலிருந்து தூரப்பட்டு நிற்கும் கலைவடிவமாகவே அவர் சினிமாவைப் பார்த்தார். தர்மசேன பத்திராஜா



ஈழத்தமிழ் சினிமாவான பொன்மணியை இயக்கியவர். ஜப்பானிய ஐரோப்பிய Avant - grade சினிமா கலகக்காரர்களால் பாதிப்புற்றவர். புதிய சினிமா மொழியைக் கையாள முயன்றவர். ஆனால், அவரும் கூட லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸைப்போல், பெரும்பாலான சிங்களப் புத்திஜீவிகளைப்போல சிங்கள/ புத்தமத கருத்துருவ வறையறைக்குள்ளேயே நின்றார். அவர் உருவாக்கிய பொன்மணி படம் கூட 'மற்ற' படம் தான். தமிழ் இந்துமத கருத்துருவத்தை முயன்று பார்த்த படம் தான். சிங்கள புத்திஜீவிகள் தமது தொன்மையான கலாசார வேர்களுக்கு திரும்பிப் போதல் என்பது காலனியத்திற்கு எதிரான திசைவழியில் சிங்கள / பௌத்த கருத்துருவ தளத்தில் தான் நடந்தது. எதிர்த் திசையில் தமிழ்/ இந்துத்துவ/ சைவ திசைவழியில் தான் தமிழர் கலாசார வாழ்வில் நிகழ்ந்தது. இருவகை புத்திஜீவிகள் முழுக்கவும் இனமத வெறியர்கள். மறுபுறம் முதலாளித்துவ தாராளவாத மனிதாபிமான ஐரோப்பிய அழகியல் மதிப்பீட்டாளர்கள். சிங்களவர்கள் தமது அடையாளத்தை உடைத்துக் கொண்டு புதிய மனிதனை விளையாததைப் போலவே, தமிழர்களும் எதிர் திசையில் தமது சைவத் தமிழ் ஜாதிய ஆதிக்க மரபை உடைத்துக் கொண்டு புதிய மனிதனுக்கான விளைவைக் காண்பிக்க வில்லை. 1970 வரையிலும் இரு பக்கமும் இருந்த புத்திஜீவி வர்க்கத்திற்கும், மக்களுக்கும் எந்த விதமான தொடர்பும் சினிமா சாதனம் என்கின்ற வகையில் உருவாகவில்லை. 1970 ஆம் ஆண்டு வரையிலான கலாசார சூழல் இதுதான். நாடகத்தில் இப்சன், பென்ஜி வில்லியம்ஸ் நாவலில் லாரன், காம்யூ, ஜிடே போன்றவர்கள் தான் இவர்களது ஆதர்ஸம். 1970க்குப்பின்னால் இனப்பிரச்சினை நெருக்கடி பெற்றது. தீவிரமான கருத்துக்கள் மோதத்துவங்கின.

பிரிட்டிஷ் காலனியாதிக்கத்திற்குப் பின் மாறி மாறி பதவிக்கு வந்த சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமது கலாசாரத்தைக் காப்பது என்பது சிங்கள தேசிய மொழியை காப்பதென்பதும், சிங்கள தேசியக் கலாசாரத்தைக் காப்பதென்பது தான். இலங்கை சினிமா என்பது இறக்குமதி சினிமாதான். 1972ஆம் ஆண்டு ஸ்டேட் பிலிம் காப்பரேஷன் துவக்கப்பட்டது. இப்போது அதன் பெயர் நேஷனல் பிலிம் கார்ப்பரேஷன். படங்களுக்கான பிலிம் ஸ்கிரிப்ட் கூட அரசு அதிகாரிகளால் பரிசீலனை செய்யப்பட்டு தம் கலாசாரத்தை காப்பாற்றும் படங்களுக்கு 100 சதம் வங்கிக்கடன் கொடுக்கப்பட்டது. - சிங்களப்படங்கள் கட்டாயம் திரையிடப்பட நாட்கள் ஒதுக்கப்பட்டன. மீதி நாட்களிலேயே பிற திரைப்படங்கள் திரையிட அனுமதிக்கப்பட்டன. ஹொலிவூட் பூடங்களும், இந்தியப் படங்களும் வரையறைக்குட்பட்ட வகையில் இறக்குமதி செய்யப்பட்டன. அதேவேளை தென்னிந்திய தமிழ்ப் படங்கள் தடையின்றி இறக்குமதி செய்யப்பட்டது. அரசின் நோக்கம் தமிழ்ப்படங்கள் தமிழ்ப் பார்வையாளருக்கு கொடுத்து, இந்திப் படங்களை மட்டுப்படுத்துவதன் மூலம் சிங்களப் பார்வையாளர்களை சிங்களப் படங்களுக்கு ஈர்ப்பது. இந்த நிமிஷம்வரை தேசிய திரைப்படக் கல்வி நிலையம் இல்லை. திரைப்பட ஆவணக் காப்பகமும் உருவாக்கப்படவில்லை. ஐரோப்பியப் படங்களை தூதரகங்கள் மூலமே இலங்கை மக்கள் பார்க்க முடிகிறது. குறிப்பாக கொழும்பில் வாழும் மக்கள்.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வியாபாரப் படங்கள் தமிழ், சிங்கள, முஸ்லிம்கள் அனைவராலும் இன வேறுபாடின்றி பார்க்கப்பட்டது. பொழுது போக்கு சினிமாவுக்கு, கிளுகிளுப்பு சினிமாவுக்கு மொழி இனத்தடைகள் ஏதுவுமில்லை. சிங்களப் புத்திஜீவிகளிடையில் ஜே.வி.பியின் கலாசார அரசியல் முக்கியத்துவமுடையது. இந்திய விஸ்தரிப்பின் ஒரு அங்கமாகவே, அரசியலின் அங்கமாகவே தமிழ்ப் படங்களை எம்.ஜி.ராமச்சந்திரனை அவர்களை ரசிக்கும் இலங்கை தமிழர்களை அவர்கள் நோக்குகிறார்கள். இலங்கையின் கலாசார வளர்ச்சிக்கு ஏதும் செய்யாத மாற்றாட்களாகவே தமிழர்கள் பார்க்கப்பட்டார்கள். தமிழ்ச் சினிமாவிலிருந்த நாயக ஜால / எம்.ஜி.ஆர்., சாகச தென்னிந்திய 'தேசிய சினிமா' பண்பு சிங்கள சினிமாவில் இல்லாதது பிரச்சினைக்குரிய விஷயமாக இருந்தது. அழுத்திச் சொன்னால் தமிழர்கள் விரும்பிய 'தேசிய சினிமா' மாதிரி சிங்களவர்களுக்கு இல்லை என்பது மையப்பிரச்சினை ஆகியது.

இதைப்போக்க வந்த சிங்கள இயக்குனர் ஜெயவிலால் விலேகொடா (Jayavilal Vilegoda). இந்திய தமிழ்ச் சினிமாவைப் பார்த்து படம் செய்பவர்களைக் கடுமையாக விமர்சித்த இவர், சிங்கள யதார்த்தவாதம், சிங்கள கலாசார யதார்த்தவாதம் எனும் நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டார். இந்த யதார்த்தவாதம் Vattoru (Formula) எனும் சொல்லால் குறிப்பிடப்பட்டது. இச்சொல்லின் பொருள் கிராம மருத்துவர் தரும் மூலிகை வைத்தியம் என்பது. இலாபத்தையும், யதார்த்தமற்றதற்கும் எதிராக இந்தி தமிழ்ச் சினிமாக்களுக்கு எதிராக யதார்த்தமான கலைத்தன்மையுள்ள சிங்களக் கலாசார வேர்களுள்ள படங்களைத் தரமுயன்றவர் இவர். 1983 ஜூலை கலவரத்தின்போது தமிழ் இந்தியப் படங்களைத் திரையிட்ட 12 திரையரங்குகள் கொழும்பில் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. இலங்கையில் மொத்த திரையரங்குகள் வட பகுதியையும் சேர்த்து 357. 1989ஆம் ஆண்டு சிங்களப் பேரினவாத உணர்ச்சி உச்சத்தில் இருந்த போது எம்.ஜி. ராமச்சந்திரன் படங்கள் மட்டுமல்ல, சத்யஜித்ரேயின் படங்கள் கூட திரையிடப்பட முடியாத நிலை ஏற்பட்டது. வீடியோ கடைகள் தமிழ்/இந்தி இந்தியப் படங்கள் கிடைக்காது என அறிவிப்புப் பலகைகள் வைத்தன.

சிங்களப் பொழுது போக்குப் படங்களை உருவாக்கியவர்களும், தென்னிந்திய தமிழ் / இந்தியப் படங்களை இறக்குமதி செய்தவர்களும், பணம் போட்டவர்களும் பெரும்பாலும் கொழும்புத் தமிழ் முதலாளிகள் தான். இவர்கள் ஈழத்தமிழ் சினிமாவுக்கு எந்தவிதமான உத்வேகமோ பொருளாதார ஆதாரங்களோ தரவில்லை.

ஈழத்தில் 32 தமிழ்ப்படங்கள் கொண்டுவர முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. 3 படங்கள் தவிர பெரும்பாலான படங்கள் எம்.ஜி.ஆர்./ சிவாஜி பாணிப்படங்களின் பிரதிகளாகவே இருந்தன. தோட்டக்காரி, சமுதாயம், கடமையின் எல்லை போன்றவை மலையகத் தமிழர் பற்றிய படங்கள்: கமலஹாசன், ஜெய்சங்கர், சிவாஜி போன்றவர்கள் நடித்த குரு, பைலட் பிரேம்நாத், நங்கூரம், இரத்தத்தின் இரத்தம் போன்ற படங்கள் இலங்கைத் தமிழ் கூட்டுறவுப் படங்களாகச் சொல்லிக் கொண்ட மசாலாப்படங்கள். இலங்கைத் தமிழ் மக்களின் தனித்துவ அடையாளத்துக்கான முயற்சியை மேற்கொண்ட படங்கள் என மூன்று படங்கள் சொல்லப்படுகிறது.

அவை 1973ம் ஆண்டு படமான வி.எஸ். துரைராஜாவின் குத்துவிளக்கு, 1974ம் ஆண்டுப் படமான சிவ்தாசனின் வாடைக் காற்று, 1978ம் ஆண்டுப்படமான தர்மசேன பதிராஜாவின் பொன்மணி போன்றவை. பொன்மணி படம் இன்றைய அளவிலும் தொழிநுட்ப அளவில் அதன் முழுமைக்காகப் பேசப்படுகிறது. இருந்தாலும் இப்படங்கள் வெற்றி பெறவில்லை. வெற்றிபெறாததற்கான அரசியல் பொருளாதாரக் காரணங்கள் மிகப்பல.

1. ஈழத் தமிழ் மக்கள் பெரும்பாலானோர் தமது கலாசார அங்கீகாரத்துக்கு இந்தியத் தமிழர்களையே சார்ந்திருந்தனர். ஈழத்தமிழரின் தனித்துவ அக்கறைகள் அவர்களுக்குக் குறைவாகவே இருந்தது. இந்தியத் தமிழ்ப் படங்களைப் பார்ப்பதில், சிலாகிப்பதில் உள்ள அக்கறை ஈழத்துப் படங்களைப் பார்ப்பதில் அவர்களுக்கு இல்லை.
2. இந்தியத் தமிழ்ப்படங்கள் உருவாக்கியிருந்த பொழுதுபோக்கு சினிமா வடிவங்களை உடைத்துக் கொண்டு எழுந்து யதார்த்தவாத படங்களை அங்கீகரிக்கும் கலாசார விழிப்புணர்ச்சி ஈழத்தமிழ் மக்களிடம் உருவாவில்லை.
3. படங்கள் விற்பதற்கான ஏற்பாடுகள் இல்லை.
4. ஸ்டேட் பிலிம் காப்பரேஷன் இந்தியத் தமிழ்ப்படங்களில் ஒன்றாகவே இதைப் பார்த்தது. தமிழ்ப்படங்கள் வழக்கமாகத் திரையிடப்படும் அரங்குகளிலேயே திரையிடப்பட்டது. சிங்கள மக்கள் பார்ப்பதற்கான வாய்ப்பைத் தவிர்த்தது.
5. இலாப நோக்கங்கள் கொண்ட விநியோகஸ்தர்கள் ஒத்துழைக்கவில்லை. அவர்களது நோக்கமெல்லாம் ஹொலிவூட், இந்தி, தமிழ் படங்களை இறக்குமதி செய்வதிலேயே இருந்தது.
6. இந்திப்படங்களை மட்டுப்படுத்தி சிங்களப் படங்களை ஊக்குவிப்புச் செய்த அரசு இந்தியத் தமிழ்ப்பட இறக்குமதியை மட்டுப்படுத்தி ஈழத்தமிழ்ச் சினிமாவை ஊக்குவிப்புச் செய்யவில்லை.

இலங்கை காலனி ஆதிக்கத்திலிருந்து விடுபட்டதிலிருந்து இன்றுவரை சினிமாத்தொழிலும், அதன் கொள்கைகளும் இன ண்பாட்டு அரசியலோடு இரண்டறக் கலந்திருக்கிறது. உலகில் இன்று ஆதிக்கம் செய்யும் சினிமாக்கள் மூன்று இடங்களில் இருந்து வருகின்றன. இம்மூன்று பிரதேசப் படங்களும் பரஸ்பரம் போட்டியும் இலாப நோக்கும் பொழுது போக்கு அம்சமும் முக்கியமாகக் கொண்டதுமான திரைப்படங்கள். அவை 1. அமெரிக்க ஹொலிவூட்டிலிருந்து. 2. இந்திய ஹொலிவூட் மற்றும் தென்னிந்தியாவிலிருந்து. 3. அரேபிய எகிப்திலிருந்து வருகின்றன. சமீபத்தில் ஆபிரிக்கத் திரைப்படவிழா சம்பந்தமாக நிறைய படிக்க வேண்டியிருந்தது. ஆபிரிக்க நாடுகளில் தமது சொந்த நாட்டுப்படங்களை அழிக்கிறவைகளாக இறக்குமதிப் படங்களாக இருப்பவை இம்மூன்று இடங்களில் இருந்தும் வரும் படங்கள் தான். விநியோகம், தியேட்டர்கள், பட இறக்குமதி போன்றவற்றைக் கட்டுப்படுத்துகிறவர்கள் உலக சினிமாச் சந்தையில் இவர்கள் தான். ஹொலிவூட்/ இந்திய/ எகிப்து வியாபார பொழுதுபோக்குப் படங்களுக்கு எதிரான எதிர்ப்பு என்பது பெரும்பாலும் எல்லா மூன்றாம் உலக நாட்டு சமூக விழிப்புணர்வுள்ள திரைப்படக்காரர்களிடமும் இருக்கிறது. இலங்கையிலும் தத்தமது தேசிய சினிமாவை விளைந்தவர்கள் சிங்களவர்கள் / தமிழர்கள் தத்தமது பிரதேசங்களுக்குள் தமது சொந்த மண்ணிலிருந்தான படங்கள் வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பது வரலாறு. சிங்களவர்களின் இந்திய / தமிழ் படங்களுக்கு எதிரான எதிர்ப்பு என்பது ஒரே நேரத்தில் சிங்கள / பௌத்த பூர்வீக கலாசாரத்திற்கு மேலாதிக்கம் கோருவதாகவும் ஈழத்தமிழர் கலாசாரத்திற்கு எதிரானதாகவும் எழுகிறது. ஈழத்தமிழர்களின் இந்திய/ தமிழக வியாபார பொழுதுபோக்கு சினிமாவுக்கு எதிரான தீர்ப்பு என்பது தமது தனித்துவ கலாசாரப்புனரமைப்புக்கும், இந்தியாவுக்கு எதிரான அரசியல் எதிர்ப்புக்கும் சாட்சியாயமாக விளங்குகிறது.

தற்பொழுது ஈழத்தில் நிலவும் இந்திய/ தமிழ் வியாபார பொழுதுப்போக்குப் படங்களின் மீதான தடை என்பதை மூன்றாம் உலக சமூகங்களின் தனித்துவ அடையாள சினிமா என்கின்ற வகையில் சிங்களவர்களின் தனித்துவ அடையாளத்துக்கான எதிர்ப்பு என்கின்ற வகையில் விளங்கிக் கொள்ளவே முடிகிறது. கடந்த காலம் போலவே இன்றும் தொடர்ந்து ஈழத்தில் சிங்களத்தில் சினிமா அரசியல் போராட்டத்தின் ஒரு பகுதியாகவே இருக்கிறது.

குத்துவிளக்கு/ வாடைக்காற்று/ பொன்மணி போன்ற ஈழத்தின் தனித்துவ அடையாளத்துக்கான படங்களின் தொடர்ச்சியாகவே ஈழத்தில் மேற்கொள்ளப்படும் இன்றைய முயற்சிகளைக் காணலாம். தென்னிந்திய இந்தி / தமிழ் வியாபார பொழுது போக்குப் படங்களின் தொடர்ச்சியாகவே புலம் பெயர்ந்த நாடுகளில் மேற்கொள்ளப்படும் ஈழத்தமிழர்களின் இது வரையான சினிமா முயற்சிகளைச் சொல்லலாம். மேற்கில் வெளிவரும் தமிழ்ப்படங்கள் உக்கிரமான வாழ்பனுபவத்தில் வேர் கொள்ளாதவை. ஐரோப்பியச் சமூகங்களில் நிலவும் முரண்பாடுகள் பற்றிய ஆய்வுகள் இல்லாதவை. மேற்குக்கும் நமது கலாசாரத்துக்கும் ஏற்படும் மோதல்களைக்

நன்றி - நூலகத்திட்டம்



கூட ஆழ் தளத்தில் சென்று பார்க்காதவை. இங்கும் கூட இவர்களுக்குப் பிரச்சினை ஆய்வு செய்யப்படாத மேலோட்டமான பாலுறவு அதிர்ச்சிகள் தான். உடைந்து விழும் சைவசித்தாந்த ஜாதிய பூர்வீகப்பண்பாட்டு அதிர்வுகள் தான். கோயில்கள் இந்துமதம் பற்றிய பத்திரிகைகள், பாலுறவுப் பிரமிப்பு, தாழ்வுணர்ச்சி, அடிமைத்தனம், தப்பித்தோடும் கனவு நிலைபோன்றவைதான் ஐரோப்பிய ஈழத்தமிழ் படங்களின் நிகழ்களம். ஆக்கபூர்வமாக போற்றுவதற்கான வேர்கள் இதுவரை வெளியான கதைத்தேர்வுகளில் இல்லை.

இச்சூழலில்தான் நான் பார்த்த ஆறு குறுந்திரைப்படங்கள் வருகின்றன. மிகைப்படுத்தப்பட்ட உணர்ச்சி. அழுகுப்படுத்தப்பட இயற்கை, செயற்கையான அழுக்குக் கதைபோன்ற தமிழ்ச் சினிமா பார்வையாளனின் பரப்புக்குள் தான் இப்படங்கள் நுழைகின்றன. வீரம், சாகசம், மரணம் அதைத் தொடர்ந்து துயரம் தொனிக்கும் பாடல், உத்வேகமூட்டுதல் எனும் தமிழ்சினிமா பார்வையாளனின் வட்டத்துக்குள்தான் இப்படங்கள் நுழைகிறது.

ஆனால், ஏற்கெனவே நிலவிய படங்களின் வெளிப்படும் தளமும், நிற்கும் இடமும் நோக்கமும் வேறானவை. இங்கு குறிப்பிடும் ஆறு படங்களின் கதைக்களமும் நோக்கமும் வேறானவை. வியாபார நோக்கங்களோ பொழுது போக்கு அம்சங்களோ இப்படங்களுக்குப் பிரச்சினையில்லை. இப்படங்கள் நடந்து கொண்டிருக்கும் போராட்டத்தில் ஒரு ஆன்மீக உந்துதலுக்கான சாதனமாகப் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டிருக்கிறது. அந்த அளவில் இப்படங்கள் பிரக்ஞைபூர்வமான அரசியல் படங்கள். பிரச்சாரத்திற்கும் கலை அனுபவத்திற்கும் இடையில் வெளிப்படும் படங்கள். அதுவே ஈழ சினிமாவின் வரலாற்றில் இப்படங்களின் தனித்துவம்.

சின்னவிழிகள் படம் வெளிநாட்டிலிருந்து ஈழத்துக்குப் போகும் ஒரு இளைஞனின் அனுபவங்களைச் சொல்வது. அவனது கடந்த காலத்தோடு சம்பந்தப்பட்ட எல்லா மனிதர்களுமே ஏதேனும் ஒரு வகையில் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அண்டை வீட்டுக்காரர்கள் சச்சரவின்றி ஒன்றுபட்டு போராட்ட வேலைகளில் ஈடுபடுகிறார்கள். நேசித்தவள் போரில் மரணம் எய்திவிட்டாள். தனது தாயும் தங்கையும் மரித்தவர்களின் தியாகத்திற்கு தீபமேற்றச் செல்கின்றனர். தனது நண்பர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வீரமரண மெய்தியிருக்கின்றனர். முழுதேசமுமே போராட்டமே அன்றாட வாழ்க்கையாக ஜீவித்துக் கொண்டிருக்கிறது. அவனது அனுபவங்கள், அவனது மக்களின் துயர், இராணுவ ஒடுக்குமுறை, தங்கையின் வேண்டுகோள் போன்றவை அவனை நாட்டிலேயே தங்கிப் போராட்டத்தில் ஈடுபடும் முடிவைக் கொண்டு வருகிறது.

வீரசீலம் படம் மூன்று போராளிகள் பற்றியது சைக்கிளில் சாலையில் வந்துகொண்டிருக்கும்போது இராணுவம் வந்து விடுகிறது. பக்கத்தில் புதரில் விழுந்து காடு கழனிக்குள் ஓடுகிறார்கள். இராணுவம் துரத்துகிறது. துப்பாக்கிச்சமர். நெஞ்சில் குண்டடிபட்டு சாகும் நிலையில் ஒருவன். அவனைக் காப்பாற்றும் எத்தனத்தில் தாங்கியபடி நடத்திச் செல்ல முயலும் தோழன். கொஞ்சம் முன்னால் துப்பாக்கிச் சமரில் குண்டடிப்பட்டுச் சாயும் மற்ற போராளி. சாகும் வேதனையிலிருக்கும் போராளி தன் சக தோழனை தன் நெற்றிப்பொட்டில் சுட்டுக் கொன்றுவிட்டு துப்பாக்கியை எடுத்துக் கொண்டு தப்பிச்செல் என்கிறான். அவர்களுக்கு ஆயுதம் முக்கியம். நண்பனுக்கு தாங்கள் விளையாடித் திரிந்த அன்பு செய்த நினைவுகள் வந்து போகிறது அவனால் சுட முடியாது. ஆனால், சுடத்தான் வேண்டும். மிகுந்த வேதனையின் பின் முகத்தைத் திருப்பிக் கொண்டு தோழனின் நெற்றிப் பொட்டில் துப்பாக்கி முனையை வைத்து குறியை இழுக்கிறான்.

தாயகக் கனவு தற்கொலைப் போராளி பற்றியது. அவனது பயிற்சி தொடங்குகிறது. இராணுவ முகாம் ஒன்றைத் தகர்க்கும் நாள் வருகிறது. சாவு மகத்துவம் வாய்ந்தது. இந்த சாவு உன்னதப்படுவது கூட இழந்து விட்ட ஜீவனுள்ள வாழ்க்கையினால் தான். வாழ்வு இருவேறு சம்பவங்களில் உன்னதப்படுகிறது. தனது குடும்பத்தோடு கொண்டாடிய அவனது பிறந்த நாள் நினைவுகள், வீட்டுத்தோட்டம், பூச்செடிகள், தங்கைகள், தாய், தந்தையர், அவனுக்கு மௌத்ஆர்கன் உயிர். ஒரு முறை தன்னிடமிருந்து அதைக் கேட்ட தோழனைக் கோபத்தில் அடித்து விடுகிறான். தாக்குதலுக்கான நாள் குறிப்பிட்ட பின்னால் தன்னிடமிருக்கும் எல்லா உடமைகளையும் தன் தோழர்களுக்குப் பகிர்ந்து தருகிறான். சட்டைகள், காற்சட்டைகள், மௌத் ஆர்கனை கடைசியில் அதை விரும்பிய நண்பனுக்கே தருகிறான். மரணத்தின் பின் இருக்கும் ஜீவனுள்ள இழந்துபட்ட வாழ்வு படத்தில் உறைந்து விடுகிறது.

தமிழோசை/ இது எங்கள் தேசம் இரண்டு படங்களும் இந்திய ராணுவம் ஈழத்தில் நிகழ்த்திய கோரத்தாண்டவத்தை விவரிக்கிறது. அன்னை பூபதியின் மரணத்தின் பின் ஈழத்து மக்களுக்கும், இந்திய இராணுவத்துக்கும் ஏற்படும் மோதலையும், இது எங்கள் தேசம் என ஈழத்துக் குடிமகன் எதிர்த்துச் சினப்பதையும் பற்றிப் பேசும் படம் இது எங்கள் தேசம்.

தமிழோசை இறந்துவிட்ட அன்னை பூபதிக்கு நினைவு அஞ்சலி செய்வதற்காக திட்டமிடும் மக்களை வேட்டையாடி அழிக்க முடியாது வெறிகொண்ட இராணுவத்தின் சூறையாடல் பற்றியது. நல்லதொரு கிராமத்திலும் நினைவுகளைப் போற்ற வேண்டும் எனும் எதிர்புணர்வு ஓங்கி வளர்கிறது. முதியவர்கள், பெண்கள், இளம் பெண்கள், சிறுமியர், பெண் குழந்தைகள் என அனைவருமே தம்தம் வழியில் முனைகிறார்கள். நினைவு தனித்து நின்று 12 மணிக்கு கோயில் மணியடிக்க எல்லோரும் மணி ஒலித்து அஞ்சலி செய்வது ஏற்பாடு. இராணுவம் பெண்களை பலாத்காரம் செய்கிறது. வாவிகளில் பிணங்கள் மிதக்கிறது. ஊரடங்கு பிறப்பிக்கப்படுகிறது. இரவு வருகிறது. இராணுவம் ரோந்து வருகிறது. 12 மணி கோயில் மணி இடைவிடாது ஒலிக்கிறது. இராணுவம் விரைகிறது. கோயில் மணியைப் பிடித்தபடி தியானமே போன்று ஓங்கி அடித்தபடி நிற்கிறாள் சிறுமி. இராணுவ அதிகாரி சிறுமியை சுடப்போகிறான். தொடர்ந்து பல்வேறு திசைகளிலிருந்து மணியோசைகள், முழக்கங்கள். சுடுவதை நிறுத்தி இராணுவ வாகனங்கள் விரைகிறது. வெட்ட வெளியில் விளக்குகள் ஏந்தியபடி ம்க்கள் இராணுவ அதிகாரி சுட முயன்ற இராணுவத்தினரைத் தடுத்து நிறுத்திவிட்டு, அம்மக்களின் மன உறுதியைப் பிரமித்தபடி நிற்கிறான்.

இன்னும் ஒரே படம் காற்றுவெளி. இந்த ஐந்து படங்களிலிருந்தும் வித்தியாசமான படம். நான் மேலே குறிப்பிட்ட ஐந்து படங்களிலும் மிகை உணர்ச்சியிருந்தது. பிளாஷ்பேக் காட்சிகள் உணர்ச்சிபூர்வமாக செய்வதற்காக விஸ்தாரமாக செய்யப்பட்டிருந்தது. இறப்பு போராட்ட உணர்வுக்கு ஆதாரமான பாடல்கள் இருந்தது. வீரசீலம் எனும் படத்தில் ஃபிளாஷ்பேக் காட்சிகள், காட்சியின் உணர்ச்சித் தீவிரத்திற்கு பொருந்து வரவில்லை. சாகும் நிலையில் தோழன் சுட்டுக்கொல் என்கிறான். நெற்றிப்பொட்டில் துப்பாக்கி. கொஞ்சம் முன்னால் எதிரியோடு சமரில் இன்னொரு தோழன். இச்சூழல் ஃபிளாஷ்பேக் காட்சிகள் நீண்டநேரம் வருகிறது. உண்மையில் இம்மாதிரி வேளைகளில் நினைவுகள் எடுத்துக் கொள்ளும் நீண்ட நேரம். சித்திரிப்புக்குப் பொருந்தி வரவில்லை. 45-50 நிமிடம் குறுந்திரைப்படத்தில் 10 நிமிடங்கள் வரை பாடல்கள் வருகிறது. உணர்ச்சிக் கொந்தளிப்பை வெளியிடும் ஒரே சாதனமாக பாட்டு கையாளப்பட்டிருக்கின்றது. பிரச்சாரம் மட்டுமே தான் நோக்கமாக இருந்திருக்குமானால் அதை இப்படங்கள் சாதித்திருக்கிறது. சில படங்களில் ஒளியின் அடர்த்தி திடீர் திடீ* என்று மாறுகிறது. சில காட்சிகள் Dissolve செய்யப்படும்போது முதல் காட்சியின் மீது இரண்டாம் காட்சி நீண்ட நேரம் நின்றுகொண்டிருக்கிறது. இந்திய இராணுவத்தினருக்கான ஒப்பனை, ஆட்கள் தேர்வு பொருந்தி வரவில்லையென்றே தோன்றுகின்றது. 16 வயதான சிறுவர்கள் சிலவேளை இந்திய இராணுவத்தின் Brutalityக்குப் பொருத்தி வரவில்லை. நல்ல கதைமைப்பும் அரசியல் பிரக்ஞையும் 'கொண்ட இப்படங்களில் தென்னிந்திய சினிமா நடிகர்களின் பாதிப்பு இருந்ததை சினிமா நடிகர்களின் பாதிப்பு இருந்ததை சொல்லத்தான் வேண்டும். குறிப்பாக தாயகக் கனவு படத்தில் வரும் தகப்பன், தமிழோசையில் வரும் எல்லா ஆண் பெண்களும், தமிழோசையில் விறகு வெட்டியபடி பேசும் சிறுமிகளின் உரையாடலில் இயல்பான தொனி இல்லை. பேச்சின் இடையில் காலம் பற்றிய பிரச்சினை கவனிக்கப்படவில்லை.

குறைந்த பட்ச அடிப்படைத் தேவைகளே கிடைக்கின்ற சூழலில் தொழிநுட்ப ரீதியிலான பிரச்சினைகளைப் புரிந்துகொண்டால் கூட, மெலோடிராமா, நடிப்பு, அடிக்கடி வரும் பாடல்கள் போன்றவை தேர்ந்துகொள்ளும் கதையின் தீவிரத்தன்மையைக் கருத்தில் கொண்டு உக்கிரத்தை தணித்துவிட நேர்கிறது. தனித்த பாடல்கள் எனும் அளவில் புதுவை இரத்தினதுரையின் பாடல்களும், அனைத்துப் படங்களின் அணிநடைப் பாடல்களும் எழுச்சியூட்டுபவைதான்.

இனி, என்னை மிகவும் பாதித்த படம் காற்றுவெளி. கதை சொல்லப்பட்ட விதம், கேமராவின் கோணம், கதையில் நடமாடிய பாத்திரங்கள் சொன்ன விதம் எல்லாமுமே புதிய சினிமா மொழிக்கான அம்சங்களைக் கொண்டிருக்கிறது.

கதை இதுதான். ஒரு கிராமம். மூன்று வீடுகள். நடு வீட்டில் மனைவியை இழந்த முதிய மனிதர். மற்றொரு வீட்டில் தம்பதியர், குழந்தைகள். ஒரு இளம் பெண். மூன்றாம் வீட்டிற்கு வந்து சேர்கிறார்கள் போராளிகள். குறும்பும் விளையாட்டும் சந்தோஷங்களும் நிறைந்த சிறுவர்கள். அவர்களின் மேற்பார்வையாளராக அவர்களின் தேவைகளை வந்து கவனித்துச் செல்லும் போராளி இளைஞர். அவர்கள் வெகு சீக்கிரமே நடைபெற இருக்கும் ஒரு தாக்குதலுக்குப் போக வேண்டும்.

முதியவருக்கு ஆரம்பத்திலிருந்தே அவர்கள் தொந்தரவாகத் தோன்றுகிறார்கள். பொறுப்பில்லாத விளையாட்டுப்பிள்ளைகள் என்பது தான் அவர் எண்ணம். ஒரு நாள் அந்த இளம் சிறார்களுக்குப் பொறுப்பான ஒரு இளைஞன் தளபாடத்தில் எதையோ சம்மட்டி கொண்டு கூர்மை செய்து கொண்டிருக்கிறான். சத்தம் கிழவருக்கு சகிக்க முடியவில்லை. கிழவர் சொல்ல பையன் மறுபடி சத்தமாக அடிக்கிறான். மேற்பார்வையாளரான போராளி வரும்போது அவரிடம் முதியவர் தன் குறையைச் சொல்கிறார். தண்டனை கொடுக்கப்படுகிறது. 100 தோப்புக்கரணம்.

மறுபடி ஒரு நாள் முதியவர் பால் கறந்து போத்தல்களில் விட்டு வைத்துவிட்டு கடைத்தெருவுக்குப் போகிறார். பையன்கள் போத்தலில் இருந்த பாலை எடுத்துவிட்டு தண்ணீரைக் கலந்து வைத்து விடுகிறார்கள் மூன்று சின்னப் பையன்கள். மறுபடி குற்றச்சாட்டு சொல்ல இரவு முழுக்க மரத்தின் மீது தூங்காதிருக்கம்படி தண்டனை கொடுத்து விட்டுப் போகிறார். பிற்பாடு தண்ணீரில்லாமல் பாட்டுப்பாடியபடி இருக்கிறார்கள். முதியவருக்கு கனிவு வந்து விட்டது பாவம் பையன்கள் அடுத்த நாள் அவர் சொல்ல தண்டனை முடிந்து பையன்கள் கீழே இறங்குகிறார்கள்.

முதியவருக்கும் அந்தப் பையன்களுக்கும் இடையில் புரிதலும் அன்பும் வளர்கிறது


ஒரு நாள் கோழியொன்று காணாமல் போய்விட்டது. பிடித்து வரும் பொறுப்பு சிறார்களுக்கு. பிடித்து வரப்படும் கோழி இறந்து விடும் நிலையிலிருக்க, அதைச் சமைத்து தருகிறார் முதியவர். இதோ வந்து விடுகிறேன் பார்த்துக் கொள்ளுங்கள் எனச் சொல்லி விட்டு வீட்டுக்குப் போய்த்திரும்புகிறார் முதியவர். வானலிச்சட்டி காலி துடைத்துத் துடைத்து சாப்பிட்டுவிட்டுப் போய்விட்டார்கள் பையன்கள். முதியவர் சிரித்துக் கொள்கிறார்.

குழந்தைகள் பையன்களோடு உறவை வளர்த்துக் கொண்டு விட்டார்கள். குழந்தைகள் அவர்களோடு பாட்டுப்பாடி நடனமாடுகின்றனர். தாக்குதலுக்கான நாள் வருகிறது. இரண்டு வீட்டுக்காரர்களும் சமைத்துக் கொண்டு வந்து வாழையிலைபோட்டு சிறுவர்களுக்கு பரிமாறுகிறார்கள். ஜீப் வந்து விட்டது. சிறுவர்கள் விடைபெறுகிறார்கள்.

துப்பாக்கிச் சமர் நடக்கிறது. சம்மட்டியால் அடித்துப் பிரச்சினைப்படுத்திய பையன் களத்தில் இறந்து போகிறான். அவனது உடல் அஞ்சலிக்காக வைக்கப்படுகிறது. குழந்தைகள் அண்டை வீட்டார் என அனைவரும் சூழ்ந்து நிற்க முதியவர் தன் கைப்பையிலிருந்து தன் தோட்டத்தில் பறித்த சாமந்திப்பூக்களை உடல்மீது வைத்து மௌனித்து நிற்கிறார்.

வீடு திரும்புகிறார். பையன்கள் இருந்த வீட்டு வாசற்படியில் அமர்கிறார். வெறிச்சோடிய வீடு. எப்போதும் கலகலப்பாக இருந்து வெறித்துக்கிடக்கும் வீடு மங்கிய வெளிச்சம். நாற்காலிகள் இல்லாத முற்றவெளி. சிறுவர்களோடுடனான நினைவு வந்து போகிறது. துக்கம் அவரைச் சூழ்ந்து கொள்ள சோர்ந்து உட்கார்கிறார்.

→19



## கைக்கெட்டிய கனகாலத்தய புத்தகம்!

இலங்கைப் பத்திரிகை வரலாற்றில் ஒரு மாற்றுப் பத்திரிகையாக தன்னை அடையாளப்படுத்திய, ஸ்திரப்படுத்திய 'ராவய' வின் பங்கு முக்கியமானது. 1971ல் இலங்கையில் இடம்பெற்ற ஏப்ரல் கிளர்ச்சியின்' முக்கிய பங்கேற்பாளரும், சந்தேக நபருமான 'பொடி அதுலே' என அறியப்பட்டவருமான விக்டர் ஐவனை ஆசிரியராகக் கொண்டு 1986ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மாத சஞ்சிகையாக ராவய வெளிவந்தது. 1987 ஜூலை வரை சஞ்சிகை வடிவில் 12 இதழ்கள் வெளிவந்தன. அதன் பின், இன்னொரு பரிணாமமாக 'டப்லொயிட்' வடிவில் வாரப் பத்திரிகையாக வந்தது. இக்காலப்பிரிவில் சிங்களப் பத்திரிகையுலகில் திருப்பங்கள் ஏற்படுத்திய இன்னொரு பத்திரிகையாக யுக்தியவும் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. எனினும், வாசகர் மத்தியில் 'ராவய'வுக்கு இருந்த அங்கீகாரம் இன்றுவரை எந்த சுயாதீனப் பத்திரிகைகளுக்கும் கிடைக்கவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

ராவயவின் வெளிப்படையானதும், விமர்சனமானதுமான எழுத்துக்கள் 1994ன் ஆட்சி மாற்றத்திற்கு பெரும் பங்களிப்பு வழங்கியமையும் மறுக்கமுடியாதது. ஐ.தே.க. கால வன்முறை ஊழல், ஆட்சியை பகிரங்கமாகக் கண்டித்து மக்கள் மனங்களில் மாற்றத்தைத்தேடும் பான்மையை வளர்த்தெடுத்தது. இன்று இதன் வளர்ச்சி வடிவம் வாரப் பத்திரிகையாக பெரிய அளவில் மாறியுள்ளது. இப்பத்திரிகையின் இன்னொரு ஈர்ப்பு விடயமாக இருந்தது ஜனரஞ்சன என்ற சட்டத்துறை மாணவரின் கார்ட்டூன்களாகும் இவர் சிறிது காலம் சரிநிகருக்கும் கார்ட்டூன்கள் வரைந்ததும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை இனப்பிரச்சினை வரலாற்றில் 'ராவய'வின் நடுநிலை போற்றுதற்குரியது எனப்படுவதுண்டு. சஞ்சிகை வடிவில் வந்த காலத்திலேயே தமிழர் பிரச்சினையில் அதிக கரிசனை காட்டியது. சமாதானத்தின் தேவையை அதிகம் வலியுறுத்தியது.

இங்கு ராவய பற்றி எழுத நேர்ந்தமைக்கு சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் வெளிவந்த ஒரு நூலே காரணம். மோகன சுந்தர பாண்டியன் என்பவர் 1988ல் 'இலங்கை இனப்பிரச்சினையில் ஒரு சிங்கள இதழ்' என்ற தலைப்பில் சஞ்சிகை வடிவிலமைந்த 'ராவய' க்கள் பற்றிய ஆய்வொன்றைச் செய்திருக்கிறார். இதனை 'அன்னம்' வெளியிட்டுள்ளது. துரதிர்ஷ்டம் என்னவென்றால் நீண்ட காலப் புத்தகப் பரிச்சயம் இருப்பினும் கூட 1999ம் ஆண்டே அந்நூல் என் கண்ணுக்கும், கைக்கும் கிட்டியது. சுமார் பத்து வருட தலைமுறை இடைவெளி...!

பல்வேறு தலைப்புகளில் இனப்பிரச்சினை தொடர்பாக வெளிவந்த பல்வேறு கருத்துக்கள் தொகுத்தாய்வு செய்யப்பட்டிருக்கின்றன. அத்துடன் இனஉறவு தொடர்பான சுமார் 18 கவிதைகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு பின்னிணைப்பாக சேர்க்கப்பட்டிருக்கின்றன. தற்போது கொழும்பு பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி மூல தொடர்புத்துறை டிப்ளோமா பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இது போன்ற நூல்கள் இத்துறை மாணவர்களின் ஆய்வுகளுக்கு முன்னுதாரணமாகவும் இருக்கும்.

குறித்த நூலிலிருந்து ஒரு கவிதை:

பத்து ஆண்டுகள் உயிர்த்தோழமை
உணர்விலொன்றிப் பொழுது போக்கினோம்.
சிறுவயதில் ஒரு பாடசாலை
நிழலில் கல்வி பயின்றோம்.
விடுமுறைக் காலம் வந்தபோதும்
வீடுகளில் இருந்து விபரங்களுக்கு
கடிதங்கள் எழுதினோம் நாம்
வயது வந்ததும் இரு வழிகளில்
பயணம் செய்ய வேண்டியதாயிற்று.

வைத்தியத்துறை பயின்ற அவர்
வடக்கே சேவை செய்தார்
திடிரென கடந்தவாரம்
" 'கல்கிசையில்" கண்டோம்
கதைத்திடும் ஆவலில் நாங்கள்
நின்றாலும் நொடிப் பொழுதில்
உள்ளிருந்து பீறிட்டு எழும்
ஐயம், அச்சம் நெருப்புத் தணலானது
நெஞ்சிற் கனலானது.

துப்பாக்கி வெடியோசை என
எமது மௌனம் குழறியது
சில வார்த்தைகள் வாயினால் பேசி
அகன்றோம் விரைந்தே நாம்!
அவர் எனக்குச் செய்த குற்றம்
எதுவும் இல்லை
நான் அவருக்குச்செய்த குற்றம்
எதுவும் இல்லை.

இன்னும் பத்துப் பேர் சூடுபட்டு
செத்துப் போனதைச் செய்யாதீர்
சத்தம் போட்டுச் சொல்கின்றன எமக்கு
தடித்துப்போன பெரிய எழுத்துக்களால்...

**கலாநிதி: விமல் திசாநாயக்க**
**ராவய 1986 ஓகஸ்ட்.**

நன்றி - நூலகத்திட்டம்






பிட்டும் தேங்காய்ப்பூவும்
(கவிதைகள்)
மூதூர் முகைதீன்
வெளியீடு:
மூதூர் கலை இலக்கிய ஒன்றியம்.
விலை:50/-

70 களில் இருந்தான கவிதைகளின் தொகுப்பாக சமாதானத்திற்கான யாசிப்போடு வந்திருக்கிறது இப்புத்தகம். சுதந்திர இலக்கிய விழாவின் பரிசளிப்புத் தேர்வுகள் அவநம்பிக்கையைத் தந்த 1996ல் முதலாம் இடம்பெற்ற இவரது 'பிட்டும் தேங்காய்ப்பூவும்' கவிதையை நூலின் தலைப்பாகவும் இருக்கிறது. விபவி கவிதைகளில் சமாதானத்தைத் தேடியது. கவிஞர் உண்மையிலேயே சமாதானத்தையே தேடுகிறார்.

**சத்யா.**



நினைந்தழுதல்
சிறுகதைக்ள்
ஓட்டமாவடி அறபாத்
வெளியீடு:
இஸ்லாமிய புத்தக நிலையம்
ப.நோ.கூ.ச. வீதி,
மாவடிச்சேனை
வாழைச்சேனை.
விலை:80/-

இளந்தலைமுறை ஈழத்து எழுத்தாளர்களில் கவனம்பெற்ற ஒருவராக பன்முகப் பார்வைகளுடன் தன்னைச் சூழவுள்ள அனைத்து நிகழ்வுகளையும் கதையாக்கும் திறன்பெற்றவராக உள்ள 'அறபாத்'தின் 14 கதைகளின் தொகுப்பு. கதையாசிரின் மொழியும், சமயங்களைக் கோர்க்கும் விதமும் ஈர்ப்பைத்தருகிறது. கிழக்குக் கிராமத்துக் கதைப்பாணியும் இவரின் கதைகளுக்கு அழகு சேர்க்கின்றன. மானுட உறவுகள் கதைகளின் அடிநாதமாய் எங்கும் ஒலிக்கிறது.

***சத்யா.***



குழந்தைகளிடம் பொய்களைக்
கூறாதீர்கள்
(கவிதைகள்)
செழியன்
வெளியீடு:
காலம்
ரொரொன்றோ
கனடா.

புலம்பெயர்ந்து வாழும் ஈழத்துப் படைப்பாளியான செழியனின் அழகானதும் சிறியதானதுமான நான்காவது கவிதைத்தொகுதி இது. ஏழு கவிதைகள் கொண்ட 20 பக்க நூல் 'கவிதைகளை உதிரிகளாக சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் தொலைத்துவிடாமல் தொகுதிகளாக வெளிக்கொணர்வதிலட் வாசகர்களின் பயன்பாடு கிகுதி' என இத்தொகுப்பு வெளியீட்டாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

கவிதைகளைவிட செழியனின் குறிப்பாய்ச் சொல்லப்பட்ட வரிகள் என்னவோ கவித்துவமாகவும், அழகாகவும், ஆழமாகவும் இருக்கிறது. சொல்லப்போனால் அதுதான் கவிதையாக இருப்பதாய் எனக்கு படுகிறது.

***ஜிப்ரான்***



# ருஷ்டியும் மெயிலரும் ஒரேவகை எழுத்தாளர்களா..?

**சல்மான்** ருஷ்டி என்ற இந்திய எழுத்தாளர் 'சாத்தானின் வாசகங்கள்' என்ற நாவலை எழுதியதன் மூலம் முஸ்லிம் மக்களின் வேதமான திருக்குரானை நிந்தித்தார்: இஸ்லாமிய மனதைப் புண்படுத்தினார். இதனால் அவருக்கு ஈரானிய அரசு மரண தண்டனையையும் வழங்கிற்று. இத்தண்டனை சல்மான் ருஷ்டியை தலைமறைவாக இங்கிலாந்தில் வாழ வைத்தது!

இத்தகைய சல்மான் ருஷ்டியின் போக்குக்கு நிகரான இன்னொரு போக்கு அமெரிக்காவில் 1997ன் இறுதியில் நிகழ்ந்தது. இதன் காரணகர்த்தாவாக இருப்பவர் மார்க்சீய முற்சாய்வுடைய பிரபல அமெரிக்க எழுத்தாளரான நோர்மன் மெயிலராவார் (Norman Mailar). இவர் 1997ல் வெளியிட்ட நாவலான The Gospel According to the Son (சுவிசேஷம்: மைந்தனின் நோக்கில்) கிறிஸ்தவர்களின் மனதைப் புண்படுத்துவதாக அமைந்தது. ஆனால், ருஷ்டிக்கும் மெயிலருக்கும் இடையே உள்ள முக்கிய வேறுபாடு என்னவெனில் முன்னவர் இஸ்லாமியரின் நம்பிக்கைகளை கேள்விக்குள்ளாக்கவும் கண்டிக்கவுமே சாத்தானின் வாசகங்களை எழுதினார். ஆனால், மெயிலரோ தன்னை ஒரு புதுவித ஆன்மீகவாதியாக எடுத்துக் கொண்டு ஒரு நாள் இரவு தான் - அதாவது 1962ல் - வெறுமையாகக் கிடந்த கோப்பி கடைக்குள் சென்றமர்ந்தபோது, தன்னோடு இறைவன் கதைத்ததாகக் கூறிக்கொண்டு இவர் தன் நாவலுக்கு அத்திவாரமிடுகிறார்.

இறைவன் ஏற்கெனவே ஆபிரகாம், மோசஸ் என்ப்வர்களோடு கதைத்துள்ளார். எரிகிற பற்றைக்குள் இருந்தும், சுழல் காற்றுக்குள் இருந்தும் அவர் கதைத்துள்ளார். ஆனால், மெயிலரோடு அவர் கதைத்த விதந்தான் வேடிக்கையான்து. கோப்பிக்கடையில் பொரித்த முட்டைக்குள் இருந்தும், சிக்கன் சலாட்டுக்குள் இருந்தும் சீஸ் பேர்கர்சுக் (Cheese Burgers) குள்ளிருந்தும் இறைவன் கதைத்துள்ளார்!

இவ்வாறு இவரது அனுபவம் விமர்சகர்களின் கிண்டலுக்குள்ளாவது ஒரு புறமிருக்க, இவர் நாவல் பிரச்சினை ஏற்படுத்தும் விஷயம் இதுதான். கிறிஸ்தவர்களின் வேதநூலான புதிய ஏற்பாடு, இயேசுவின் வாழ்க்கையை மார்க், லூக்ஸ், மத்தியூ, ஜோன் போன்றவர்களின் பார்வையில் தருகிறது. இங்கே மெயிலரின் நாவல் இயேசுவின் வாழ்க்கையை மெயிலரின் பார்வையில் தருவதாக அண்மையில் விபரிக்கப்படுகிறது. 'சுவிசேஷம்: மைந்தனின் நோக்கில்'! இந்த 'மைந்தன்' மெயிலர்தான்! இயேசுவைப்போலவே இந்த 74 வயது நிரம்பிய மெயிலர், எல்லாம் வல்ல இறைவனின் நேரடிவாரிசாகவே காட்டப்படுகிறார் தன் நாவலில்! இந்த விவரணையில் அவரது மார்க்சீய முற்சாய்வுகள், கோளமய முதலாளித்துவம், அரசியல் விவகாரங்கள் எல்லாம் இறைவனோடு உரையாடலுக்குட்படுத்தப்படுகின்றன! ஏற்கெனவே மத்தியூ, லூக், மார்க், ஜோன் போன்றவர்களின் பார்வையில் தரப்பட்ட இயேசுவின் வரலாற்றைத் திருத்துவதுபோல் மேற்குலக நாகரிகத்துடன் அடிகட்டுமானமாக இது தரப்படுகிறதீ!

இதைப் படிக்கும் கிறிஸ்தவர்களின் மன நிலை எப்படி இருக்கும்? பற்றிக் கொண்டுதான் வரும்!

மெயிலர் இன்றுள்ள அமெரிக்க எழுத்தாளர்களில் மிக முக்கியமானவர். ஹென்றி ஜேம்ஸ், ஸ்ரீன்வெக், ஃபோக்னர், ஸ்கொட் ஃபிறஸ்ரோல்ட், டொஸ்பஸொஸ் ஹெமிங்வே, சிங்கிலா யா லுயிஸ், ஜக்கெருவாக் கோர்விடால் ஜேம்ஸ் போல்ட்வின் என்று வரும் அமெரிக்க புனைகதை மேதைகளில் மெயிலர் தனக்கென ஒரு தனியிடத்தை வகிப்பவர். இவர் கட்டுரை எழுதினாலும் இவரது எழுத்தாற்றல் தனித்து இனங்காணக் கூடியது. எத்தனையோ விஷயங்களைச் சிறுபத்திக்குள் அடக்கி, பற்பல அர்த்தப்பாடுகள் கோடிகாட்ட எழுதும் இவரது எழுத்தாற்றல் பலரால் பாராட்டப்பட்டது. இவரது The Presidential Papers கட்டுரைகள் இதற்கு உதாரணம்.

இவர் இரண்டாம் உலக யுத்தத்தில் பங்கெடுத்துவிட்டு வந்த கையோடு 1948ல் வெளியிட்ட The Naked and the Dead என்ற நர்வல்மூலம் எடுத்த எடுப்பிலேயே புகழின் உச்சத்துக்கேறிய இவர், எவ்வாறு பலரகப்பிரச்சினைகளை மையமாகக் கொண்டு கதைகள் எழுதினாரோ அவ்வாறே பற்பல பிரச்சினைகளின் மையமாகவும் இருந்தும் வருகிறார். இவ்விதத்தில் இவர் ஏர்னஸ்ட் ஹெமிங்வே போன்றவர். ஹெமிங்வே வேட்டையாடுதல், ஆழ்கடல் மீன்பிடித்தல், குத்துச்சண்டையில் ஈடுபடுதல், மாட்டுச் சண்டையில் பங்குபற்றுதல், யுத்தத்தில் பங்குபற்றுதல், விமானமோட்டுதல், விபத்துக்குள்ளாகல், ஈற்றில் வாழ்க்கையில் சாவையும் பரீட்சித்துப் பார்க்க வேண்டுமென்ற நிலையில் தன்னைத்தானே சுட்டுக்கொல்லுதல் என்று அவர் ஒரு போக்கு. மெயிலரின் போக்கு பிரஞ்சு எழுத்தாளர் ஜோன்ஜெனேயினதும் ஹெமிங்வேயினதும் கலப்பு என்று சொல்ல .

மெயிலர் நடிகர்களோடு, பங்குச் சந்தை புறோக்கர்களோடு மனைவியரோடு சண்டைபோட்டார். இவர் தனது இரண்டாவது மனைவி அடெலி என்பவருக்கு நெஞ்சில் கத்தியால் குத்தினார். (அவர் இதயம் காயப்படாததால் தப்பினார்) இவர் வளர்த்த நாயை மாலுமிகள் சிலர் இவரது ஓரினச்சேர்கைக்குரிய கூட்டாளி என்று கேலிசெய்யவே அவர்களோடு பகிரங்கமாகச் சண்டைப் போட்டுத்தாக்கினார். ஜோர்ஜ் பிளிம்ரன் என்ற பத்திரிகையை சுருட்டி மூஞ்சில் அறைந்தார். இவர் அமெரிக்க பாதுகாப்பு ஸ்தாபனமான பென்ரகனுக்கு எதிராக ஊர்வலம் சென்றார். சி.ஐ.ஏயை கண்காணிப்பதற்கு ஓர் அமைப்பொன்றை நிறுவினார். நியூயோர்க் நகரமேயர் பதவிக்கு போட்டியிட்டார். பல வித புதுமையான சினிமாப் படங்களைத் தயாரித்தார். பெண்ணிலைவாதிகளுக்கு துாண்டுதலாய் இருந்தார். கொலைக் காரர்களுக்கு தலைமைத்தாங்கினார். இவர் ஆறு தடவை விவாகம் செய்து எட்டு பிள்ளைகளின் தகப்பனானார். இவர் வேண்டுமென்றே மூன்றாம் தரக் கவிதைகள் வெளியிட்டார். முப்பது புத்தகங்கள் வரை எழுதியுள்ளார். இவர் யூத இனக்கலப்புடையவர். அதனால்தான் இவர் இறுதியாக எழுதிய 'சுவிசேஷம் - மைந்தனின் பார்வையில்' என்ற புத்தகத்தைப் பற்றி விமர்சிக்கையில், ஏற்கெனவே மத்தேயூ, லூக், மார்க், ஜோன் என்ற நால்வரால் எழுதப்பட்ட சுவிசேஷத்தோடு இப்போது மெயிலர் என்னும் நல்ல யூத மைந்தனால் எழுதப்பட்டது ஐந்தாவதாக அமைகிறது. ஆனால், இந்த யூத மைந்தனோ தன் வாழ்க்கை முழுதும் கெட்டதாக அமையவே மிகுந்த முயற்சி எடுத்துக்கொண்டவர் என்றனர்!

நோர்மன் மெயிலர் இந்த நாவலை ஏன் எழுதினார்?

அனேகமான எல்லா பெரும் எழுத்தாளர்களிடத்தும் காணப்படும் ஒரு Obsession தாம் ஒரு பெரும் உன்னதமான நாவல் ஒன்றை எழுத இருப்பதாகக் கூறுவதான். அவ்வாறே மெயிலரும் தான் எழுத இருக்கும் பெரும் நாவல் பற்றிக் கூறுகையில், 'இன்றைய கால மனித சிந்தனையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தும்' ஒன்றாக அமையப்போவதாகச் சொன்னார். அத்தகைய எண்ணத்தோடு எழுதப்பட்ட இந்நாவலில் வரும் இயேசு எவ்வாறுள்ளார்?

"கலீலி கடலுக்கப்பால் நடந்து செல்லும் இயேசு பைபிளில் வரும் இயேசு போல் இல்லை. மாறாக, மெயிலர் போலவே ஹிப்ஷ்ரர்களின் (Hipster) தீர்க்கதரிசியாக, முதலாம் நூற்றாண்டு முள்முடிதரித்த இருப்புவாதியாகத் தெரிகிறார். மேலும் இவர் தொழிலாள வர்க்கத்தின் தலைவராக, மார்க்ஸிஸவாதியின் உண்மையான வார்ப்பாகத் தெரிகிறார்.." என்று இந்நூல் பற்றிக் கூறும் விமர்சகர் வில்பிளித் (Will Blythe) பின்வருமாறு முடிக்கிறார். "ஜீஸஸ் கிறைஸ்ரைப் பற்றி எழுதப்போன நேர்மன் மெயிலர், மென்று விழுங்க முடியாத ஒன்றை வாய்க்குள் திணித்துக் கொண்டவராகத் தெரிகிறார்.


*உமாபதி*



எம்.சி. ஒரு சமூக விடுதலைப்
போராளி.
கட்டுரைத் தொகுதி
வெளியீடு:
எஸ்.சந்திரபோஸ்
விசாலா பதிப்பகம்
20 Ward Avenue,
Suite 812
Toronto, ontano, Canada.
M6h4H3

பத்து வருடங்களுக்கு முன்பு காலமான சாதிய எதிர்ப்போராளி எம்.சி. சுப்பிரமணியம் நினைவாகப் பயன் மிக்க கட்டுரைகளின் தொகுதி ஒன்றை எம்.சியின் மகன் சந்திரபோஸ் வெளியிட்டுள்ளார்.

கலாநிதி சபா ஜெயசராசா, க.இராசையா, (போராளி) பேராசிரியர் அ. சண்முகதாஸ், என்.கே. ரகுநாதன் (எழுத்தாளர்) ஈவே.செல்வரத்தினம் (சிறுபான்மை தமிழர் மகா சபையின் முன்னாள் செயலாளர்), எஸ்.திருச்செல்வம், (பத்திரிகையாளர்), எம்.எஸ். அலெக்ஸந்தர் (முன்னாள் விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை) சின்னத்தம்பி வேலாயுதம், பி.ஸே. அன்ரனி ஆகியோரது கட்டுரையகள் தொகுத்துப்பலம் சேர்த்துள்ளன. எழுதப்படாத வரலாறாக இருக்கும் ஈழத்துச் சாதியம், அதற்கெதிரான போராட்டங்களை எழுத்தில் கொண்டுவரும் முயற்சிகளுக்கு இந்த நூலும் நல்லதொரு பங்களிப்புச் செய்கிறது.



North, South and Death.
Bamini Selladurai
297 Pages
Minerva Prees (1999)
315 - 317 Regent Street
London WIR 7YB, England.

வல்வெட்டித்துறையில் பிறந்து சிங்கப்பூர், கனடா, இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் வாழ்ந்து இப்போது அவுஸ்திரேலியாவில் குடியுரிமை பெற்று இருக்கும் பாமினி செல்லத்துரை (30) எழுதியிருக்கும் ஆங்கில நாவல் North, South and Death. இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கும் யுத்தம் பற்றியதே நாவல். "இந்தப்போர் நிற்க வேண்டுமானால்தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆளக் கூடியதாக வரவேண்டும். அல்லது "தமிழர்களையும் சம உரிமையுடன் நடத்துவதற்குச் சிங்களவர்களுக்கு விருப்பம் இருக்கிறது. அவர்களால் அது முடியும் என்ற நம்பிக்கை தமிழர்களுக்கு ஏற்படக்கூடிய நிலை வரவேண்டும்" என்ற இருவழிகளையும் நோக்கி நடைபோடும் பாத்திரங்களை இந்த நாவலில் சந்திக்கலாம்.

இந்த நாவலின் தமிழ் மறு படைப்பு பாமினி செல்லத்துரையின் தந்தை கலாநிதி. சபா. ராஜேந்திரன் அவர்களால் செய்யப்பட்டு சிதறிய சித்தார்த்தன் எனும் தலைப்பில் வெளியாகி உள்ளது. கலாநிதி சபா. ராஜேந்திரன் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார்.

"நாவலில் வருகிற பாத்திரங்களின் எண்ணங்களுடன் பலர் ஒத்துப்போகாமலிருக்கலாம். ஆனால், தற்சமயம் இலங்கையைச் சீரழித்து வரும் இனப்பூசலை உடனடியாக ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்பதில் எல்லோருக்கும் உடன்பாடிருக்கும். தீர்க்க வேண்டுமென்ற உளமார்ந்த குறிக்கோளுடன் இரு தரப்பையும் சேர்ந்த பலரும் முயற்சித்தால் தான் பலன் கிடைக்கும். அப்படியான முயற்சியில் ஈடுபடுவதற்குப் பலரையும் துாண்டுவதற்கு இந்த நாவலும் ஒரு சிறு பங்காற்றுமென நினைக்கிறேன்" என்று சிதறிய சித்தார்த்தனுக்கு எழுதிய முன்னுரையில் கலாநிதி சபா. ராஜேந்திரன் குறிப்பிடுகிறார்.


தெளிவாகவும் இலகு மொழியிலும் ஆர்ப்பாட்டமில்லாமல் நகர்கிறது North, South and Death. பாமினி செல்லத்துரையின் முதலாவது ஆங்கில நாவல்தான் இது என்றாலும் ஆசிரியரின் பார்வை வீச்சும், பகுப்பாய்வும் சீரான முறையில் உணர்வுகளோடு சேர்ந்து வெளியாகியுள்ளன.

தமிழ் ம்க்களின் விடுதலைக்காக அஹிம்சையா அல்லது ஆயுதப்போராட்டமா என்ற தத்தளிப்பு மனோ நிலையிலிருந்து கதையின் நாயகன் ஈஸ்வரன் எப்படி விடுபடுகிறான் என்பதும் அதன் பின்னால் நிகழ்கிற சம்பவங்களும் இயல்பாகக் கட்டவிழ்கின்றன.

சிதறிய சித்தார்த்தன் (410 + VIII பக்கங்கள்)
கோதை பதிப்பகம்
311 - 5 வது குறுக்குத் தெரு
கபாலீசுவரர் நகர், நீலாங்கரை
சென்னை - 600041
இந்தியா.

நன்றி - நூலகத்திட்டம்





# பாராட்டாவிட்டாலும் நாசமாக்காமல் இருங்கள்

சரிநிகர் 163வது இதழில் 'வவுனியா தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்', ஊழல்களின் கோட்டை' எனும் தலைப்பிலும் சரிநிகர் 169வது இதழில் 'வாழ்க்கையோடு விளையாடாதீர்'' எனும் தலைப்பிலும் வெளியான வவுனியா மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தொடர்பான விடயங்கள் தொடர்பாக மாவட் டப் பொறுப்-பாளரும், உதவிப் பணிப்பாளரும் எனும் வகையில் சில விளக்கங்களை எடுத்துக் கூறலாம் என விரும்புகிறேன்.

163வது இதழில் வவுனியா தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஊழல்களின் கோட்டை என் தலைப்பிட்டு வெளியான செய்தியில் எந்தவிதமான ஊழல் நடவடிக்கை-யிலும் நானோ அல்லது மாகாணப் பணிப்பா-ளரோ ஈடுபட்டதாக எவ்வித செய்தியும் அதில் காணப்படவில்லை. மாறாக, சர்வாதிகாரியாக நடப்பதாகவும், கலாசார வேலைத் திட்டத்திற்கு வந்த பணம் திருப்பி அனுப்பப்பட்டதாகவுமே அச் செய்தி தெரிவிக்கின்றது. மேலதிகமாக வவுனியா மாவட்டத்தில் கடமையாற்றிய உத்தி யோகத்தர் ஒருவருடைய பதவி உயர்வினை தடுத்து நிறுத்தியதாக என்மீது குற்றம் சாட்டப் பட்டுள்ளது. இது தொடர்பாக உண்மை நிலையினை தெரிவிப்பது எனது கடமையாகும்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தைப் பொறுத்தவரை பதவியுயர்வு, மாவட்டத்துக்கு வெளியிலான இடமாற்றம் என்பன போன்றன விடயங்களில் தீர்மானம் எடுப்பதும் நடை-முறைப்படுத்துவதும் தலைமை அலுவலகச் செயல்பாடுகள் ஆகும். மேற்படி உத்தியோ கத்தர் மேலதிகாரிகளின் வாய்மூல உத்தரவுக-ளையும் எழுத்துமூல உத்தரவுகளையும் அடிக் கடி புறக்கணித்து நடந்துள்ளார்.

முன் அனுமதி இன்றி லீவுபெறல், கடமை நிலையத்தை விட்டு அனுமதியின்றி செல்லல் போன்ற நடவடிக்கைகளுக்காக வியப்புக்குரிய பதில்களைத் தந்த இந்த உத்தியோகத்தரைக்கூட மன்னித்து புத்திமதிகள் கூறியது சர்வாதிகா-ரத்தனமானதா? பெண்கள் பயிற்சி நிலைய யுவதிகளுக்கு சான்றிதழ் வழங்குவதற்காக பயிற்சியாளர்களிடமிருந்து பணம் அறவிட்டு எனது அனுமதியின்றி ஆங்கிலத்தில் சான்றி தழைப் பிழையாக அடித்து 60க்கும் மேற்பட்ட யுவதிகளை அலைக்களித்ததுடன் எனது முன்னி லையில் அவர்களுக்கு சான்றிதழ் சரியாக அடித்துத் தருவதாக உறுதிகூறி அன்றையதினம் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கத் தவறியவரை மன்னித்தது கூட எனது சர்வாதிகாரத்தனமா? இப்படியான இந்த உத்தியோகத்தரின் நடவடிக்-கையினை மேலும் பொறுக்க முடியாமல் ஒழுக் காற்று நடவடிக்கைக்கு சிபாரிசு செய்தது உதவிப் பணிப்பாளர் என்ற வகையில் நான் எடுத்த காலம் கடந்ததும் இவருக்கு சாதகமானதுமான ஒரு நடவடிக்கையுமாகும். ஆனால், இவருக்கு உரிய இடமாற்றமும், பதவிவிலகலும் தலைமை அலுவலகத்தால் எடுக்கப்பட்ட தீர்மானமாகும். இவரது மேலதிகாரிகளை உதாசீனம் செய்யும் தன்மைக்குச் சான்றாக தலைமை அலுவகத்தில் இருந்து இது தொடர்பாக இவருக்கு வழங்-கப்பட்ட எச்சரிக்கை கடிதங்களின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவிக்கின்றேன்.

அடுத்ததாக கணித விஞ்ஞான பாடங்களை ஊக்குவிப்பதற்காக க.பொ.த.(சா/த) முன்னோ டிப் பரீட்சைகளை நகர்புறப் பாடசாலைகளில் மட்டும் நடாத்தியதான குற்றச்சாட்டுத் தொடர் பாக தெரிவிப்பது என்னவெனில், மேற்படி பரீட்சை விபரம் தலைமை அலுவலகத்தால் அறிவிக்கப்பட்டவுடன் எம்மால் முடிந்தளவுக்கு எமது வளங்களைப் பாவித்து அதிபர்கள் சம்மதித்த பாடசாலைகளில் அவர் கள் கேட்டுக் கொண்ட கேள்விப் பத்திரங்களை வழங்கி பரீட்சைகளை நடாத்தினோம் என்பதை அறியத் தருகின்றேன்.

நிர்வாகப் பணிப்பாளர் வவுனியா வருகை தந்தபோது பௌத்த மதகுருமார் இருவரை மாத்திரம் அழைத்து ஏனைய மதகுருமார்கள் புறக்கணிக்கப்பட்டதாகவும் இளைஞர்களிடம் காழ்ப்புணர்வு ஏற்பட்ட இடமளித்ததாகவும் குறிப்பிட்டது தொடர்பாக தெரிவிப்பது: இந்தக் கூட்டத்திற்கு எந்த ஒரு மதகுருமாரும் என்னால் அழைக்கப்படவில்லை. ஆனால், வவுனியா தெற்கு (சிங்களம்) இளைஞர் கழக, பிரதேச சம்மேளனத்தின் ஆலோசகர் எனும் முறையில் இளைஞர் கழகங்களால் ஈரட்டைப் பெரியகுளம் விகாராதிபதி மட்டும் அழைத்து வரப்பட்டார். அவ்வாறு வருகை தந்தவரை நான் வரவேண் டாம் எனக்கூறுவது முறையற்றது மட்டுமல்ல முடியாத விடயமுமாகும்.

97 கலாசாரப் போட்டியில் பரிசுவென்ற மூன்று குழுவினருக்குரிய சான்றிதழ்கள் பெற்றுக் கொடுக்கப்படவில்லை என்பது தொடர்பாக: பரிசு பெறும் வெற்றியாளர்களுக்கும் பரிசு வழங்கும் தலைமை அலுவலகத்திற்கும் இடையே கடிதத் தொடர்புகள் நடைபெறுவ துண்டு. வவுனியாவில் இருந்து செல்பவர்-களுக்கு தேவையான பிரயாண அனுமதிப்பத்தி ரம் (பாஸ்) வசதிகளை அரசாங்க அதிபர் ஊடாக செய்து கொடுப்பது எனது வழக்க-மாகும். இந்தப் பரிசு வழங்கப்படாமை தொடர் பாக போட்டியாளர்களால் எவ்வித உதவியும் கோரப்படவில்லை என்பதை உண்மையாகும்.

செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் நாடகத்துறை பயிற்சிக்கான பணம் திருப்பி அனுப்பப்பட்ட விடயம் தொடர்பாக: இப் பயிற்சி நெறி 2 1/2 நாட்கள் வதிவிடத்துடன் கூடியது. 50 பங்குபற்றுனர்கள் கலந்து கொள்ளும் வேலைத்திட்டம்.

நாங்கள் இது தொடர்பாக முயற்சி மேற்-கொண்ட போது அரங்கச்செயற்பாட்டுக் குழுவினர் வேறுநிகழ்ச்சிகளுக்காக தங்களது நேரத்தினை ஒதுக்கியுள்ளதாகவும், ஓரிருவர் வந்து நிகழ்ச்சியினை செய்வதற்கு ஒத்துழைத் தாலும் கூட செட்டிகுளத்தில் தங்கி நின்று செயற் படுத்துவதில் அவர்களுக்கு ஏற்பட்ட தவிர்க்க முடியாத நிலைமையும் இதனை நடத்த முடியாத காரணங்களாகும். அவ்வாறு இல்லாவிட்டால் பணம் செலவழிக்க வேண்டும் என்பதற்காக முறையான வளதாரிகள் இல்லாது நிகழ்ச்சித்-திட்டத்தினை நடைபெற்றதாக என்னால் காட்டியிருக்க முடியும். வேலைத்திட்டத்தின் நோக்கம் முழுமையடையாத விதத்தில் பணம் செலவழிக்கப்பட வேண்டும் என்பதற்காக இதனை நடத்த விரும்பாமையால் தான் இப்பணம் திருப்பி அனுப்பப்பட்டது.

மாகாணப் போட்டிகள் நடைபெற்ற பின்பு மாவட்டப் போட்டிகள் வவுனியாவில் நடை பெறுவதற்காகக் கூறப்பட்ட விடயம் தொடர் பாக: மாவட்ட மட்டத்தில் நடாத்தப்படும் போட்டிக்காக எம்மால் கோரப்பட்ட விண்ணப் பங்களின்படி மிகக்குறைந்த அளவு விண்ணப் பங்களே கிடைத்தன. இதனை மேலும் அதிகரிக் கும் நோக்குடன் வெளிக்கள உத்தியோகத்தர் களுக்கு ஆலோசனை வழங்கினேன். அதனடிப் படையில் அப்போட்டிகளை நடத்த முற்பட்ட போது ஒரு தடவை விண்ணப்பித்த போட்டி யாளர்களில் பலர் போட்டிக்கே வரவில்லை. இதனால் அப்போட்டியினை ஒத்திப் போட வேண்டி ஏற்பட்டதுடன் அதனை பிறிதொரு தினத்தில் வைக்க நேரிட்டது. இப்போட்டிக்கும் மாகாண மட்டத்தில் நடைபெற்ற இளைஞர் பரிசளிப்புப் போட்டிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இதன் விளக்கும் 'துளசிதாசனுக்கு' தெரியாததும் அல்ல. என்மீது குற்றம் சுமத்த வேண்டும் என்ற உள்நோக்கில் வெளியிடப்-பட்ட குற்றச்சாட்டே அது.

இதேபோல அதிகாரிகளின் கவலை-யீனத்தாலும் போதுமான செயற்பாட்டாலும் சென்ற ஆண்டு 7 விருதுகள் பெற்ற மாவட்டம் இம்முறை 2 விருதுகளைப் பெற்றது என்ற குற்றச்சாட்டுக்கூட அர்த்தமற்றது.

கடந்த காலங்களில் தமிழ்ப் பகுதியில் இருந்து போட்டியாளர்கள் பங்குபற்றுகை குறைவானதாக இருந்தமையும், இம்முறை மன்னார், யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங் களில் இருந்து போட்டியாளர்கள் பங்குபற்றிய-மையும் இதற்கு ஒரு காரணமாகும். இருந்தும் இம்முறையும் கூட எமக்கு 6 விருதுகள் கிடைத் தமை காழ்ப்புணர்வுடன் பார்க்கும் காமாலைக் கண்களுக்குத் தெரிய நியாயமில்லைத்தான்.

1998ம் ஆண்டு தேசிய மட்ட அறிவிப் பாளர் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட நாகராசா, குகனேஸ்வரசர்மா ஆகியோர் இவ்வதிகாரிகள் அனுமதி பெற்றுத்தராத கார ணத்தினால் வாய்ப்பை இழந்து விட்டனர் என்பது அர்த்தமற்றது. உண்மையில் இப் போட் டிக்கான அழைப்புக் கடிதங்கள் தலைமை அலுவலகத்தில் இருந்து நேரடியாக போட்டி யாளர்களுக்கு அனுப்பப்பட்டன. இதே போன்று தான் ஏனைய போட்டியாளர்களுக்கும் கூட அனுப்பப்பட்டது. ஆனால், போட்டி நடை பெற்ற அன்று தான் இவர்களுக்கு அழைப்புக் கடிதம் கிடைத்ததாக பின்னர் நான் அறிய நேர்ந்தது. இது தொடர்பாக இவ்விருவரும் என்னிடம் நேரடியாகவோ, எழுத்து மூலமோ இதுவரை எந்தவித குற்றச்சாட்டுக்களையும் எடுத்துரைக்கவில்லை. இவ்விருவரது திறமை-களையும் நேரில் அறிந்தவன் என்பது மட்டுமல்ல இவர்களுக்காக தலைநகரில் இயங்கும் தனியார் தமிழ் வானொலி நிலை-யங்களில் இவர்களை இணைப்பதற்குரிய வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருமாறு தலைமை அலுவலகம் ஊடாக நான் கேட்டிருக்கின்றேன். இத்தகைய இளைஞர்களது திறமைகளை தேசிய மட்டத்தில் வெளிக் கொணர வேண்டும் என்ற எண்ணப்பாட்டில்தான் நான் கடமையாற்றி வருகின்றேன்.

இதேபோல இவருக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஒரு அரச அதிபர் ஒருவர் உறவினராக இருப்பதாலும் செல்வாக் கான பின்புலம் இருப்பதாலும் என எனது குடும்பத்தவரைப் பற்றி எழுதியது 'துளசிதாச னின்' கீழ்த்தரமான குணத்தினையே காட்டு கின்றது. பல்வேறு இன்னல்கள், துயரங்கள் மத்தியில் வாழும் வவுனியா இளைஞர்களுக்கு உதவிப்பணிப்பாளர் என்றவகையில் என்னால் மேற்கொண்ட நடவடிக்கைகள் மூலம் கடந்த காலங்களைவிட இளைஞர் அபிவிருத்தி நடவ டிக்கையில் இளைஞர்கள் தம்மை கூடுதலாகவும் ஆர்வமுடனும் ஈடுபடுத்திவரும் நல்ல ஒரு சூழ்நிலையை பாராட்டாவிட்டாலும் நாசமாக்-காமல் இருங்கள் என்பதே ஆகும்.

க. தவராஜா, வவுனியா

## காத்தான்குடி...

சென்றுள்ளனர். இவையாவும் நிறைந்த சனக் கூட்டத்தின் மத்தியிலேயே மிகப் பகிரங்கமாகவே நடைபெற்றுள்ளன.

மறுநாள் இவ்விடயத்தைக் கண்டித்து எதிர்ப்பை வெளிப்படுத்துமுகமாக ஊர் மக்கள் கடையடைப்பு செய்து ஹர்த்தால் அனுஷ்டித்தனர். கடைகளைத் திறக்கச் செய்து ஹர்த்தாலை நிறுத்தி நிலைமையை சுமூக நிலைக்குக் கொண்டு வருவதன் மூலம் நடந்த சம்பவத்தினுடைய பெறுமானத்தைக் குறைப்பதற்கு பொலிசாரும், இராணுவத்தினரும் பகீரதப் பியத்தனங்கள் எடுத்த போதும் அவை வெற்றியளிக்கவில்லை.

மேற்படி தாக்குதலை நடத்திய இராணுவவீரர் மட்டக்களப்பு கல்லடி முகாமிலே உயர் பதவியொன்றை வகிப்பவரென்பதால் இச்சம்பவம் தொடர்பாக சாதாரணமாக எடுக்கப்படும் 'இட மாற்றம்' போன்ற போலியான பம்மாத்து நடவடிக்கைகள் கூட எடுக்கப்படவில்லை. பின்னர் இராணுவ உயரதிகாரிகளுள் ஒருவரான ஸகீ இது விடயத்தில் தலையிட்டு இப்பிரச்சினை யைத் தற்காலிகமாக ஓரளவுக்கு முடிவுக்கு கொண்டு வந்துள்ளதாகத் தெரிகிறது.

இருந்தபோதிலும் கடந்த 07.05.99 அன்று கொலை நிகழ்த்தப்பட்ட இடத்திற்கு மீண்டும் வந்த விஷேட அதிரடிப் படையைச் சேர்ந்த சிலர் அவ்விடத்தில் நின்றிருந்தவர்களிடமும் சில ஆட்டோக் காரர்களிடமும் தாக்கப்பட்ட கடைக்காரரின் மகனிடமும் ஒருவருடைய புகைப்படமொன்றைக் காட்டி 'கொலையாளி இவனா' என விசாரித்துவிட்டுச் சென்றுள்ளனர். ஆக, விடயம் நூறுவீதமாக முடிந்து விடவில்லை என்பது தெளிவாகிறது.

நடந்து முடிந்திருக்கிற, நடந்து கொண்டிருக்கிற இவ்விடயங்களை அவதானிக்கும் போது இராணுவத் தினரின் இந்நடவடிக்கைகள் வேறு ஏதோ நோக்கங்களை அடிப்படையாக வைத்தே நடந்து வருவதாக ஊகிக்க வேண்டியுள்ளது. ஏனெனில், இது போன்ற ஒரு கொலைச் சம்பவத்தில் கொலையாளி யார்? கொலையாளியைக் காட்டித் தர வேண்டும் என்பன போன்ற வினாக்கள் இன்றைய வட கிழக்கின் யுத்தச் சூழ்நிலையில் நகைப்புக்குரியவை. எனவே இது போன்ற இராணுவத்தினருக்கோ அல்லது இராணுவத்துடன் இணைந்து செயற்படும் அமைப் புக்களைச் சேர்ந்த இராணுவத்திற்கு வேண்டப்பட்டவர்களுக்கோ முஸ்லிம் பகுதிகளில் வைத்து ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்தால் அதற்கான விளைவுகளை அப்பகுதி மக்களே அனுபவிக்க வேண்டி வரும். ஆகையால், வருங்காலங்களில் மேற்படி கடைக்காரருக்கு நேர்ந்த கதி தங்களுக்கும் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டுமா னால், இதுபோன்ற கொலைச் சம்ப வங்கள் நடைபெற பொதுமக்கள் அனுமதிக்கக்கூடாது என்பன போன்ற சாத்தியமற்ற நடை முறைகளை முஸ்லிம் மக்களுக்கு எச்சரிக்கையாகத் தெரிவிப்ப தற்காகவே இராணுவத்தினர் இவ்விதம் நடந்து கொண்டுள்ளனர் என எண்ண வேண்டியுள்ளது. தமிழ்ப்பிரதேசங்களில் அன்றாட வாழ்வாகிப் போய் விட்ட இது போன்ற இராணுவத்தினரின் நடவடிக் கைகள் முஸ்லிம் பகுதிகளிலும் இனிமேல் பழக்கத்துக்கு வரலாமென முஸ்லிம் பிரதேச வாசிகள் அச்சம் கொண்டு வருவ தையும் அவதானிக்க முடிகிறது.

காத்தான்குடியைப் பொறுத்த மட்டில் நிலைமை இன்று ஓரளவு சுமுகமான தாகவே உள்ளது. காத்தான்குடிப் பொதுமக்கள் அயலிலுள்ள தமிழ் ஊர்களுக்குச் சென்று வருவதும் தமிழ் மக்கள் முஸ்லிம் ஊர்களுக்குள் சென்று புழங்கித் திரிவதும் இன்று மிகச் சாதாரணமாக நடைபெற்று வருகி றது. எனவே காத்தான் குடியின் எல்லைப் புறங்களில் முன்னர் போல் குறிப்பிடத்தக்க பாதுகாப்பு தற்பொழுது பெரிதாக ஒன்று மில்லை. காத்தான்குடிக்குள் எந்நேரமும் எவரும் வந்து போகக் கூடியளவிற்கே எல்லைகள் திறந்து கிடக்கின்றன. முன்னர் மண் மூடைகளும் காப்பரண்களும் பொலிசாரும் ஊர்காவற் படையினரும் இராணுவத்தினரும் திரண்டிருந்த எல்லை வீதிகள் இன்று இரவுகளில் வெறிச் சோடித் தூர்ந்து போய்க் கிடக்கின்றன. இதுபற்றி காத்தான் குடிப் பொதுக்களோ, பிரமுகர் களோ, அரசியல்வாதிகளோ கணக்கில் கொள்வதில்லை. காரணம் புலிகள் பற்றிய அச்சம் இப்பகுதியில் சற்று நீங்கியுள்ள மையும் நடந்து முடிந்த பழைய குரூர சம்பவங்களை மக்கள் மறந்து கொண்டி ருப்பதுமாகும். அத்துடன் நிலைமைகள் சுமுக நிலைக்கு வரும் போது இயல்பா கவே பாதுகாப்பிற்கான அவசியங்கள் இல்லாமல் போவதும் ஒரு காரணமாகும். இத்தகைய சூழ் நிலையில் இடம் பெற்றிருக்கும் அன்வரின் கொலையானது முக்கியமான ஒரு விடயத்தை முஸ்லிம்கள் மத்தியில் நினைவூட்டுவதாக அமைந்துள்ளது. அதாவது புலிகளினால் எந்த நேரத்திலும் தேவைப்பட்டால் ஊரின் நடுப்பகுதிக்குள் கூட வந்து எப்படிப்பட்ட காரியத்தையும் செய்து விட்டுச் செல்ல முடியும் என்பதே அதுவாகும்.

முஸ்லிம் காங்கிரசைப் பொறுத்த வரையில் இந்த விடயம் என்றில்லை எப்படிப்பட்ட தொரு பாரதூரமான விடயத்திலும் கூட இப்படித்தான் அது நடந்து கொள்ளும் என்றவாறாக ஒரு முடிவற்ற மௌன விரதத்தை அது கடைப்பிடித்து வருகின்றது. ஐ.தே.க. ஆட்சிக்காலங்களில் எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்திருந்த போது அன்று நடைபெற்ற ஒவ்வொரு அடிப் படை உரிமை மீறல்களுக்கெதிராக வும் குறைந்த பட்சம் பாராளு மன்றத்திலாயினும் எதிர்ப்பை வெளிப்படுத்திக் கொண்டிருந்த மு.கா. இன்று பெட்டிப்பாம்பாக அடங்கிப் போயுள்ளது. பொ.ஐ.மு வின் ஆட்சியில் முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்படும் ஒவ்வொரு பொத்தல்களையும் எதைக் கொண்டு மறைக்கலாம் என்று வழி தேடிக்கொண்டிருக்கிறது அது. நமக்கு அபிவிருத்தியோ. சலுகைகளோ வேண்டாம். நமது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று காலமெல்லாம் முழங்கிக் கொண்டிருந்த மு.கா. இன்று ஒரு சாதாரண முஸ்லிம் குடியானவரின் அன்றாட வாழ்க்கைக்கு ஏற்பட்டிருக்கும் பாரிய அச்சுறுத்தலையே மிகச் சுலபமானதாக எடுத்துக் கொண்டு மௌனம் சாதிப்பதானது அது இப்போது முஸ்லிம்களின் கட்சியல்ல. அஷ்ரஃப் என்ற தனி மனிதனின் அரசியல் பிழைப்பு நடத்தும் ஒரு சாதாரண சராசரிக் கட்சியே என்பதை மிகத்தெளிவாக எடுத்துக் காட்டுவதாக உள்ளது. எனவே இனியும் முஸ்லிம்கள் மு.காவை நம்பி வீணே காலம் கழிப்பதை விடுத்து தமது பிரச்சினைகள் தொடர்பில் ஒரு தெளி வான தீர்க்கமான முடிவிற்கு வரவேண்டிய காலம் வந்து விட்டது என்பதையே இந்நிலைப் பாடுகளெல்லாம் அறிவுறுத்துகின்றன.

## கிழக்குப் ...

விபரிப்பதாங் இருந்தது. கௌதம புத்தர், ஹெரகிலிடஸ், ஹெகல், நன்னூலார், தோமஸ் கூன் முதலியோர் வெவ்வேறு துறைகளிலும் மாற்றம் இடம் பெறும்போது பொருத்தமிருப்பின் ஏற்றுக்கொள்ளுதல் இயல்பே என்ற தொனி இவர்களிடம் காணப்பட்டது. காலம் விசும்பு எனும் அளவைக்குள் மாற்றம் இடம் பெறுதல் தவிர்க்க முடியாதது என்பதும் இங்கு அழுத்தப்பட்டது. ஆனால் கருத்தாடலில் மரபுகள் மாற்றப்படக் கூடாதவை. இதனால் எம் அடையாளங்கள் தொலைந்துவிடும் முதலான கோசங்கள் எழுந்தன. மரபு மாற்றம் பற்றிய எண்ணக்கருவினைத் தவறுதலாகப் புரிந்து கொண்டமையே இதற்கு காரணமாக இருக்கலாம்.

எவ்வாறெனினும் இந்நாடகவிழா முழுமையும் பயன்பாடுள்ள ஒன்றே. இந்நாடகவிழா நிகழ்வுகள் முக்கயத்துவம் வாய்ந்தது என்பதனை மறுக்க முனைந் தாலும் கூட நன்மைபயப்பன என்பதனை மறுக்க முனைதல் சாத்தியமில்லை. இதனையே துறைத்தலைவரும் தமது அறிமுகவுரையில் அழுத்தமாக குறிப்பிட்டி ருந்தார். மாணவர்கள் இச் செயல்வாத கற்கையில் ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. கிழக்குப் பல்கலைக்கழக நுன்கலைத்துறையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் கற்பிக்கும் விரிவுரை யாளர்களக்கும் ஆர்வலர், அறிஞர்களுக்கும் பல வாய்ப்புக்களையும் அனுபவங் களையும் வழங்கியிருந்தது என்பதை மறுத்தல் நியாயமில்லை.

## ஈழ சினிமா...

உற்சாக ஒலி கேட்கிறது. ஜீப்பிலிருந்து மறுபடியொரு குழு சிறுவர்கள் அங்கு தங்க வந்திருக்கிறார்கள். முதியவர் உற்சாகத்துடன் எழுந்து 'வாங்கோ.. வாங்கோ..' என இரு கை நீட்டிக் கூப்பிடுகிறார்.

படத்தில் மூன்று பிரேம்களில் ஜன்னல் சட்டங்களைப் பிடித்தபடி திரைமுழுக்க ஒரு இளம் பெண்ணின் முகம் வருகிறது. மூன்றாம் வீட்டில் தங்கியிருக்கும் போராளி ஒருவனைத் தேடிப்போகும் விழிகள். அவன் இறந்த பிறகு கண்ணீரோடு மறுபடியும் அந்த விரிந்த விழிகள். உலகுக்குத் தெரியாமலே பூத்து தனக்குள் உதிரும் பூக்களின் சோகம் அது.

இந்தப்படம் புதிய தமிழ்ச் சினிமாவின் தொடக்கம் என்று என்னால் உறுதியாக சொல்ல முடியும். அற்புதமான டிரீட்மென்ட். இடம், காலம், கடந்து போகும் ஆன்ம எதிர்ப்புணர்வு, சோகம், அன்பு, காதல், நேசம், நம்பிக்கை, மனிதப் புரிதல் போன்றவைகளை இப்படம் தனக்குள் கொண்டிருக்கிறது. போராடும் சமூகங்களிலிருந்து வந்து நான் பார்த்த படங்களில் ஒன்றாக இப்படம் என் நினைவில் இருக்கும், என்றென்றும் நிலைத்திருக்கும்.

மிகுந்த அர்ப்பணிப்பும், உயிர் வாழ்தலும் தொடர்பான இப்படங்களில் சினிமா சாதனம் எனும் அளவில் விமர்சன ரீதியிலான குறைபாடுகளை காண்பது மிகுந்த சர்ச்சைக்குரியது. மிகுந்த மனக்கொந்தளிப்பு, துக்கம் போன்றவற்றுடன் தான் இவ்விமர்சனத்தை நான் மேற் கொண்டேன்.

பலஸ்தீன விடுதலை இயக்க மத்திய குழு உறுப்பினரும், கலாசார விமர்சகரும், இலக்கிய அறிஞருமான எட்வர்ட்ஸேத்தின் மேற்கோ-ளொன்றை இங்கு காட்டுவது பொருந்தும்.

"சந்தேகமில்லாமல் எதிரிக்கு எதிரான பக்கத்தில் நின்றுகொண்டிருந்தால் கூட, போராட்டத்தினிடையில் இருந்தால் கூட, அப்போதும் விமர்சனம் இருக்க வேண்டும். பிரச்சினைகள், சிக்கல்கள், மதிப்பீடுகள் இருக்கு-மானால், போராட்டத்தில் உயிர்கள் சம்பந்தப்பட்டிருக்குமானால் கூட, விமர்சன பூர்வமான பிரக்ஞை இருக்கவேண்டும்."

(The Word, The Test, and the Critic. Faber & Faber)

குறிப்பு: ஈழ சினிமா, சிங்கள சினிமா பற்றிய எனது விபரங்கள் அனைத்தும் Frame Work/ Srilankan Cinema/ Special issue/ 1989/ London இதழிலின்று எடுத்துக் கையாளப் பெற்றது.

Registered as a newspaper in Sri Lanka

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை
"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
- பாரதி
இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.

## வெளியேற்றாதே!

மடுமாதா ஆலயத்தில் தங்கியிருந்த அகதிகளை வெளியேறுமாறு அரச தரப்பினரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அவர்கள் பகுதி பகுதியாக வெளியேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப் அவர்கள் ஆயுதம் தாங்கிய படையினர் தேவாலயப் பகுதிக்குள் நடமாடுவதைத் தடுக்கும்படி பலமுறை வேண்டுகோள் விடுத்தும் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஆனால் யுத்த நெருக்கடிகளின் காரணமாக தேவாலயத்தில் தஞ்சம் புகுந்த அகதிகளை உடனடியாக வெளியேறும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

புலிகளுடனான யுத்தத்தின் மூலமாக பகுதி பகுதியாக அவர்களது ஆதிக்கத்தின் கீழ் இருந்த பகுதிகளை விடுவித்து மக்களுக்கு விடுதலை வழங்கி வருவதாகக். கூறும் அரசாங்கம் வழங்கியுள்ள விடுதலையின் அர்த்தம் இது தானா என்ற கேள்வி அம்மக்களால் எழுப்பப்படுகிறது.

ஆயினும். அவர்களது இந்தக் கேள்விக்கு அரசு தரப்பிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை. தம்மை வெளியேறுமாறு கூறும் இராணுவம் பாதுகாப்பற்ற பகுதிகளான ......... பகுதிகளுக்கு தம்மை அனுப்பி வருவது ஏன் என்றும் இது தமக்கு ஆபத்தானது என்று தாம் கருதுவதாகவும் கூறுகின்றனர்.

ஆனால். யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பாதுகாப்புக்காக அஞ்சித் தஞ்சம் புகுந்த அகதி மக்களின் மனோநிலை பற்றி யாரும் அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. யாழ்.குடாநாட்டில் விடுவிக்கப்படாத பிரதேசங்களில் இராணுவத்தின் 'சிவில்' நிர்வாகம் நடப்பதாகக் கூறப்பட்ட போதும் இந்தச் சிவில் நிர்வாகம் உண்மையில் ஒரு இராணுவத் தர்பாராக நடந்து வருகின்றது என்பது தெளிவு.

சிவில் அதிகாரிகள் இராணுவ அதிகாரிகளின் அபிப்பிராயங்களுக்கும் அனுமதிக்குமாகக் கைகட்டி நிற்க வேண்டிய நிலையே நிலவுகின்றது. விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் நடைபெறும் கைதுகள். காணாமல் போதல்கள். என்பனவற்றிற்கு எந்த உத்தியோகபூர்வப் பதிவுகளும் தெளிவாக வெளியிடப்படுவதில்லை. காணாமல் போனவர்கள் புதைகுழிகளில் சடலங்களாகவும் எலும்புக் கூடுகளாகவும் கிடக்கிறார்கள் என்ற செய்திகளால் குடாநாடு உறைந்து கிடக்கிறது.

நேற்று முன்தினம் பாடசாலை மாணவர்களைக் கூட குடாநாட்டில் இராணுவம் கைது செய்தது என்று குடாநாட்டுப் பாடசாலைகளில் பகிஷ்கரிப்பு நடவடிக்கை ஒன்று நடைபெற்றது.

பெருமளவு மாணவர்கள் கலந்து கொண்ட இந்த பகிஸ்கரிப்பு நடவடிக்கை காரணமாகப் குடாநாட்டுப் பாடசாலைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தன. இந்த லட்சணத்தில் மடுவில் தாம் சிவில் நிர்வாகத்தைக் கொண்டு வரப் போவதாகவும் அங்கு எதிர்வரும் யூலை இரண்டாம் திகதி நடைபெறவிருக்கும் உற்சவத்திற்கு வேண்டிய உதவிகளைச் செய்யப் போவதாகவும் கூறி வருகிறது அரசாங்கம்.

பெருமளவில் வரக்கூடிய யாத்திரிகர்களை சமாளிக்கும் விதத்தில் அங்குள்ள மலகூடங்கள் பிறவசதிகளை செய்து கொடுக்க அரசாங்கம் முன்வந்துள்ளதாக அறிவித்துள்ளது.

ஐ.தே.க. பா.உ. ஜயலத் ஜயவர்த்தனா அவர்கள் அரசாங்கம் மடு தேவாலயத்தை அண்மித்துள்ள பகுதிகளைப் புனருத்தாரணம் செய்வதாயின் நான்கு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செய்திருக்க முடியும் என்று கூறுகிறார்.

தேர்தல் காலப்புழுகுகளில் ஒன்றாகவே இந்த அறிவிப்புக்கள் அறிவிக்கப்படுகின்றன என்பது அவரது வாதம்.

ஆம். ஜனாதிபதி அவர்களால் தேவாலய வளவிற்குள் ஆயுதங்களுடன் பிரவேசிக்க வேண்டாமென்று உத்தரவு பிறப்பிக்க எவ்வளவு நேரம் தேவை?

ஆனால். அவர் அந்த உத்தரவைப் பிறப்பிக்கவில்லை. மலசலகூடங்கள் கட்ட நிதியுதவி செய்வது தான் இன்றுள்ள அவசரப்பணியாகப்படுகிறது அவருக்கு. மக்களின் விடுதலைக்காகவே தாம் யுத்தத்தில் ஈடுபடுவதாகக் கூறி வரும் இந்த அரசாங்கத்தின் யுத்தத்தினால் புலிகள் பாதிக்கப்படுகிறார்களோ இல்லையோ மக்கள் நிச்சயமாகப் பாதிக்கப்படுகிறார்கள். அகதிகளாக வெளியேறி இருப்போரை வெளியேற்றும் நடவடிக்கை எந்த சர்வதேசச் சட்டங்களின் கீழும் நியாயப்படுத்தப்பட முடியாதவை.

ஆனால் எங்கள் அரசாங்கத்திற்குத் தான் சட்டம் பற்றிய அக்கறையே கிடையாதே. ஆக. மக்கள் விரட்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மொத்தத்தில் இந்த மக்களுக்கு அரசாங்கம் பெற்றுத் தருவதாகக் கூறிய விடுதலையில் நடப்பதெல்லாம் இருந்ததை விட மோசமான ஒருநிலைமையே! சட்டியில் இருந்தவர்களை அடுப்பில் தள்ளி வீழ்த்தியிருக்கிறது இந்த அரசாங்கம். அது மக்களுக்குப் பாதுகாப்புத் தருவதாகத தொடங்கிய யுத்தம். யுத்தம் செய்பவர்களது பாதுகாப்புக்காக மக்களையே விரட்டும் அளவுக்குப் போய்விட்டிருக்கிறது.

அரசாங்கம் உடனடியாகவே இந்த மனிதாபிமானமற்ற நடவடிக்கையைக் கைவிட வேண்டும். அங்குள்ள அகதிகள் எந்த நிர்ப்பந்தமும் இன்றி தமது இடங்களுக்குத் திரும்பும் வரை அவர்கள் தமக்குப் பாதுகாப்பு என்று கருதும் இடத்தில் தங்கியிருக்க அனுமதிக்க வேண்டும். கிறிஸ்தவ மக்கள் புனித பிரதேசமாகக் கருதும் தேவாலயப் பிரதேசத்துள் ஆயுதமேந்திய இராணுவத்தினர் நடமாடுவது நிறுத்தப்பட வேண்டும் என்று அங்குள்ள மக்களுடன் சரிநிகரும் சேர்ந்து நின்று குரலெழுப்புகிறது.

## அரசியல் பாயும் எல்லைகள்!

வடக்கு முஸ்லிம் அகதிகளின் நிவாரணவெட்டு தொடர்பான தகவல்கள் சென்ற இதழில் பிரசுரமாகியிருந்தது. 98/3 இலக்க சமூகசேவை அமைச்சின் சுற்றறிக்கையே நிவாரணவெட்டை அமுலாக்கியிருந்தது. எனினும் பின்னர் அது தொடர்பில் அகதி மக்களிடமிருந்து கிளம்பிய எதிர்ப்பலைகள் , குறிப்பாக வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு மேற்கொண்ட முயற்சிகள், அமைச்சர்கள், பா.உக்களுடனான பேச்சுவார்த்தைகள் என்பன ஜனாதிபதி வரை இது தொடர்பான கவனத்தையிட்டுச் சென்றனர்.

இதன் பின்னர் அஷ்ரப், பௌசி ஆகிய அமைச்சர்களை ஆதாரம் காட்டிதொடர்ந்தும் நிவாரணம் வழங்க ஜனாதிபதி பணித்திருப்பதாக சில பத்திரிகைகளில் இவ்வமைச்சர்களின் உத்தியோகபூர்வ செய்தி "ஏஜண்டுகள்" மூலம் செய்திகள் வெளியாகின. இவ்விடயத்தில் இரு அமைச்சர்களிடையே இருந்த போட்டித் தன்மையை தாராளமாக காணவும் முடிந்தது.

எனினும், நிவாரண வெட்டு அமுலாக்கலில் இன்று வரை இச்செய்தி-களாலோ, இச்செய்திகளில் குறிப்பிடப்பட்டிருந்த "அமைச்சர்கள் சந்தித்ததாலோ, ஜனாதிபதி பணிப்புரை விடுத்ததாலோ" எதுவித மாற்றமும் நிகழவில்லை. நிவாரணவெட்டே அமுலாகி வருகிறது. தொடர்ந்து வழங்கவேண்டு-மென்ற சுற்றறிக்கை இன்னும் செயலகங்-களுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. இந்த நிவாரணவெட்டு அமுலாக்கல் தொடர்பில் முஸ்லிம் அரசியல்வாதிகள் தொடர்பில் சில விடயங்களை அவதானிக்கலாம். முதலாவது, தனியாக சமூக சேவை அமைச்சினால் எடுக்கப்படாத இத்தீர்மானத்தின் போது REPPIA வின் சார்பிலும் ஒரு பிரதிநிதி கலந்து-கொண்டிருக்கிறார். இவர் முஸ்லிம் காங்கிரசின் முக்கிய பிரதிநிதி. ஆக இவரின் சம்மதத்தின் பேரிலும் இம் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. பின்னர், அது பற்றி மு.கா. ஒன்றும் தெரியாதது போல் கதைத்தது வெறும் அரசியல் பம்மாத்து. "பிள்ளையைக் கிள்ளி தொட்டிலை ஆட்டுதல்" என்றும் இதற்குச் சொல்லலாம்! அடுத்தது இச்சுற்றறிக்கை அனுப்பப்பட்ட வேளை முஸ்லிம் அரசியல் பிரமுகர்கள் பலர்- பௌசி, அலவி மௌலானா, ரவூப் ஹக்கீம், அஸ்வர்- நாட்டிலில்லை. இதிலும் அரசியல் இருக்கிறது. இருந்தவர்களுக்கு இது பற்றித் தெரியாதிருந்தது. நிவாரணவெட்டு அமுலாகத் தொடங்கி, NMRO மற்றும் வடக்குப் பிரதிநிதிகள் அமைச்சர்களின் கவனத்தைக் கோரியபோது உருப்படியான நடவடிக்கை எடுக்காது கொட்டை எழுத்துக்களில் " நாங்கள் தான் ஜனாதிபதியுடன் கதைத்து முடிவெடுத்தது" என்பதை வெளிக்காட்டுவதில் போட்டி போட்டது.

ஆக, எல்லாம் நடந்தது தான் மிச்சம். பாதிக்கப்பட்டுக் கொண்டிருப்பது வடக்கு முஸ்லிம் அகதிகள் தான்!

இவை போக இது தொடர்பான விளக்கமளிப்புக் கூட்டமொன்றை தங்கள் நிலைப்பாட்டை அகதி மக்களுக்குத் தெரிவிக்கும் முகமாக வ.மு.உ.அ கடந்த 8.5.99 அன்று காலை புத்தளம் ஹிஜ்ரா முகாமில் ஏற்பாடு செய்திருந்தது. இதில் சுற்றுப்புற முகாம்களிலிருந்து பலர் எதிர்ப்ப அட்டைகளைத் தாங்கிய வண்ணமும், கோஷமிட்டும் சமூகமளித்திருந்தனர். எம்.ஆர். நௌஷாத் தலைமையில் இடம் பெற்ற இக் கூட்டத்தில் அகதி முகாம் தலைவர்களும், NMRO செயலாளர், மற்றும் சிலரும் உரையாற்றினர். NMRO செயலாளர் மௌலவி சுபியான், அமைப்பு எடுத்த நடவடிக்கைகளை விளக்கிக் கூறினார். எனினும், இதற்கிடையில் அங்கு வந்த பொலிஸார் கூட்டத்தை நடாத்த விடாது அங்கு சுற்றிக் கொண்டிருந்தனர். இது ஒரு அரசியல்-வாதியின் ஏற்பாடு என்பதை அறிந்த மக்கள் ஆவேசம் கொண்டாலும் ஆசுழு தலைவர் அவர்களைக் கட்டுக்குள் கொண்டு வந்த நிகழ்ச்சியை விரைவாக நடாத்தி முடித்தார்.

அல்லலுறும் அகதிகளை அரசாங்கமும், அதன் பிரதிநிதிகளாய் இருக்கும் சில முஸ்லிம் தலைமைகளும் எவ்வாறு அவதிக்குள்ளாக்குகிறார்கள் என்பதை இச்சம்பவத் தொடர்ச்சியிலிருந்து அறியக் கூடியதாய் இருக்கிறது.

நடந்த மேற்படி கூட்டத்தில, 20ம் திகதிக்குள் நிவாரணம் மீண்டும் வழங்க உத்தரவிடப்பட வேண்டும். அவ்வாறில்லாத பட்சத்தில் ஜனநாயக ரீதியான போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்குள்ளான தலைமைப்பொறுப்பை NMRO எடுக்கவேண்டும். தற்போதைய நிவாரணத் தொகை 99ம் ஆண்டுக்கான வாழ்க்கைச் செலவுக்கேற்ப அதிகரிக்கப்படவேண்டும். NMROவின் கிளையொன்று புத்தளத்தில் திறக்கப்பட வேண்டும் என்பன போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டன.

அரசாங்கமும், முஸ்லிம் அரசியல்வாதிகளும் என்ன முடிவெடுத்-துள்ளார்கள் என்பதை " பாய்ந்து கொடுக்கும்" சுழற்சி நிருபர்களிடமிருந்தல்லாது, மக்கள் செய்தியாளர்களிடமிருந்து அறிந்து கொள்ளவே அனேகர் விரும்புகின்றனர்.

-பாதுஷா

## வெள்ள நிவாரணத்தில் குளறுபடி: எழுத்தாளர் சாகும் வரை உண்ணாவிரதம் !

அண்மையில் பெய்த பெருமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக அம்பாறை மாவட்டத்திலுள்ள பல பிரதேச செயலக பிரிவுகள் பாதிக்கப்பட்டது தெரிந்ததே. இங்குள்ள பாதிக்கப்பட்ட ஒன்பது பிரதேச செயலகங்களுக்கு மொத்தம் ஆறு லட்சத்து நாற்பத்தி ஏழாயிரம் ரூபாய் நிவாரண நிதியாக அரசால் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த நிவாரண நிதி தனக்கு கிடைக்காததால் மனமுடைந்த திருக்கோவிலைச் சேர்ந்த கால் ஊனமுற்ற குலேந்திர ராஜா (50) என்பவரும் அவரது நண்பரான செல்வராஜா என்பவருமாக தமது பிரதேச செயலாளரை விழித்து ஒரு சுவரொட்டிப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

இந்தச் சுவரொட்டியை ஒட்டியவர்கள் யாரென்று இனங்கண்டு கொண்ட பொலிசார் சுவரொட்டி ஒட்டப்பட்டு இரண்டு நாட்களின் பின் அவர்களை ஆயுத முனையில் பிரதேச செயலாளருக்கு எதிராக சுவரொட்டி ஒட்டினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இருவரும் மறு நாள் ( ஏப்ரல் 20, 1999) நீதிமன்றில் நிறுத்தப்பட்ட போது பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் சற்றும் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது. பிணையில் விடுதலையாகி வீடு திரும்பிய இவர்களை மக்கள் மாலையிட்டு "ஊழல் ஒழிக" என்று கோஷமிட்டு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். பட்டாசு கொழுத்தி விடுதலையை கொண்டாடினர். இந்த நிகழ்வு சம்பந்தப்பட்டவர்களுக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்க வேண்டும். பிரதேச செயலாளர் விடுவிக்கப்பட்ட இருவரும் தமது அலுவலகத்தில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்திற்கு கூட்டமாக வந்து கல்லெறிந்து குழப்பம் விளைவித்ததாக அவ்வுடைமைகளை சேதப்படுத்தியதாக பொலிசில் முறைப்பாடொன்றை செய்தார். இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்ட படி அப்படி ஒரு சம்பவம் நடக்கவே இல்லை என்கிறார்கள் ஊர்வலத்தில் பங்கு கொண்டவர்கள். பொலிசார் உடனே அவரது வாகனத்திலேயே சென்று இருவரையும் தாக்கியதுடன் அவர்களை கைது செய்தனர். தாம் கல்வீசவில்லை, எந்தச் சேதமும் விளைவிக்கவும் இல்லை என்று அவர்கள் கூறியும் பொலிஸ் அதைக் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை.

மீண்டும் இவ்விருவரும் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டபோதும் இவர்கள் இருவருக்கும் இம்முறை பிணையில் செல்ல நீதிமன்றம் மறுத்தது. இவர்களை பிணையில் விடவேண்டாம் என்று பொலிஸ் அதிகாரிகள் கோரியதை அடுத்தே நீதிபதி பிணை வழங்க மறுத்துள்ளார். பின்னர் இவர்கள் மே மாதம் 5ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இவரை விடுவிக்க பல்வேறு வழிகளில் முயன்றும் பயனற்றுப் போகவே கால் ஊனமுற்ற குலேந்திரராஜாவின் சகோதரரான எழுத்தாளர் கவியுவன் நீதிமன்றத்தில் தனது சகோதரருக்கு நியாயம் கிடைக்கவேண்டும் எனக் கூறி சாகும் வரை உண்ணாவிரதம் ஒன்றை ஆரம்பித்தார்.

மறுநாள் பிற்பகல் பிரதேச செயலாளர் தம் தவறை ஒப்புக்கொண்டதை அடுத்து இந்த உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. கைது செய்யப்பட்டவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

கேள்வி இதுதான்: வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் எப்போது கிடைக்கும்?

## சரிநிகரின் சந்தாதாரராகுங்கள்!

சரிநிகருக்கு சந்தாதாரர்களைச் சேர்க்கும் ரிக்கற்றுக்களின் முடிவுத்திகதி ஏப்ரல்30ம் திகதியிலிருந்து மே 31க்கு பிற்போடப்பட்டுள்ளது. பரவலாக விற்பனையாகும் இற்றிக்கட்டுக்களை மே 31க்கு முன்பதாகவாங்கி சந்தாதாரராகச் சேர்வதன் மூலம் 33 வீத விலைக்கழிவுச் சலுகையைப் பெற்றுக் கொள்ளலாம்.ரிக்கட் கிடைக்காதவர்கள் கூட இச்சலுகையைப் பெற்றுக்கொள்ளமுடியும். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம். ரூபா 200 க்கான காசோலை அல்லது காசுக்கட்டளையை MIRJE என்ற பெயருக்கு எழுதி அனுப்பி வைக்க வேண்டியது தான். அனுப்ப வேண்டிய முகவரி: விநியோக முகாமையாளர், சரிநிகர் 19/4, 1/1, நாவல வீதி, நுகேகொட.

சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர்

எங்கள் சரிநிகருக்கு உதவுவோம்!

சந்தாதாரராக சேர்ந்து கொள்வோம்!

ஓராண்டு சந்தா

ரூ 200 மட்டுமே!

மே 31 வரை 33% விசேட விலைக் கழிவு

சரிநிகரின் ஓராண்டு சந்தா

300 200

சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர்